ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.
ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு கு. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு கு. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்திரு வைகாசிமீ 11உ (24—5—1931) | மலர் 4

கவனியுங்கள்!

கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனானி சரகுகளும் அசல் தங்க பல்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித தவ் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, தூரி தல்கலிதம், சொற்பனல் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், திரேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லர இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பதரியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹரா சந்தனுதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்த்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தையும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருத்தலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் திரேக காந்தல், திருகிருப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலத்தை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம் இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்டால் இலவசமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

சுத்தகதர்! உயர்ந்தகதர்!!
நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்களிலைரம்பம் முழுமையும் அனுப்பிஞல் கவனிக்கப்படும்.

ஈ. மு. தீ ஈ. ரு. வே. தீ Co.,
கதர் ஸ்டோர்,
சென்னிமலை ரோடு (S I. Ry.)

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது
ஒரு முறை பரீட்சியுங்கள்.
புட்டி 1க்கு ரூ. 1—8—0
டஜன் 1க்கு ரூ. 15—0—0
ஏஜண்டுகள் தேவை
அன்னிய நாட்டார் முன்பணம்
அனுப்புக

சி. பி. சாமி, சித்தமருந்து,
செய்சாலை பழனி S.I.

சுதேசி உடைகளை அபிமானியுங்கள்.

கோடைகாலத்திற்கு ஆரோக்கியமானது.
இந்தியர்களுக்கென்றே ஸ்பெஷலாய்
தயார் செய்யப்பட்டது.

வெள்ளைகாஷ்மீர் பட்டில் தயார்செய்த சன்னக்கம்பிக்கரை
பட்டு வேஷ்டிகள் 8 முழ நீளம் 52'' அகலம்
விலை ரூ. 12—0—0

பனாரஸ் ஸில்க்

பழுபபு (மங்கின) வெள்ளை ஷர்டிங் தான் 7 கெஜ நீளம் 52'' அகலம் ரூ. 15-முதல் 18-வரை.

ஷெ காக்கிகலரில் ஷெ அளவுள்ளது. ரூ. 15-முதல் 18-வரை.

ஷெ கோட்டிங் மிகவும் கோத்தியானது 7 கெஜ நீளம் 52'' அகலம் ரூ. 15-முதல் 18-வரை:

பனாரஸ் உயர்ந்த பட்டுப் புடவைகள்.

எங்கள் புடவை! வீட்டுப்போக்கிஷம்!!

உடல் சாதா, பட்டுசேலை கரை, முகதலை தங்கசரிகைகளினுல் பூவேலைகள் செய்யப்பட்டதும், மேகவர்ணம் ஆரஞ்சு, சிவப்பு, ரோஸ், கத்தரிப்பூ, மயில்கண் மற்றும் விருப்பமுள்ள பல கலர்கள் கிடைக்கும். பார்வைக்கு மிகவும் கோத்தியானது. இந்த சேலை எல்லா ஜாதியினருக்கும் தற்கால நாகரீகத்துக்கும் ஏற்றது.

12 முழம் x 44'' அகலம் புடவை Iக்கு ரூ: 20 to ரூ. 35
16 முழம் x 44'' ,, ,, ,, 30 to ரூ. 50
18 முழம் x 44'' ,, ,, ,, 35 to ரூ. 60

உடல்புட்டா சேலை (பூக்கள் போட்டது) ஜங்லா சேலை (உடல் முழுதும் சரிகையினுல் பூ கொடி செடி வேலைப்பாடுள்ளது) தார்பாணு சேலை (பாவுபட்டினுலும் உண்டை சரிகையினுலும், உடல் முழுவதும் பூ கொடி செடி வேலைப்பாடுள்ளது) ஷெ திணுசுகளில் ஜாக்கெட்டுகளும் கிடைக்கும். மற்றும் பட்டுதுண்டுகள் சாதா திணுசுகளும், புட்டா போட்டதும் கிடைக்கும்.

ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.
எமது விலாசம்:—

V. RAJARAM & Co.,
Silk Merchants
38-203 Ramapura
BENARES CITY.

தயவு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!
முந்துங்கள்!!!
நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன்வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொதுஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்ஹ்ரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)
மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும்
படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவல்லூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

முந்துங்கள்! தபால் படிப்பின் அற்புதம்! முந்துங்கள்!!

1000 மாணவர்கள்

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம். தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல்மெட்ரிக்குலேஷன் கோர்ஸ்களைசொற்பசெலவில் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர், பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம். அல்லது உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர், ஹையர்கிரேட் உபாத்நிமார்கள், குமஸ்தாக்கள் ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. பிராஸ்பெக்டசுக்கு உடனே இரண்டணு ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,
அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
ஆறுமுகநேரி, S. I. R.

"GENUINE KHADDAR"
சுத்தமான கதர்.

அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் நற்சாட்சிப் பத்திரம் பெற்றது.

எங்களிடம் கதரில் எல்லாத் திணுசுகளும் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும். அட்வான்சுடன் ஆர்டரை அனுப்பவும்.

விலாசம்:—
எம். சென்னியப்ப முதலியார்,
கதர் ஸ்டோர், திருப்பூர், S.I.R.

பஞ்சமா பாதகங்கள்

எவை?
என் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?
இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானுல் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணு ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா).

இராமாயண நீதி.

(கைவல்யம்.)

புராணங்களையே சமயசாஸ்திரங்களாகக் கொண்டும் அது தெய்வீகத்தால் ஏற்பட்டதென்றும் அதிலுள்ளவர்கள் தெய்வத்தின் அவதாரங்களென்றும், அவர்கள் நடந்தும் சொல்லியும் வந்தவைகளைப் பெரியவர்கள் எழுதிவைத்திருக்கின்றார்களென்றும், அதைப்பின்பற்றி சமூகம் நடக்கவேண்டுமென்றும் அநேக காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது.

இவ்விதமே நம்பி நடந்துவர்த ஜன சமூகம் ஒற்றுமையடையவில்லை, ஒத்துழைழுடியவில்லை, முன்னேற்றமடையவில்லை. அவ்வழியும் சமய உண்மைக்கும், உலகநியாயத்திற்கும், தர்மநீதிக்கும், தெய்வநிச்சயத்திற்கும் சரியென்று சொல்ல முடியாமலும் போய் விட்டது அதனுல்தான் அதிலுள்ள தெய்வாம்சங்களும். ஜாதி உரிமைகளும் தள்ளப்பட வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம் சொல்லி வருகிறது. அதைக்கண்டுபலர் கோபித்தார்கள். வருத்தப்பட்டார்கள், அதைப்பற்றி படிக்காமல், ஆலோசிக்காமல் அதை விரோதிப்பவர்கள் சொல்லுவதைக் கேட்டு வெறுத்தார்கள். ஓவியமும், காவியமும் போய்விடுமென்றார்கள். ஓவியன்பாடும் கற்பனை சக்தியுமுடையதாயிற்றே என்றார்கள். புராணத்தைப் பொய்யென்றுணர்த்தவர்களும், புராணத்தை களுக்கு அடிமைபட்ட பிரஜை ஒழியாததினால் விடுதலையடைய வில்லை. பார்ப்பனாலோ புராணத்தில் உள்ள தெய்வகற்பனை வெளிப்பட்டால் ஜாதி உரிமை போய்விடுமே யென்னும் கவலையால் ஆங்காங்கு அவர்களால் கூடுமானவரைக் செய்கிறார்கள். ஆதிரியாக விருக்கும் பார்ப்பனர்கள் இராமாயணத்தின் தெய்வாம்சத்தையும் நீதியையும் எழுதிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அதில் சீதையை மயக்கரையும், தலையையும் பிடித்துத் தத் தூக்கிக்கொண்டு போன வால் மீகி ராமாயணத்தைப்பற்றி யெழுதவ வில்லை. பண்ணசாலையோடி பூமியைத் தோண்டி யெடுத்துப்போன கம்பராமாயணத்தைப் பற்றியே எழுதுகிறார்கள்.

மகாகர்களே! வாரம் ஒருதாம் பத்திரிகையை நிறப்புவதற்கு நான் எழுதுவதல்ல. புராணக்களிலுள்ள வரைகளில் தெய்வாம்ச மிருக்கிறதென்றும், நீதியிருக்கிறதென்றும் சனங்களிடைப் பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகச் சொல்லப்படும் நீதியை எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே புராணங்களைப்பற்றி யெழுதுகிறேன். "புராணமெல்லாம் பொய்தானே. அதிலென்ன தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது" என்று அதிவேகமாக உமதள் மனம் சொல்லிவிடலாம். விஷயம் அப்படியல்ல. இன்றும் அதைப்பற்றின தந்திரங்களும், எமாற்றுகளும், சமயோசிதங்களும் தெரியாத பண்டிதர்கள் மிகச்சுருக்கம். அதை ஒரு சிலபண்டிதர்கள் தெரிந்திருந்தாலும்பார்ப்பார ஆதிக்கத்திற்குப்பயந்திருக்கின்றார்கள். அவ்விதம் பயப்படையேதக்களிருக்கின்றன. நம்மில்படித்தவர்களின் அலட்சியமும் பணக்காரர்களின் கவலைக்குறைவும் பொது ஜனங்களின் புத்தி தெளிவில்லாமையும் பயத்திற்குக் காரணக்களாக விருக்கின்றன.

மனிதர்கள் ஒன்று சேர்ந்து யோசனைபண்ணி நாம் யென்றைக்கும் பிரிவுபட்டு நிற்கவழிகள் தேடியதை நமது நாட்டில் முன்கண்டது போல வே இப்பொழுதும் நாம் பிரிவுபட்டு நிற்கவும் பார்ப்பானுக்கு மிகவும்இனிமையாய்த்தோன்றிய சுதந்திரக்களை நாம் அனுபவியாமல் தடுக்கவும் சர்வ சாதாரணமாக வழக்கத்தக்கஉரிமைகளுக்கு பிறப்புரிமை யென்று பெயர் சூட்டி மானுஷீத்தை அவமானப் படுத்தி யிருப்பதும் அண்ணமலைக் சலாசாலையின் கல்வியைப் பற்றி சுவனிப்பவர்களுக்கு விளங்கும். இன்றும்நம படிப்பிற்குப் பார்ப்பனர்களேவிநி கர்த்தாவாக விருக்கின்றார்கள். அவர்கள் போஷனையிலேயே படிப்பை நீர்ணயிக்க வேண்டியிருக்கிறது. அவ்வழிக்கு விரோதம் சொல்லுகிறவர்கள் கீழேதள்ளப்படுகிறார்கள். இதைத்தெரிந்து கொள்ள பிரபுக்களுக்குச் சக்தியில்லை. சன சமூகத்திற்குரிய வுயம் விளக்குவதில்லை. தன் சுகத்தைவிட்டு உலகத்திற்குஉண்மைகளைச் சொல்லப் பண்டிதர்கள் பயப்படுகிறார்கள். நிதியமாக நிதி நியாயங்கள் வெளியில் வந்தாலும் சமயத்தாலும், தெய்வத்தாலும் பார்ப்பனர்களின் சுயபோஜித சாமர்த்தியத்தாலும் அந்த உண்மைகள்மறைக்கப் படுகின்றன. இவைகளைத்தையிரியமாக எடுத்துச் சொல்லும் சுயமரியாதை இயக்கத்தை சாத்திகமென்று சொல்லி விடுகிறார்கள். இவைவிட்டு இலதை யேற்றுக்கொள்ளுகிற்ற ந் தெளிவாகச் சொல்லலாமென்றால் சுயமரியாதைக்காலர் ஒத்துக்கொள்வதில்லை. இனி எடுத்தவிஷயத்தை கனிப்போம்.

கம்ப ராமாயண நீதி சாரமென்று திருச்சி தேசிய கலாசாலை ஆரிரியர் எல். வி. வரதராஜ அய்ங்காரவர்கள் எழுதிக்கொண்டு வருகிறார். அதிலுள்ள ஒரு நீதியைக் கவனிப்போம் அதற்குமுன் சில விஷயங்களை உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறேன்.

விருத்திரா சூரன் பெண் ஜாதி விருதையின் கற்பை விஷ்ணு கெடுத்தசாபத்தினால் இராமாயண முண்டாயிற்றென்றும் விஷ்ணுவும் லெட்சுமியும் வைகுண்டத்தில் தங்கள் மாளிகை படுக்கை அறையில் விளையாடிக்கொண்டிருக்கையில் அதனுள் போக நினைத்த ஜனகாதி ரிஷிகளை காவற்காரர்களான விஜயன் ஜெயன் என்கிற அரண்மனைக்காவற்காரர்கள் தடுத்ததினால் பிராமண உத்தமர்களான முனிவர்களால் ஏற்பட்ட சாபத்தினால் இராமாயண முண்டாயிற்றென்றும் கதை வைவ வைணவ புராணங்கள் கூறுகின்றன. இந்த இராமாயணத்தை பிர்மா நூறு கோடி சுலோகங்களாக செய்தாரென்றும் அவை தெய்வலோகம், நாகர்லோகம், பூலோகங்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டதென்றும் அதை வைத்துக்கொண்டு பலரிஷிகள் ராமர் கதையை சசெய்தார்கள். என்றும் அதில் வால்மீகி இராமாயணம் முக்கியமானது என்றும் அதைக்கம்பர் பல விஷயத்தைமாற்றி கம்பஇராமாயணம் செய்தார் என்றும் சொல்லப்படுவதெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

வால்மீகி இராமாயணத்தை மொழிபெயர்த்த ஒரு அய்யங்கார் ஆங்கிலப் பார்ப்பார்கள் தவிர இராமாயணத்தை யாரும் மொழிபெயர்க்க அருகதை உடையவர்களல்ல வென்று தமது மொழி பெயர்ப்பு இராமாயணத்திலேயே எழுதியிருக்கிறார். இன்னொரு அய்யங்கார் கம்பராமாயண நீதிசாரமென்று எழுதிக்கொண்டு வருகிறார். இவர்கள் இரண்டு பேர்களின் கருத்தும் உங்களுக்குத்தெரிந்ததுதான்.

விபூஷணன் சரணாகதியடைய ராமரிடம் வந்தார். ராமர் சுக்ரீவனிடம் கலந்தேபோய் அழைத்துவாவென்று அனுப்பினார். சுக்ரீவன் விபூஷணனை போலவே. விபூஷணனும் சுக்ரீவனும் ஒருவரையொருவர் கட்டியணைத்து மகிழ்ந்த சக்கர்ப்பத்தில் கம்பர் சொன்ன கவியையும், அதிலுள்ள நீதியையும் ஆசிரிய அய்யர் எடுத்தெழுதியிருக்கிறார். பிரசுத்ததாயில்லாத அசுத்தத்தன் ஒருவரோடொருவர் தோகைகளும் நெறுவிப்பதினைந்தும் மனமொத்த நிகேதித ராகமாட்டார்கள். இருபத்தாண்போன்ற தோள்களை உடையவர்களான கந்தர்வரும். விபூஷணனும் கண்டமாத்திரத்தில் ஒருவரை ஒருவர் மனக்கலத்து ஒருதாளில் சேர்ந்திருக்கிற இசையும் பசலையும் போல ஆலிங்கனம் செய்துகொண்டார்கள் என்ற கம்பர் கவி அமைத்ததையும், நீதியையும் சனசமூகங்களுக்குச் சொல்லுகிறார். அதிலுள்ள நீதியை இதில் நாம் கவனிப்போம்.

இராமாயணக்கதையின் மூல காரணத்தை கவனித்தால் விஷ்ணுவின் பெரும்குற்றமான கடக்கையும் ஜனகாதி மகாரிஷிகளான உத்தமபிராமணர்களின் எந்த உலக சனசமூகங்களும் ஒத்துக்கொள்ளாத மரியாதை இல்லாத நடக்கையும் அக்ரமமான கோபமும் காரணங்களாக விருக்கையில் இராமாயணத்தில் என்ன நீதியிருக்கும். ஒருவன் பெண்ஜாதியை மோகிப்பது. அவள் ஒத்துக்கொள்ளாமல்போனால் அவள் புருஷனை மைத்துனனை விட்டு மோசத்தால் கொலைசெய்து அவன்வேஷம் போட்டு அந்தப்பெண்ணின் கற்பை அழிப்பதானது நீதிசாரக்கதைக்குவித்தா? அதைச் செய்தது தெய்வமென்றாலும் நீதிசாரமாகுமா? சைவர்கள் பூசிக்கும் புராணத்தில் இந்த நீதியை ஏற்றிக்கொண்டிருப்பதினால்தான் இராமாயணத்தைக்குற்றம் சொன்னால் சைவர்களும் சண்டைக்கு வருகிறார்களோ?

பெண்ஜாதி புருடனிருக்கும் தனியரைக்குப் போகலாமா? மறுத்தாலும் கோபிக்கலாமோ? மறுத்த வேலைக்காரனை தண்டிக்கலாமா? அவரவரை எஜமானனும் ஒத்துக் கொள்ளலாமா? இது எந்த நாட்டு வழக்கம்? எந்தஜன சமூகம் சம்மதப்படும்? பெரிய பெரிய உத்தம பிராமண முனிவர்கள் நீதியாகவிருந்தாலும் வைணவர்கள் சம்மதப்படுவார்களா? தெய்வபுருடன் பெண்ஜாதியும் ஒரு அறையில் ஒன்றாகப் பட்டியில் படுத்துக் கொண்டிருக்கையில்கூட பிராமணனை, தடுத்தவன் பட்டபாட்டைத் தெரிந்தா கொண்டு சனசமூகம் நடக்கவேண்டுமென்ற நீதியைத்தான் சனசமூகம் இராமாயணத்தில் முதல் முதல் ஒதுக்கிதொள்ள வேண்டுமா? இதுதான் மகாவிஷ்ணுவும், முனிவர்களும் நடந்துகாட்டின நீதி! அதிருக்கட்டும். சூரியனுக்கு மனை குரங்கு, பிர்மாவிற்குப் பேரன் ராகுதனுமிருப்பார்களோ? அதுவுமிருக்கட்டும்.

அண்ணனைக்கொன்று ராஜியத்தை அனுபவிப்பவனை அண்ணனைக் கொன்று ராஜியத்தை அனுபவிக்க வருகிறவன் கண்டால் கட்டி அணைத்து நிகேதிக்கபட மாட்டார்களோ? பெண் மக்கள் லட்சணமிதிலென்ன விருக்கிறது. இரண்டு பேர்களும் ஆலோகியத்தலத்தில் முன்னனியில் நிற்பவர்கள். திருடர்கள் முனபின் அறியாதவர்களாக விருந்தாலும் சமயத்தில் ஜாடையில் உயிரை ஒளறுபடித்தி நடப்பது உலகில் கானகையில் இரண்டு துரோகிகளும் இரவும், பகலுமானதில் என்ன நீதியிருக்கிறது? இராவணன் பல உலகத்து பெண்களைப் பலநாளாக நிறை கொண்டு வந்தது விபூஷணனுக்குத் தெரியுமே. வாலியைக்கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் ராமனால் வந்ததென்றதெரிந்தவுடன் சீதையைச் சிறை கொண்டு வந்ததைக் காரணம் காட்டி ராமனிடம் வந்து அண்ணனைக் கொன்று ராஜியத்தை அனுபவிக்கலாமோ? விபூஷணனுக்குத் தகப்பனைத் தெரியாது. தகப்பனைப்போல் தயவுதாட்சண்யமின்றி தானே விபூஷணனைக் காப்பாற்றினது. இளைய பெண்ஜாதியின்

தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க.

அவர்கள் என்ன பேசுகிறார்கள்?

(அப்பாதுரை)

மூடபக்தி, மூட்டாள் நம்பிக்கை இரண்டும் ஒரு பொருளே யாகும். தக்கசான்றுகள் இருப்பினும் இல்லாதொழியினும் பக்தியின் காரணமாக நம்பிவிடுதல், ஒரு அர்த்தமற்ற கதையை மற்றொரு அர்த்தமற்ற கதையைக்கொண்டு திர்மானித்தாய்புதல், காரணகாரியங்களுடைய முறையை அறிந்தாருயாது முறை தவரிப்பேசுதல். இயற்கைக்கு மாறுக எண்ணுதல், சத்தையும், சக்தியையும் வேறாக எண்ணிப்பேசுதல்; "கடவுள் அற்புதங்களே"யும் கனவுகளேயும், ஜோதிடங்களேயும், "அதிர்ஷ்டம்" துரதிர்ஷ்டம் என்பனவைகளேயும் நம்புதல், இயற்கைக்கு மாறுகவும், மேம்பாடாகவும் பிரிதொன்று இருப்பதாகக் கருதுதல், ஆகிய இவைகளே மூடநம்பிக்கையின் பாற் பட்டதாகும். மூடநம்பிக்கையின் பொருளாகும்.

ஃஃ ஃஃ

மூடபக்தியும், நம்பிக்கையும் அறியாமையின் பால் தோன்றியவைகளேயாகும். இவை வீணான எண்ணைகளாக் வீண்வாழ்வு நடாத்தச் செய்யும். இவைவாழ்க்கையை இருள் சூழ்ந்ததாக்கப் பண்ணும்.

ஃஃ ஃஃ

ஒரு காகம் வீட்டின் முன் உட்கார்ந்து கரைந்தவுடனே, வீட்டுக்கு உற்றார் வரப்போகிறார்கள் எனத்தீர்மானிக்கிறார்கள். காகத்துக்கு இத்தகைய சக்தி யிருக்கக்கூடுமோ?

ஃஃ ஃஃ

ஒருவருக்கு விக்கல் எடுத்தவுடனே, பிறர் நம்மை நினைப்பதாகக் கூறுகிறார்கள். ஒருவருக்குப் பொறைபோனவுடனே, பிறர்நம்மைக் காய்வதாக (வைவதாக) எண்ணுகிறார்கள்.

ஃஃ ஃஃ

கையிலிருந்து ஒரு காசு தவறிக் கீழே விழுந்தவுடனே இலாபம் வரப்போவதாகக் கூறுகிறார்கள்.

ஃஃ ஃஃ

ஒரு காரியம் செய்ய எண்ணும் போதோ, அல்லது ஒரு காரியத்தை துவக்கும் போதோ யாராவது தும்மினால் சகுனம் கெட்டதாகக் கூறுகிறார்கள்.

ஃஃ ஃஃ

ஒருவன் புறப்படும்போது பூனை குறுக்கே ஓடினாலும், வீட்டின் விட்டம் தலையில் தட்டினாலும், வாசல் கல் காலில் பட்டாலும் காரியத் தடங்கல் ஏற்பட்டு விட்டதாக எண்ணுகிறார்கள்.

ஃஃ ஃஃ

மற்றும் நாவிதன், விறகுச்சுமை, ஒற்றைப் பார்ப்பான், எண்ணைக்குடம் எல்லாம் சகுனத்தடைகளாகவே விளங்குகின்றன.

ஃஃ ஃஃ

ஒரு ஊருக்குப் பிரயாணம் செய்யும்போது காகம் இடமிருந்து வலம் போனாலும், வலதுபுறமிருந்து இடதுபுறமாகப் பறந்தாலும், அதற்கு நன்மை, தீமையெனப் பொருள் கூறுகிறார்கள்.

ஃஃ ஃஃ

போதாக்குறைக்குப் பொல்லாத நேரங்களும், ராகு, குளிகை காலங்களும் பார்ப்பனன் பஞ்சாங்கத்தில் பொதிந்து கிடக்கின்றன.

ஃஃ ஃஃ

பொன் கிடைத்தாலும்புதன்கிடைக்காதாம்! செவ்வாய் தோஷமாம்! வெள்ளிக்கிழமை வீணுக்குவைத்த நேரத்தில் பிறரிடமிருந்து பொருள் பெறலாம். ஆனால் கொடுத்தல் கூடாது. எனெனில் லட்சுமி போய் விடுவாளாம்!

ஃஃ ஃஃ

ஒருவன்வாழ்க்கையில்ஷேமமடைவதற்கும், தன்பமடைவதற்கும் அவன் வளர்த்தும் மாடு, எருது, குதிரையாகியவைகளின் சுழிகளே காரணமாம். ஹா! ஹா! எவ்வளவு விந்தை. மிருகங்களின் சுழிகள் மனிதனின் வாழ்க்கையை நிச்சயிக்கச்சக்தி வாய்ந்திருக்கின்றன!

ஃஃ ஃஃ

பச்சைக்கல் மோதிரத்தின் மர்மம் பலவாருகக் கூறப்படுகின்றது.

ஃஃ ஃஃ

ஜப்பானிலிருந்து வரும் கருப்புப் பட்டுக்கயிற்றில் ஏழு முடிபோட்டு, அதைக் காசிக்கயிறென்று கரத்தில் கட்டிக்கொண்டால் சகல பிணிகளும் போய்விடுமாம்!

ஃஃ ஃஃ

வீட்டிலிருந்து வெளியே எடுத்துச் செல்லும் மாமிச பதார்த்தத்தில் ஒரு துண்டு அடுப்புகரியைப் போட்டுச் சென்றால் பேய் அணுகாதாம்! பருவமடைந்த கன்னிகை வீட்டினின்று வெளியே செல்லும்போது ஒரு இரும்பு மயிர் கோதியைக் கையில் எடுத்துச் சென்றால் பேய்கள் விரண்டோடுமாம்!

ஃஃ ஃஃ

இவையும், இன்னும் இவைபோன்ற பலவும் அறியாமை என்ற நிலத்தில் விதைக்கப்பட்ட வித்துக்களாகும். தன் அறிவால் ஆராய்ந்து பார்ப்பவனுக்கு இவைகளெல்லாம், கற்பனை உண்மையும் உடையவையல்ல என்பது நன்கு புலனாகும். நமது வாழ்க்கையின் போக்கை பறவைகள் பறப்பதும், கத்துவதும் நிச்சயப்படுத்த முடியாதென்ற புத்தியுள்ளவர்க்குத் தெரியாமல் போகாது.

ஃஃ ஃஃ

நமது வாழ்க்கையின் போக்கை மிருகங்களின் மேலிருக்கும் ரோமச் சுழிகளாலும், வண்ணன், நாவிதன், பார்ப்பனன் போன்ற தொழிலாளிகள் சுபாபமாக நடமாடுதலாலும், கற்களாலும், கயிற்றாலும், இரும்பாலும் சுல்வாலும், விட்டத்தாலும், மரச் சட்டத்தாலும் நிச்சயப்படுத்த முடியாதென்பதை அறிவினால் ஆராய்ந்து பார்ப்பவன் தெரிந்து கொள்வான்.

ஃஃ ஃஃ

வியாழனேப்போன்றே பிரதிவெள்ளியும், வெள்ளியைப்போன்றே சனியாதிய ஏழு நாட்களும் இருக்கின்றனவே யன்றி, ஒருநாள் 'சுகதி'க்கு ஏற்ற தென்றும், பிறநாள் அசுகமியை விளக்குமென்றும் புத்தியுள்ளவன் ஒப்புக்கொள்ள முடியாது.

ஃஃ ஃஃ

"கெட்ட காற்றும்" "பிசாசும்" இருப்பதாக, எந்த அறிவாளியும், ஆலோசித்துப் பார்ப்பவனும், தையரியவானும் ஒப்புக்கொள்ள மாட்டான். பிசாசு என்பது வெறும் மனே எண்ணமே என்பதும், பயமும் அறியாமையும் குடிகொண்ட மக்களின் நம்பிக்கையே என்பதும், குழந்தியும், தந்திரமும் நிறைந்த மந்திரவாதிகளின் செய்கையே என்பதும் அனைவருக்கு நன்றாய்த் தெரியும்.

ஃஃ ஃஃ

கடவுள் ஒருவர் இருப்பது எவ்வளவு நிச்சயமற்றதோ பேய் இருப்பதும் அவ்வளவு நிச்சயமற்றதென நல்லறிவு உடையவனுக்குத் தெரியும். பேய் என்பது கடவுளுக்கு விரோதி என்பதாகக் கூறப்படுவதால் கடவுள் தனக்கொரு விரோதியைப்படைத்திருக்க முடியாது. கடவுள் பிசாசுகளைப்படைத்துவிட்டு, பின்னர் அவர்களே விறட்டுவதற்காகத் தமது ஒரே புதல்வனே அனுப்பியிருந்ததாகக் கூறப்படும் விவிலிய வேதக்கூற்றை எந்த அறிவாளியும் எற்றுக்கொள்ள முடியாது.

ஃஃ ஃஃ

கடவுளும், பேயும், முறையே நன்மை தீமையாகிய இரண்டு குணங்களுக்கு மனதால் உருவகமாக்கப்பட்ட கற்பனைகளே யன்றி வேறல்ல.

ஃஃ ஃஃ

கடவுளைப்பற்றியும், கடவுள் படைப்பைப்பற்றியும், கடவுள் படைப்பின் உத்தேசத்தைப்பற்றியும், இவ்வுலகின் ஆரம்பத்தைப் பற்றியும், அதன் முடிவைப்பற்றியும், மோட்சம் என்ற மேலுலகத்தைப்பற்றியும் நரகம் என்ற கீழுலகத்தைப் பற்றியும் வெகு விஸ்தாரமாகப் பேசும் சமய வாதிகட்கு, நமது கண்ணின் முன்னே தோன்றும் ஒரு புல்பத்தில் மனம் எப்படி எற்படுகிறதென்று விஸ்தரித்துக்கூற முடியவில்லை. ஆதலால் உண்மைபேச விரும்புவோன் கடவுளைப்பற்றித் தனக்கொன்றும் தெரியாதெனக் கூறிவிடுதலே சாலச் சிறப்புடைத்தாம்.

ஃஃ ஃஃ

கடவுள் இருக்கிறார் என்றால் அவர் நல்லவர் என்றோ, கெட்டவர் என்றோ நமக்கெப்படித் தெரியும்? அவர் நல்லவராஞல், தான், நல்லவனாயிருக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு எப்படி உண்டாயிற்று?

ஃஃ ஃஃ

கடவுளுக்கு ஆசை என்பதில்லை. குணம் என்பதில்லை. அவர் என்றும் மாறுதலர். எப்போதும் ஒன்றே போல் இருப்பவர் என்பது உண்மையானால், அவரை என் பிரார்த்தித்து இதைக்கொடு, அதைக்கொடு என்று கேட்க வேண்டும்? என்றும் மாறாமல் அப்படியே கல்லுப்போலிருப்பவர் எப்படி உங்கள், அர்ச்சனைக்கும், பிரார்த்தனைக்கும் இரங்குவார்? சற்று விஸ்தரித்துக் கூறுங்கள்.

ஃஃ ஃஃ

நீங்கள் எத்தனையோ காலமாக, நோய்நொடிகள், பிளேக், வாந்திபேதிகள், கொடிய வைசூரி, விஷக்காய்ச்சி, கடுங்காற்று, வெள்ளம், பூகம்பம், எரிமலை, பூமி அதிர்ச்சிகள் எல்லாம் தொலையவேண்டுமென உங்கள் கடவுளைப்பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டதாகச் சொல்கிறீர்கள். அவர் நினைத்தாலும், நீர் எண்ணினாலும், யாதொரு பயனுமில்லாமல் என்றும் ஒன்றுபோலவே இருப்பதால்தான், உங்கள் பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்க்க வில்லையென்று உங்கள் மந்த புத்தியில் இன்னும் என்படவில்லை? எத்தனையோ மனிதர்கள் எத்தனையோ காலமாக எத்தனையோ வேண்டியும் இன்னும் இக்கொடுமைகள் இப்பூவுலகில் இருந்தே வருகின்றன.

ஃஃ ஃஃ

கடவுளே என் புகழ்கிறீர்கள்? அவர் சந்திரனையும், சூரியனையும் கொடுத்ததற்காக, நல்ல மழையையும் விளைவையும் ஏற்படுத்தியதற்காக. அல்லவா? அப்படியானால் பிளேக்கையும், பஞ்சத்தையும் உண்டாக்கும்போது அவரை என் நீங்கள் புகழ்வதில்லை? கடவுள்தான் கல்லுவராயிற்றே! "கடவுளே! பிளேக் அனுப்பியதற்காக வந்தனம். வைசூரி வந்ததற்காக வணங்குகிறேம். வெள்ளமும்வந்து எங்கள் ஊரை நாசப்படுத்தியதற்காக உன்னைப் போற்றுகிறேம்" என்று நீங்கள் என் கூறவில்லை.

ஃஃ ஃஃ

இக்கொடுமைகள் வந்தபோது மட்டும், ஐயோ! அப்பா! சாமி! யென்று என் வாய் வயிறுமாய்ப் போட்டுக்கொண்டு ஊளையிடுகிறீர்கள்? கடவுள்தான் எல்லாம் செய்பவர் ஆயிற்றே! எல்லாம் கொடுப்பவர் ஆயிற்றே! பின்னை பிறந்தவுடன் கொண்டாட்டம். பழனியாண்டவன் பெயரையே தன்பின்னைக்கிடுதல், காவடி எடு

(தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க)

காஞ்சிபுரத்தில்
செங்குந்தர் மகாநாடு.

மகாநாட்டைத்துவக்கினசுயமரியாதை வீரர்
திரு. ஆ. வே. முத்தையா அவர்கள்
சொற்பொழிவு.

16ந்தேதி காலை 8-30 மணிக்குத் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டுத்தலைவரை வரவேற்புக் கமிட்டியினர் அதி விமரிசையுடன் வரவேற்றனர். மகாநாடு சரியாக காலை 3 மணிக்கு ஆரம்பமாயிற்று. கோயம்புத்தூர் திரு. வா. சே. செங்கோட்டையா அவர்கள் மகாநாட்டுக்கொடியை உயர்த்தி வைத்தார்.

மகாநாடு ஆரம்பம்.

திரு. ஆ. வே. முத்தையா அவர்கள் ஆரபித்து வைத்தார்.

அதன்பின் புதுச்சேரி பிரஞ்சு அரசாங்க! பிரதம அமைச்சர் திரு. ஆ. வே. முத்தையா அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியதாவது:—

உங்களுடைய மகாநாட்டை, செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டைத் திறந்துவைக்கும் பணியை எனக்கிட்ட நண்பர்கள், என் இவனுக்கிந்தச் சமயத்தை யளித்தோமென எண்ணக் கூடுமென்றுசந்தேகிக்கிறேன். எனது கடனமையை ஆற்றுதலே எனதுரிமையாகக்கொண்டிருப்பவனுதலால் எனது மனப்போக்கை அறிஞர்களாம் உங்களுக்குத் தெரியப்படுத்தாமலிருக்க முடியவில்லை.

என்னபிப்பிராயங்களுக்கு உத்திரவாதியான் மாத்திரமே. அவைகள் தங்களுக்குத் தப்பாகதோன்றினால் திரும்பவும் அவைகளைப்பற்றி ஆழ்ந்து ஆலோசனைசெய்து பின்பு வேண்டுமானால் தள்ளிவிடுங்கள். ஆனால் முன்னதாகவே உங்கள் மனதில் படிந்திருக்கும் எண்ணங்களைக் கொண்டு, விசாரியாமலே நிராகரிப்பது நியாயமல்ல வென்பதை மாத்திரம் ஞாபகப்படுத்துகிறேன்.

கடந்த முதலாவது மகாநாட்டில் யான் தலைமைவகித்தபோது, நமது குல முன்னேற்றமடைவதனால் வாலிபர்களாலேதான் அடைய முடியுமென்பதாகக் குறிப்பிட்டேன். அப்படிச் சொல்லி இரண்டு வருடமாகிறதல்லவா? எல்லாம் மறந்துபோயிருக்கலாம். ஆகவே அதையே இப்போதும் வேறுவகையில் வற்புறுத்துகிறேன். தேசமானுலும், நாடானுலும், குலமானுலும், குடும்பமானுலும், இவைகள், முனனேற்றம், மேன்மை, பெருமை, உயர்வு அடைவது ஆங்குள்ள இளைஞர்களைப் பொறுத்ததேயாகும் சுருங்கக்கூறின், வருங்காலம் வாலிபர்களுடையதே. அதனால் குல முன்னேற்றமடைய வேண்டியது அக்குல இளைஞர்கள் கையிலடங்கியுள்ளது. எவ்வளவு ஊக்கம், எவ்வளவு ஒற்றுமை, எத்தனை உயரிலக்கியங்கள் உங்கள் உள்ளத்தில் புகுமோ, பதியுமோ, அதுபோலவே குலமும் சிர்பெற்றிலங்குமென்பது திண்ணம். முக்காலும் திண்ணம்.

பகுத்தறிவுகொள்க!

நம்மவர்கள் தங்களுக்குப் பெரிய புகழ்ப்பட்ட மாகக் கருதுவதொன்றுண்டு. "செங்குந்த மக்கள் விசேஷசமயப்பற்றுதலுடையவர்கள்" என்பதேயாகும். இது மெய்யான புகழ்ப்பட்டமோ? அன்றி இச்சகமொழிகளோ? என்று நிதானியுங்கள். இந்தச் சமய பற்றினுலேயே நம் குலம் கீழுக்குக் கீழாகப் போய்க்கொண்டிருக்கிறது எடுத்ததற்கெல்லாம் முருகன், எப்படற்கெல்லாம் வினைப்பயன் என்று சொல்லுவதில் சொந்த உணர்ச்சி, சொந்த அறிவாராய்ச்சி அணுவளவும் இடையாது, இதனுலேயே நமது குலம் இந்த தாழ்ந்த நிலையை அடைந்தன் எதென்பது எனது சொந்த அபிப்பிராயம். நம்மைச் சுற்றிலும் பார்க்கும் போது சமய உணர்ச்சியை நம்மிடம் வற்புறுத்தும் அல்லது சிலாகிக்கும் வேற்று மதப்பினர் அச்சமய உணர்ச்சியின்றியே அல்லது அவ்வுணர்ச்சியை விலக்கி வைத்துக்கொண்டே மேன்மையடைந்து முன்னேற்ற வழியில் அதிதூரம்சென்றுவிட்டார்கள். தங்கள் அறிவை வலுப்படுத்துவதிலும், விசாலப்படுத்துவதிலும் விடாமுயற்சி செய்துகொண்டிருப்பதாலேயே அந்த மேன்மை உயர்வு அவர்களுக்குக் கிடைத்தன, கிடைக்கின்றன என்ற விஷயம் நிதானித்துப் பார்த்தால் உங்களுக்கு விளங்காமற்போகாது. அப்படியிருக்க நாமும் மேனிலைபடைவதற்கு நமதறிவை அறிவின் விளக்கத்தை அறிவை விளக்கும் வழிகளைக் கைகொள்ளாமல் போலிச்சமய மயக்கத்தில் ஆழ்ந்து கல்வியின்றி, செல்வமின்றி இருட்டில் தயங்குவதேன்?

போலிச்சமய மயக்கம்

போலிச்சமய மயக்கமென்று சொன்னேன் கவனியுங்கள்.

சமய ஏற்பாடுகளெல்லாம் "நமது நன்மைக்காகவே, நமது விடுதலைக்காகவே" அமைக்கப்பட்டனவென்று பல சமயாபிமான நண்பர்கள் சொல்லுவதுண்டு. அப்படியாயிருந்தால் அவைகளைப்பற்றிக் குறைகூற இடமில்லை. ஆனால் நடைமுறையிலிருப்பதென்ன? இச் சமயங்களே நமக்குப் பெருந்தீமை, பெருநட்டம் இவைகளை விளைவிப்பதும், ஒற்றுமையைக்கெடுப்பதும்-முன்னேற்றத்தை-விடுதலையை-நன்மையைத் தடுப்பதுமாக இருக்கின்றன. இதை ஆக்ஷேபிப்பது சூரியன் வெளிச்சத்தைக் கண்ணில்லாதவன் ஆக்ஷேபிப்பதை யொக்கும்.

சமயக்கொள்கைகள், சமய வழிபாடுகள் நமக்கு ஊக்கத்தையளித்து முன்னுக்கேற்றுவதானால் அவைகளை கொள்ளுங்கள். இல்லையேல், அவைகளைத்தள்ளுங்கள். அல்லது அவைகளை அடியோடு மாற்றுங்கள்.

"முருகா" "குமரா" வென்னும் போதே உங்கள் உள்ளத்தில் உற்சாகமும், அருளானமையும் உதிக்கின்றனவா? உதிக்கிறதானால் எழுந்து தீரமாக முன்னே நடக்கவேண்டும் இல்லை. பக்தி பெருகுகிறது, மனம் குழைகிறது, ஒன்றுஞ் செய்ய உள்ளம் ஒப்பவில்லை பெண்டிருந்தால் அதைத் தள்ளுங்கள். நாம் அழித்துபட்டுப் போவதற்கா, குமரனைக்கூப்பிடுவது?

குமரன் ஒரு காலத்தில் சூரசம்மாரஞ் செய்துவிட்டு அதனுல் எங்கேயோ வானுலகில் வதித்து வருவதாகவும், அவனுடைய பல உருவங்கள் இருண்ட கட்டடங்களில் சிலஜர்களில் பார்க்கலாமென்றும் நீங்கள் கண் மூடிக்கொண்டு மனப்பால் குடிக்கின்றீர்களேயன்றி, குமரனென்ற ல் நீங்களெல்லோரும் குமரன் தான், குமாரத்தன்மை உங்களிடந்தான் விளங்கவேண்டும் என்பதாகத் திடவெண்ணம் கொள்ளவில்லையே! மனத்திண்மையையும்மனவெழுச்சியையும் குறைக்கும் வழிபாடு வழிபாடா குமோ? நாமெல்லோரும் வீரர்கள் வழித்தோன்றல்கள். நமது முன்னோர்கள் தீரர்கள், வீரர்கள். ஆகையால் அவர்கள் வழிவந்த நாம் ஏழைகள், கோழைகள் என்பதாகச் சொல்லாமலே விளக்குவது எவ்வளவு பரிதாபமும் மதிப்புக்கேடும் என்பதை உணருங்கள்.

ஆகையால் கடவுளைப்பற்றியும் சமயத்தைப்பற்றியும் ஆராய்ச்சி செய்துகொண்டு காலத்தைக்கழிப்பவர்கள் கழிக்கட்டும். தங்கள் ஆராய்ச்சியில் உண்மையைக் கண்டு உங்களுக்குச் சொல்ல வந்தால் அவர்கள் கூறுவதையும் உங்கள் அறிவென்னும் விளக்கு வெளிச்சத்தில் பாருங்கள். அவை விடுதலைத் தேட்டத்திற்கு, இன்ப அடைவிற்கு முன்னேற்றத்திற்கு, ஒப்ப அனுகூலமான கூற்றுளால் எத்திக்கொள்ளுங்கள். அன்றேல் விலகிப் போங்கள்.

இக்கோரகாலம், மேனாட்டுநாகரீகம்-முறை (Modern civilisation) இவைகளை உயர்த்தியோ அல்லது இவைகளைக் குறிப்பிட்டோ யான் சொல்லுகிறதாக நினைக்கவேண்டாம். ஆனால் நம்மிடத்திலே நமது வாழ்க்கையிலே இருக்கும் ஊழல்கள் இன்னும் அதிகமானவைகளென்பதும் மறுக்க முடியாததே. நல்லது எங்கிருந்தாலும் கொள்ளத்தக்கதே. தீயது எங்கிருந்தாலும் தள்ளவேண்டியதே. இதில் அறிவியக்கம் தலைபெற்று நிற்கவேண்டும்.

அறிவே பிரதானம்

அறிவே, நம் ஒவ்வொருவரிடமும் உள்ள தூய அறிவே, நமக்கு வழிகாட்டியாக விருக்க வேண்டும். நமது நிலை, பிறருடைய அறிவை, சுற்றுள்ள மக்களுடைய அறிவை விளக்குவதே விளக்குவதற்கு வேண்டிய முயற்சியெடுப்பதே சமய வழிபாடாக வேண்டும். கல்வி, கேள்வி, போதனை இவைகளெல்லாம், மறைந்துகிடக்கும் மாசடைந்து கிடக்கும் அறிவைத் தலைக்கவைப்பதற்கேயாகும். ஆகவே இந்தமாதிரி அறிவு வழிபாட்டிற்கு இந்த அறிவுச்சமய வழிபாட்டிற்கு ஆக்ஷேபிப்பவர்களும் இருப்பார்களோ? இந்த வழிபாடு உண்மைவழிபாடா? அல்லது உட்கார்ந்துகொண்டோ, நின்றுகொண்டோ, கண்ணை மூடிக்கொண்டோ, திறந்துகொண்டோ, படமாலிக்கோயில் முன்னே "குமரா, குறா" வென்று தெண்டியழுவது உண்மை வழிபாடா? யோசியுங்கள். சகோதரர்களே! உண்மை வாழ்க்கை அதனை வாழ்க்கையாகவா இருக்கவேண்டும்? விரோதமின்றி மடிவதும் மனிதத்தன்மையாமோ? ஏதோ காரணமே கண்முதற்தனமாய் ஒன்றை எற்படுத்திக்கொண்டு அந்த மனை சிருஷ்டிப் பொருள்கள் உண்மையில் இருப்பதாகநினைத்து பயந்து கொண்டு பயக்காவித்தனமான குடித்தனம் செய்துவருவது மனிதத் தன்மையாகுமா?

ஆகையால் தீரர்களாக வெழுந்து கர்சியுங்கள். உண்மையைத் தேடுங்கள். பிறர் சொல்லுவதை அப்படியே விழுங்கிவிடாதீர்கள். உங்கள் அறிவென்னும் விளக்கை அமர்த்திவிடாதீர்கள்.

அறிவுதான் கடவுள்! உங்கள் அறிவை விளக்குவதே அக்கடவுள் வழிபாடு. அறிவு மறைத்துகிடக்கும் இடங்களை வழிய மக்களே சோயிக்கள். அந்தக் கோயிலைச் சீர்படுத்தப் பொருள் வேண்டும். கல்வி நிதி வேண்டும். இந்த வழிபாட்டில் நிறைந்து நிற்க வேண்டியது அன்பு, தூய ஒழுக்கம். அன்பு எல்லோரையும் சேர்த்துப் பிணைப்பது, ஒற்றுமையை வளர்ப்பது. தூயஒழுக்கம் வீரத்தன்மையை, வீரமுடிவை தருவது. ஏழைமக்களிடம் இரக்கஞ் செய்வது.

அன்பே சமயம்

அறிவான கடவுளை அடைவதும் நிறை அன்புத்துறை. அறிவே கடவுள், அன்பே சமயம் என்பதாகப் பறைசாற்றுங்கள். கல்வி நிதியைப் பெருக்க ஏற்பாடுகள் செய்யுங்கள்.

பெரிய பொது நோக்கைக் கைகொள்ளுங்கள். குறுகிய பிற பெரிதுகளைத் தள்ளுங்கள். விழிப்புடன் முன்னடக்கவேண்டும்.

கடைசியாக வாலிபர்களுக்கு ஒரு வார்த்தைகூற விரும்புகிறேன்.

கோழைத்தன்மை, தளர்ச்சி, இவை

தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க.

மனிதனுக்கும் மிருகங்களுக்கும் ஜீவகாருண்யத்தில் வித்தியாசம்.

(திரு. அ. இராகவன்)

முன் தொடர்ச்சி.

ஆய்ப்பேசாப்பிராணிகளென்று நாம் கூறும் மிருகம், பறவை முதலியவைகளிடம் காட்டும் ஜீவகாருண்யம்:—

மனிதனுக்குத்தெரிந்தவரையிலுள்ளபிராணிகள் மிருகங்களே என்று எவரும் நன்கறிவர். பிராணிகள் உற்பத்தியைப்பற்றி மிக நுணுக்கமாய் ஆராய்ந்தறிந்த பெருமைபுலவர் "டார்வின்" அவர்கள் தம்நூற்களில் மனிதஉற்பத்தியைப்பற்றிக் கூறும்பொழுது மூதலாவது உஷ்ணத்தினால் புழுக்கள் தோன்றியின்னர் பலப்பல பிராணிகளாய் மாறி கடைசியாய்க்குரங்காகி குரங்கினின்று மனிதன் தோன்றினான் என்று கூறியிருப்பதோடு அறிவிலும் மனிதனுக்கு இடித்தபடியாயிருப்பது குரங்கினமே என்றும் கூறியுள்ளார். எனவே மனிதன் தனக்கு அடுத்த அறிவுள்ள இப்பிராணிகளிடமும் மனிதர்களைப்போல் அன்பு பாராட்டக் கடமைப்பட்டுள்ளான். இதையே சைவத்திரு தெரியும் வற்புறுத்திக் கூறியிருக்கிறது. சைவசமயப் பெரியாராகிய தாயுமானசுவாமிகள்.

எவ்வுயிரு மென்னுயிர்போ
லெண்ணியிரக்கவு நின்
றெய்வ வருட்கருணை
செய்யாய் பராபரமே."

என்று கூறியுள்ளார். சைவம் வற்புறுத்திக் கூறும் இச்சீவகாருண்யச் செந்தெறியின் தன்மையை சைவர்கள் எத்தனை தூரம் அறிந்திருக்கிறார்கள்? என்று வினவினால் சைவர் (0 சூன்யம்) என்றே கூறவேண்டிய திருக்கிறது. சற்காலத்தே சைவர் எனென்று கூறிக்கொள்பவர்களெல்லாம் புலாலுண்ணுமையே சைவம் என்று கூறுகின்றார்கள், செய்கின்றார்கள். உயிர்ப்பிராணிகளுக்கு இம்சை செய்வதும் அவைகளைக்கொல்வதும் சைவத்தின்பாற்பட்டதல்லவென்றே நினைக்கின்றார்கள். உண்மையை ஆராய்ந்தால் புலாலுண்ணுதலினால் சைவத்திற்கு ஒரு சிறிது ஆகேஷபணை இல்லையென்றே கூறலாமன்றும். உன்மையான சைவக்கொள்கையின்படி ஒரு உடலின்று உயிரைப்பிரித்தலே ஜீவகாருண்ய மற்ற செயல். அப்பிராணியை எரிக்கட்டி கூறிய தார்க்கம் பால் குத்தி உதிரம் பெருக வதைப்பதும் மரியோ வண்டியில் பூட்டி சாட்டையால் அடிப்பதும் கழுத்தில் புண்ணுண்டாகும்வரை வண்டியைக் கட்டி இழுப்பதும் குதிரையை மிக வேகமாய் ஓடும்படி அடிப்பதும் ஜீவகாருண்யமற்ற செயல்களேயாகும். ஆனால் காமே இதற்குவிடந்தர அந்த லதாடனிதர்களே இழுக்கிறது என்பதற்காக ஒருவரால் கட்டுக்கொல்லப்பட்ட ஒரு பிராணியின் உடலைப் புசிப்பது ஜீவகாருண்யமற்ற செயல் என்று தர்க்கபூர்வமாய் எவராலேயும் நிரூபிக்கமுடியாது. இதையே இன்று உலகத்தின்பெரும்பாலானமக்களால் போற்றப்பட்டுவரும் புத்தர் பெருமானும் கூறியுள்ளார். இறந்தபோனமாம்சத்தைப்புசிப்பது சுகாதாரத்திற்கு ஏற்றதன்று என்றே கூறலாம். ஆனால் இங்கு ஜீவகாருண்யச்செயலெது? ஜீவகாருண்யமற்றசெயலெது? என்று ஆராய்ச்சி செய்கின்றோமே யொழிய சுகாதாரமற்ற செயலெது? சுகாதாரத்திற்கு ஏற்ற செயலெது? என்பதைப்பற்றியன்று. இதைக்கேட்ட சைவர்களெல்லாம் எம்மீது சீறி விழலாம், சிரிவிழுந்தாலும் என்ன? எம்மனதிற்கண்ட உண்மையைச்சொல்லியே ஆகவேண்டியிருக்கிறது. ஆனால் ஒருவனை புலாலுண்ணவேண்டாமென்று வாய் மதிக்கின்றார்கள். ஆனால் புலாலுணவு உட்கொள்ளும் வெள்ளைக்காரனையில்ல, நம் நாட்டிலிறந்து வரும் மகமதியரையில்ல, இந்து மதத்தில் யாம் பிறந்தோம் என்று சொல்லி புலாலுணவைக் கொள்ளும் இந்திய மக்களோதான் நாம்வாய் மதிப்பர். மிகமோசமாகக் குறைகூறுவர். ஆலயப் பிரவேசஞ் செய்யமாட்டார். ஆலயப் பிரவேசஞ் செய்ய டால் யேல் வேஷ்டியை எரித்து அரையிற் கட்டிக்கொண்டு முனிசிபல் வண்டி துரையே என்பார். மகம்மதியனைக்கண்டால் மிலேச்சன் என்பர். கிறிஸ்துவனைக் கண்டால் குட்மார்னிங் சார் என்பர். இவைகளெல்லாம் நமது அனுபவத்தில் காணும் நிகழ்ச்சிகளாகும். தங்களில் ஜீவகாருண்யத்திருவெதெரியாதிய சைவ ரென்னிலேயுலகத்திலுள்ள ஏனைய சமயங்களிலிடசிறந்தது எனென்றால், பிறசமயங்களெல்லாம்மனிதர்களிடம் மாத்திரம் ஜீவகாருண்யம் காட்டக் கற்பிக்கின்றது. சைவப் பெருநெறி மாத்திரம் உலகத்திலுள்ள புல் எல்லா ஜீவப்பிராணிகளிடத்திலும் அன்பு பாராட்டக் கற்பிக்கின்ற அருள்நெறி என்று கூறலாம். ஆனால், தான்தன் குடித்தும் தன்னிலில் எத்தனையோ கோடிக் கணக்கான கிருமிகளிருக்க, அதை நன்கறிந்திருந்தும், சாப்பிடுவதையும், நம் நியூஜிலண்டு முதலிய தேசத்தில் மீனுப்போன்ற சில நீர்வாழும் ஜெந்துக்களைத்தவிர வேறு மாஞ்சோடு கொடி முதலியன ஒன்றும் கிடையாது. அந்நாட்டில் வாழும் மக்கள் ஜீவகாருண்ய விரதம் பூண்டு ஒன்றையும் சாப்பிடாது உயிர் துறப்பதா? நம் நாட்டிலுண்டாகின்ற கொடிய நோய்களெல்லாம் டாக்குர்விஷக்கிருமிகளினால்தான் வருகின்றன என்று கொல்லாமல் நம் நாட்டு மக்களெல்லாம் நோயாலிறப்பதா? என்பவைகளை கொள்ளாமல் நம் சைவர்கள் புத்திசாலித்தனமாய் ஆராய்ச்சி செய்யவேண்டியது மிக அவசியமே யொழிய குருட்டுத்தனமாய் மூடநம்பிக்கையின் பேரில் ஒரு காரியத்தை செய்வதால் நன்மை விளைவதைவிட தீமையே அதிகமாய் விளைகின்றது. மேலும் சைவம் மக்களுக்கு மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சங்கமே யொழிய கடவுளால் ஏற்படுத்தப்பட்டதல்ல என்பதை சைவத்தை தாபித்த நேற்ற முறையில் திருத்தவும் பகிய சட்டங்களை உற்பத்தி செய்யவும் எல்லோருக்கும் உரிமையுண்டு. இவ்வுலகமே துன்பம் நிறைந்தது. அதில் பிற உயிர்களுக்கு வதைசெய்யாமல் மனிதன் வாழமுடியாதிருக்கிறது என்று திரு. எம். கே. காந்தி முதலியோரும் கூடச் சொல்லி விட்டனர். எனவே இவ் வுலகில் ஒவ்வொரு மனிதனும் இயன்றவரை பிறஉயிர்களுக்கு ஹிம்சை உண்டாகாதவாழ்வுவாழவேண்டுமே யொழிய ஜீவகாருண்யம் பாராட்டுகிறேன் என்று மிருகங்களைப் போன்று கட்டிலில் மூட்டைப்பூச்சிகள் துளையாயிருக்கவும் அதைக்கொல்லாது பாலும் தினைப்பிழக்கொல்லாது பாலும் தினைப்பிழக்கொல்லாது பாலும் தினைப்பிழ

திருச்சி பார்ப்பனரல்லாத் வாலிபசங்க இரண்டாவது ஆண்டு விழா.

மதுரை உயர்திரு எஸ். லக்ஷிமிரதபாரதி அவர்கள் எம். ஏ., பி. எல்., தலைவர்.

ஈ. வெ. இராமசாமி சொற்பொழிவு.

17-5-31ந் தேதி மாலை 5மணிக்கு திருச்சி நகரசபையாரின் பொதுமண்டபத்தில் திருச்சி பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா மதுரை திருவாளர் எஸ். இலட்சுமிரதபாரதி எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆண்டு விழா மண்டபத்தில் சுமார் 2000 பேர் வரையில் கூடியிருந்தார்கள். மீனம்பள்ளி ஜமீன்தார் உயர்திரு. வெங்கிடாசல ரெட்டியார் எம். எல். சி. அவர்களும், ஜில்லா போர்டு பிரசிடெண்ட் உயர்திருவாளர் டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். எல். சி. அவர்களும் மற்றும் அநேக பிரபல கனவான்களும், மாணவர்களும் ஏராளமாய் விஜயம் செய்திருந்தார்கள்.

கூட்டம் துவக்கியதும் திரு. பாரதி அவர்களை தலைமை வகிக்க திருச்சி வக்கீல் உயர்திரு டி. பி. வேதாசலம் அவர்கள் பிரேரேபிக்க திருப்பூர் வக்கீல் உயர்திரு. டி. ஆர். சுந்தரம் அவர்கள் ஆமோதிக்க திரு பாரதி அவர்கள் தலைமை வகித்தார். உயர்திரு வாசு அவர்களால் திரு. பாரதி அவர்களுக்கு ஒரு உபசாரப் பத்திரப்பா ஒன்று பாடிக்கொடுக்கப்பட்டதும், சங்கத்தின் வருஷ அறிக்கை வாசிக்கப்பட்டது.

பிறகு தலைவரவர்கள் முகவுரைப் பிரசங்கம் ஆங்கிலத்தில் நடந்து முடிந்ததும் வக்கீல் உயர்திரு டி. ஆர். சுந்தரம் அவர்கள "மாணவர்களின் வேலை" என்பதுபற்றியும், உயர்திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் "சீர்திருத்த சட்டங்கள்" என்பதுபற்றியும் மதுரை உயர்திரு. சிவகுரு நாதன் அவர்கள் மதுரை வாலிப சங்கத்தைப்பற்றியும், பேசியபின் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் "சுயமரியாதையும், சுயராஜ்யமும்" என்பதுபற்றி சுமார் 1.-30 மணி நேரம் பேசினார்.

திரு. ஈ. வே இராமசாமி பேசியதின் சாரம்.

தலைவர் அவர்களே!

சகோதரர்களே!!

"சுயமரியாதையும், சுயராஜியமும்" என்பதுபற்றி பேசுவது இங்குள்ள சிலருக்கு திருப்தியைக்கொடுக்காது என்பது எனக்குத்தெரியும். ஆனால் அந்தப்படி அதிருப்திப்படுபவர்களில் அநேகர் நான் பேசி விஷயங்கள் முழுவதையும் உணர்ந்த பின்பு ஒரு சமயம் திருப்தி அடையக்கூடும் என்று நம்புகின்றேன்.

சிலர் எந்த விதத்திலும் திருப்தி அடையமாட்டார்கள் என்றாலும் சுயராஜ்யம் என்பதைப்பற்றி மற்றவர்கள் பேசுபவைகளில் இருந்து நான் அடையும் அதிருப்தி அவ்வளவு அவர்களுக்கு நான் பேசுவதில் எற்படாது என்றே நினைக்கின்றேன்.

பொதுவாகவே, சுயராஜ்யம், சுயராஜ்யம் என்கின்ற கூப்பாடு நாட்டில் நிறைந்து அந்த வார்த்தைக்கும் ஒரு விதச் செல்வாக்குண்டாக்கப்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் அதற்குவிரோதமாக ஒருவர் பேசுவது என்பது சற்று கஷ்டமான வேலை என்பதோடி அளவுக்கு மீறினதைரியம் வேண்டியிருக்கும் என்று சொல்லுவார்கள். ஆனால் எனக்கு அது அவ்வளவு கஷ்டமாகவோ, அதிக தைரியம் வேண்டிய காரியமாகவோ தெரியவில்லை. எனெனில் எனது அனுபவத்தில் அதுமிக சாதாரண விஷயமாகவே தோன்றுகிறது. ஆனால் கேட்பவர்களுக்கு ஏதாவது மனவருத்தம் உண்டாகலாமே என்கின்ற எண்ணம் மாத்திரம் சற்று தயங்கச் செய்கின்றது. இருந்த போதிலும் யாரையும் நான் சொல்லுவதை எல்லாம் அப்படியே ஒப்புக்கொள்ளும்படி கேட்கப்போவதில்லை. அன்றியும், நான் சொல்லுவதெல்லாம் சரியாகவே இருக்குமென்று கண்மூடித்தனமாய் நம்புங்கள் என்றும் உங்களுக்கு சொல்லுவதில்லை. என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன். அதை உங்கள் அபிப்பிராயங்களோடு வைத்து ஒத்துப்பார்த்து சரி எது, தப்பு எது என்பதை உணர்ந்து நீங்கள் உணர்ந்தபடி நடவுங்கள் என்றுதான் சொல்லுகின்றேன்.

ஆதலால் நான் சொல்லுவதில் யாருக்கும் எவ்வித கெடுதி எற்பட வோ, சங்கடம் எற்படவோ இடமிருக்காது. மனிதன் பொதுவாகவே எவ்வித அபிப்பிராயங்களையும் கேட்பதற்கும் தெரிவதற்கும் ஒரு விதஊக்கம் உடையவனாக இருக்கவேண்டும். இல்லையானால் மனிதன் உண்மையைக் கண்டு பிடிக்கவோ, அறிவு பெறவோ, முன்னேற்றமடையவோ முடியாது.

அன்றியும் நமது சொந்த அறிவில் நமக்குப்போதிய தைரியமிருந்தால் யார் என்ன சொன்னாலும் யாரிடம்யாம் எதைக்கேட்டாலும் நமக்கு எவ்வித ஆபத்தும் வந்துவிடாது. ஆகையால் ஒருவரை பேசாமல் இருக்கச்செய்வது என்பதோ, பேசுவதைக் கூட கேட்காமல் இருக்கச் செய்வது என்பதோ கோழைத்தனமேயாகும்.

ஆகவே நான் சொல்லுவதை விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலையிலிருந்து கேட்கும்படி கோறுகிறேன்.

சகோதரர்களே! சுயமரியாதை சுயராஜ்யம் என்று சொல்லப்படும் இரண்டுவார்த்தைகளிலும் சுயமரியாதை என்பது நீங்கள் எல்லோரும் பொருள் தெரிந்து அனுபவத்தில் உங்கள் வாழ்க்கையில் எப்போதும் பிரயோகித்துவரும் ஒரு உண்மை வார்த்தை என்பதில் உங்கள் யாருக்கும் ஆக்ஷேபனை இருக்காதென்றே கருதுகின்றேன்.

மற்றும் ஒவ்வொரு மனிதனும் அவ்வார்த்தையின் தத்துவத்தை மனதில் பதிய வைத்து தன்னுடைய ஒவ்வொரு எண்ணமும் செய்கையும் அதைப்பொருத்தே இருக்கவேண்டுமென்று கருதுவதையும் உணருகின்றீர்கள். ஆனால் சுயராஜ்யம் என்னும் பதமோ சமீபகாலத்தில் உண்டாக்கப்பட்டதான ஒரு வார்த்தையேயாகும்.

எது போலவெனில் இந்து மதம் என்பதாக ஒருவார்த்தை எப்படிசமீப காலத்தில் கற்பிக்கப்பட்டு அதற்குஒரு கருத்தில்லாமலும், அருத்தமில்லாமலும் வார்த்தை அளவில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றதோ அதுபோலவேதான சுயராஜ்யம் என்னும் ஒரு வார்த்தை கற்பிக்கப்பட்டு கருத்தமில்லாமலும், கருத்தில்லாமலும் வெறும்வாய்வார்த்தையில் பிரயோகிக்கப்பட்டுவருகின்ற வார்த்தையாகும். ஆனால் இந்த வார்த்தைக்கு அருத்தமும் கருத்துமில்லாமல் போனாலும் "சுயராஜியமேஎனது பிறப்புரிமை" என்று சொல்லப்படுவதிலும்அதற்கேஎல்லா முக்கியத்தானமும் கொடுக்கப்படுவதிலும் அதைத்தவிர மேலே குறிப்பிட்ட இந்து மதத்திற்கு பிரதானம் கொடுப்பது போலவே கொடுக்கப்பட்டு மிகப்பிரமாதப்படுத்தப்பட்டு அதற்காகப் பெரிய கிளர்ச்சியும் செய்யப்பட்டு வருகின்றது. பாமர மக்களுக்கு உலகக்கல்வியும் பகுத்தறிவு ஞானமும் இல்லாத காரணமே சுயராஜ்[illegible] என்னும் வார்த்தை மோகமும், கைலாயம் என்னும் வார்த்தையைவிட மிக்க விளம்பரமும் மக்களின் கவர்ச்சியும் பெற்று விட்டது. இவ்வளவு மாத்திரம் அல்லாமல் "சுயராஜியம் கடவுள் யெத்தனத்தாலும் கடவுள் சித்தத்தாலும் அடைப்பட வேண்டியது" என்றும் அதன் சர்வாதிகாரியான திரு காந்தி அவர்களால் சொல்லப்படுவதாகி இனி அதற்காக வேறுகடவுள் தயவை எதிர்பார்த்து அர்ச்சனைகள் பிரார்த்தனைகள் செய்யப்படவேண்டியதாகவுமாய் விட்டது ஆனால் சுயமரியாதைக்கு அந்தக் கடவுள் தயவுதேவையில்லை என்பதோடு, அந்தக் கடவுளைப் பற்றிய கவலையும் வேண்டியதில்லை என்று சொல்வதோடு சகலமும் சுயமுயற்சியிலேயே செய்ய வேண்டும் என்றும் சொல்லப்படுவதாகும்.

அதுமாத்திரமல்லாமல் சுயமுயற்சியையிவிட்டுகடவுள் தயவுக்கும், கடவுள் செயலுக்கும் இதுவரை எதிர்பார்த்திருந்ததின்பலனே நமதுநாட்டுக்குஇன்று சுயமரியாதை இவ்வளவு இன்றியமையாத அவசியமாய் போய்விட்டதென்றும் அது சொல்லுகின்றது.

மற்ற, இன்னொருகாரணம் கருத்தில்லாமல் கற்பிக்கப் பட்டிருக்கும் சுயராஜ்யம் என்னும் போலிவார்த்தைக்கு ஆதாரமாகப் பல காரணங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அவை என்னவெனில்,

"இந்த நாட்டு மக்களுக்கு கல்வியில்லை, செல்வமில்லை, தொழிலில்லை மற்றும் அநேக குறைகளிருக்கின்றன. இதற்கு எல்லாம் காரணம் சுயராஜ்யமில்லாததே. ஆதலால் சுயராஜ்யம் சம்பாதிக்கவேண்டும்" என்பதாகச் சொல்லப்பட்டு பாமர மக்களை நம்பச்செய்து பட்டினிகிடப்பவர்களையும் வேலையில்லாமல் திண்டாடுவோரையும் சிறுபிள்ளைகளையும் சோம்பேரிக் கூட்டங்களால் சேர்த்துக்கொள்ளப்பட்டு ஆர்ப்பாட்டம் செய்யப்படுகின்றது. ஆனால் நான் இவற்றிற்கு அதாவது கல்வி, செல்வம், தொழில் முதலியவை நமது நாட்டில் இல்லை என்பதற்கும் இவைமாத்திரம் இல்லாமல் மற்றும் அறிவு, ஆராய்ச்சி முற்போக்கு, ஈவு, இரக்கம், ஒழுக்கம், நியாயம், நீதி, மனிதத்தன்மை முதலியவைகூட இல்லாமல் போனதற்கும் நமதுமக்களுக்குச்சுயமரியாதை உணர்ச்சி இல்லாமல் போனதே காரணம் என்று சொல்லுகிறேன். சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்கி மேல்கண்ட சாதனங்களை மக்கள் அடையச்செய்யும் பாதைகளை அடைக்கவே "சுயராஜிய முயற்சி" என்பது புதிதாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றது என்றும் நான் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். அன்றியும், சுயராஜிய முயற்சி என்பது வெறும் "வெள்ளைக்காரனைப்பற்றி வசை புராணம் பாடுவதன் மூலமே அவனுக்கு கஷ்டத்தை எற்படுத்த வேண்டுமென்பதின் மூலமே நமது கஷ்டமெல்லாம் நீங்கிவிடும்" என்று சொல்லப்பட்டு வருவதோடு இதுவரை அப்படியே செய்யப்பட்டும் வரப்படுகிறது.

ஆனால் சுயமரியாதை இயக்கம் சுயராஜிய முயற்சியைப்போல் எல்லாப் பொறுப்பையும் வெள்ளைக்காரன் மீது சுமத்தி அவனைப்பற்றிப் பேசுவதிலேயே காலம் கழித்து அவனுக்கு கஷ்டம் கொடுப்பதிலேயே நமது ஊக்கத்தையும், முயற்சியையும் செலவழிப்பதில் கவலை கொள்ளுவதில்லை. ஆனால் அவர்களது [வெள்ளைக்காரர்களது] சுதந்திரமத்திற்காதாரமானதும், இடங்கொடுப்பதும், கொடுத்துக்கொ

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

சேலம் ஆதிதிராவிடர் மகாநாடு.

தனித்தொகுதியே வேண்டும்.

இனியாவது காந்தி உண்மையாய் உழைக்க.

சுயராஜ்யமும், தீண்டாமையும் ஒன்றுக்கொன்று முரண்.

சேலம் ஜில்லா ஆதிதிராவிடர் மகாநாடு மிகுந்த குதூகலத்துடனும், உற்சாகத்துடனும் 16-5-31 காலை 10-மணிக்கு சேலம் ஜில்லா போர்டு மண்டபத்தில் ஆரம்பமாயிற்று. மகாநாட்டுத்தலைவர் ராவ் பகதூர் எம். சி. ராஜாவையும், மற்ற தலைவர்களையும் ஊர்வலமாக அழைத்துசெல்லப்பட்டதுவராளமான பிரதிநிதிகளும், ஸ்ரீமான்கள் சி ராஜகோபாலாச்சாரி, டி. பிரகாசம், P. வரதராஜுலு நாயுடு, சாமி சகஜானந்தர், சாமி ஆத்மானந்தர், ஜில்லாக்கல்விசபை தலைவர் ஸ்ரீ ராஜமாணிக்கபண்டாரம், அட்வோகேட் ஸ்ரீ ஐயாசாமி செட்டியார், ஸ்ரீ ராமச்சந்திர நாயுடு, முதலிய பல பிரபலஸ்தர்களும் மற்றும் பல பிரமுகர்களும் மகாநாட்டிற்குவந்திருந்தனர். பக்கத்திலுள்ள ஜில்லாக்களிலிருந்து 300 பிரதிநிதிகள் வரை வந்திருந்தனர்.

முதலில் டாக்டர். P. வரதராஜுலு நாயுடு, ஆதிதிராவிடர்களுடைய நிலைமையையும், மகாநாட்டின் நோக்கத்தையும் பற்றி சுருக்கமாக சில வார்த்தைகள் கூறி, மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார்.

தலைவர் ராவ்பகதூர்
M. C. ராஜா அவர்களின்
உபன்யாசத்தின் சாரம்.
தனித்தொகுதியே வேண்டும்.

கனவான்களே! நமதுசக்கரவர்த்தி சௌக்கியமாய் நீண்டகாட்கள் இருக்க வேண்டும். ராஜப்பிரதிநிதி லார்டு வில்லிங்டன் தாழ்ந்த வகுப்பினருக்குஉண்மையானநண்பர். தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து சட்டசபைக்கு முதல் முதல் ஒரு அங்கத்தினரை நியமித்தவர் லார்டு வில்லிங்டன். தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் முன்னேற்றத்திற்காக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தியவர் லார்டு வில்லிங்டனேயாவார். ஆகையால் அவரால் நமக்கு விமோசனமுண்டாகுமென நம்புகிறோம்.

லண்டன் மகாநாடுடன் ஒத்துழைக்கவேண்டுமென்ற உணர்ச்சி இப்போதாவது காங்கிரசுக்கு ஏற்பட்டதை கண்டு நாம் மகிழ்கின்றோம். லண்டன்மகாநாட்டில் நமது நிலைமை என்னவென்பதை நாம் முடிவு செய்துகொள்ளவேண்டும.

சர்க்காரரின் தவறு.

தாழ்த்தப்பட்ட சமூகம் தங்கள் அபிப்பிராயத்தை சைமன் கமிஷனின் முன்பு எடுத்து சொன்ன வைகளில், தங்களுக்கு தனி தொகுதியே வேண்டுமென்று ஜற்புறுத்தியிருக்கின்றனர். அவைகளில்முக்கியமானவை அகில இந்திய ஆதிதிராவிட மகாசபை, சென்னை ஆதிதிராவிட மகாசபை, சென்னை அருந்ததியசபை, சென்னை ஆதிதிராவிட மாகாணசபை, குண்டூர், கோலார், திருநெல்வேலி, ராஜமகேந்திரம், கல்லார், பம்பாய் நகரம், சத்தாரா, அசாம், அசாம் சூர்மாபள்ளத்தாக்கு, அசாம் பிரிட்டல், மத்திய மாகாணம், மத்திய மகாண அகில இந்திய சங்கம், பீரார், அமராவதி, நிக்தாளி, பீரார் மாக்ஸ், ஐக்கிய மாகாணம், ஆக்ரா, ஐக்கிய மண்டல ஆதி இந்து, உமாயூன் சிப்கார், கான்பூர், வஸதி, கோரக்பூர், பெங்காள மகாணம், பெங்காள நகரம், வங்காள ஆதிதர்மம், ராஜா பன்சி சுபத்தாயசி, வங்காள துஸிதாஸ், பாளுசால ஆதாரமண்டலம், அஸ்சாடாராட்டாரி, டில்லி, சுதார், ஆகிய அனேகரபைகளும், சங்கங்களும் நமக்குத்தனித்தொகுதியே வேண்டுமென்று தீர்மானம் செய்து, அந்தபடியே சைமன்கமிஷன்முன்பு தங்களுடைய அபிப்பிராயங்களை சமர்பித்திருக்கின்றன. சென்னையில் ஏற்பட்டு ஒரே வருஷகாலமேயான சென்னை மாகாண தாழ்ந்த வகுப்பினர் சங்கம் மாத்திரம் தனக்கு தனி நியமனம் வேண்டுமென்றும், பம்பாய் தாழ்ந்த வகுப்பினர் சங்கத்தார் அதாவது அம்பெட்காரை தலைமையாகக் கொண்ட ஸ்தாபனம் மாத்திரம் கூட்டுத்தொகுதி வேண்டுமென்றும் கேட்டிருக்கிறது. மற்றவைகளெல்லாம் தங்களுக்கு தனித்தொகுதியே வேண்டுமென்று கேட்டிருந்தும் சர்க்காரார் அவைகளைக்கவனிக்காமல் தனித்தொகுதி வேண்டியதில்லையென்று சொன்ன அம்பெட்காரையும், நியமனமேயிருந்தால் போதுமென்று சொன்ன ராவ் பகதூர் R. சீனிவாசனையும் ஐந்து கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக வட்டமேஜை மகாநாட்டுக்கு அனுபபினது சிறிதும் நேர்மையான காரியமாகாது. ஆனபோதிலும், இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்டவகுப் பாரெல்லோரும் இவ்விரு பிரதிநிதிகளையும் தங்களுக்கு பிரதிநிதிகளல்ல வென்றும், தங்களுக்குத் தனித்தொகுதியே வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்து சில தந்திகள் சீமைக்கு அனுபபியதின் பலனாகவும் மகமதிய கனவான்கள் சிலருடைய உதவியினாலும் முடிவில் டாக்டர் அம்பெட்காரும் தனித்தொகுதி வேண்டுமென்றே ஒப்புக்கொண்டதற்கு நன்றிபாராட்டுகின்றோம்.

சுயராஜியமும், தீண்டாமையும்.

நமக்கு சுயராஜ்யம் வேண்டும். ஐக்கிய சர்க்கார் முறையாலும் சரி, குடியேற்றநாட்டந்தஸ்து ஆலும் சரி, எது வரினும் ஆட்சேபமில்லை. ஆனால் அது மேல் ஜாதியாருக்கு நன்மையையும், மேல் போக வசதியையும் அளித்து தாழ்த்தபபட்டோருக்கு தீமையையும், தாழ்வையும் அளிக்கக்கூடிய சுயராஜ்பம் எதுவாலும் அது நமக்கு வேண்டியதில்லையென்றும் தான் சொல்லுகிறோம் தேசீயக் காங்கிரசுக்கு வழிகாட்டியாகவும், சர்வாதிகாரியாகவும் விளங்கும் மகாத்மா காந்தி 1921ம் வருஷத்திய காங்கிரசில் கொண்டுவந்து நிறைவேற்றியஒரு தீர்மானம் என்னவென்றால் "சுயராஜ்யம் பெறுவதற்குதீண்டாமையையொழிக்கவேண்டியது முதலாவது காரியமாகும். சுயராஜ்யம் பெறுவதற்கு முன்னாலேயே தீண்டாமை ஒழிக்கப்படவேண்டுமேயல்லாமல், சுயராஜ்யம் பெற்ற பிறகுசெய்யவேண்டியவேலையல்ல," என்றும், மற்றும் சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும் பொழுது அவர், "தீண்டாமை என்னும் கொடுமையை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யத்திற்கு வழியில்லை, சுயராஜ்யம் பெற மார்க்கமில்லை" என்றும் சொல்லியிருக்கிறார்.

மற்றும், காங்கிரசின் முக்கிய வேலைத்திட்டங்களில்,

1. தீண்டாமையைஒழித்தல்.
2. மதுவிலக்கு.
3. ஆண், பெண் சமத்துவம்,
4. இந்து முஸ்லீம்ஒற்றுமை.
5. கைராட்டினத்தில் நூல் நூற்பது.

இதில் முதல் அம்சமான தீண்டாமை யொழிக்கும் விஷயத்தில் காங்கிரஸ் இதுவரையிலும் செய்த வேலை என்ன? தீண்டாமை விலக்குக்காக காங்கிரஸ் யாதொரு வேலையும் செய்யவில்லை யென்று நான் தைரியமாகக்கூறுகிறேன். காங்கிரஸ்காரர்கள் இந்து முஸ்லீம் பிரச்சினை ஒன்று மட்டும் தீர்த்து விட்டால் போதுமென நினைக்கின்றார்கள். இதுபிசகு, எவ்வளவு விரிவான சுயாட்சி பெறினும்: அதை அடுத்த மாதமே இழக்க நேரிடும் என்று திரு. காந்தியே சொலலியிருக்கின்றார்.

சென்ற வருஷத்தில் திரு. காந்தி பேசியதில் "நாம் தீண்டாதார்களை அடக்கி ஆள விரும்புகின்றோம், சர்க்கார் நம்மை ஆள விரும்புகின்றார்கள். ஆகையால் எமக்கும் சர்க்காருக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. தீண்டாமை யுள்ளவரை நாம் சுயராஜ்யத்திற்கு அருகதை யற்றவர்களாவோம்" என்று கூறியிருக்கிறார். காலஞ்சென்ற பண்டித மோதிலால நேரு அவர்கள், "இப்பெரிய வகுப்பாரின் (தாழ்த்தப்பட்ட வகுப்பாரின்) தாழ்ந்த நிலைமைக்கு இந்துக்களே தான் பெரிதும் பொருப்பாளிகளாவார்கள்" என்று கூறியிருக்கின்றார்.

மற்றும் லாலாலஜபதிராய், டாக்டர் மூஞ்சே, சாபரு, ஜெயகர் முதலிய இந்துத்தலைவர்கள், "தீண்டாமையை வைத்துக்கொண்டு சுயராஜ்யம் கேட்ப்பது என்பது ஒன்றுக்கொன்று முன்னுக்குபின் முரணாக பேசுவதாகும்" எனக்கூறியிருக்கின்றார்கள்.

மூன்று வருஷத்திற்கு முன் இந்து மகாசபையானது ஒரு தீர்மானம்செய்தது. அது என்னவெனில், "பொதுப் பள்ளிக்கூடம், கிணறு, குளம், கட்டடம், ரஸ்தா, கோயில் ஆகியவைகள் எல்லா மக்களும் சமமாக அனுபவிக்க உரிமையளிக்கவேண்டும்" என்றும், "வண்ணார், நாவிதர் முதலியவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கும் உதவி செய்யவேண்டு"மென்றும், "சமூக இராஜிய துறைகளில்சமத்துவம் அளிப்பதாகவும்" தீர்மானங்கள்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

ராஜாஜி முதலமைச்சர் ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஈரோட்டில் போலீஸ் அக்கிரமம்.

19-5-31 தேதி மாலை 6 மணிக்கு ஈரோடு காரைவாய்க்காலில் ஓர் பொதுக்கூட்டம் ஜூனுப் ஜ. ம. காதர் உசேன் சாயபு அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. கூட்டத்திற்கு சுமார் 2000 போகள் வரை வந்திருந்தார்கள். அக்கிராசனர் ஆசனத்தமர்ந்ததும் ஈரோடு திரு. ஈஸ்வரன் அவர்கள் கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கத்தை விளக்குவான் வேண்டி எடுத்துரைத்ததாவது:—

ஈரோட்டிலிருகும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்களிருவரும் திரு. மாரியப்ப ஆசாரி அவர்களின் சராப்கடைக்குச்சென்று, ஏதோ ஓர்பையன் ஒருநிருட்டுநகையைவாங்கியதாகவும், அதற்காக அவர்உடனேபோலீஸ்ஸ்டேஷனுக்கு வரவேண்டுமெனவும் கூப்பிட்டார்கள். நகை வாங்கியதெனக்குத் தெரியாது. பையன்கள் வந்ததும் விசாரித்துச சொல்லுகின்றேன் என திரு.ஆசாரி அவர்கள்உரைக்க, சப்இன்ஸ்பெக்டருக்குக் கோபம்வந்து ஆசாரியாரை அவமரியாதையாகப் பேசி, கன்னத்தில் பலமாக அடித்து விட்டார். மிக சாதுவாகவும், நிரபராதியாகவும் உள்ள அவரை அடித்த உடன் பக்கத்தில் இருந்தவர்களுக்கு கோபம் வந்து விட்டதைக்கண்டு, அவர் உடனே இன்ஸ்பெக்டரிடம் சென்று இன்ஸ்பெக்டரையும், இதர போலீஸ்வீரர்களையும் துப்பாக்கி தடிகள் சகிதமாய் அழைத்து வந்து திரு. ஆசாரி அவர்களையும், இன்னும்இதர ஜனங்களையும் இம்சித்துத்தள்ளிக் கொண்டு போலீஸ் ஸ்டேசனுக்குச் சென்றார். திரு. ஆசாரியார் மிக்க மரியாதையுள்ளவராகையால் அவரை ப்போலீசார் அடித்துத்துன்புறுத்தியது அக்கிரமமாயிருந்த படியால் ஜனங்கள் ஏராளமாகக் கூடிவிட்டார்கள். கூட்டத்தைக் கலைப்பதற்காக போலீசார் சிலரை தடிகளால் அடித்தும, துப்பாக்கியால் தாக்கியும் இம்சித்தார்கள். அவர்களின் செய்கையைக் கண்டித்துப் பேசிய வக்கீல் திரு. எஸ். வீ. சந்திர மௌலீஸ்வரய்யர் அவர்களையுத்துப்பாக்கியை திருப்பி கட்டையால் குத்தி "நீ யார் எங்களைக் கேட்பதற்கு? பேசாத போகிறுயா இல்லையா?" என உரைத்துவயிற்றில்இடித்துத் தள்ளினார்கள்.நாம் கேற்ற சாயந்திரம் போலீஸ் ஸ்டேசனிடம் கூட்டம் போடாதிருந்தால், போலீஸ்காரர்கள் திரு. ஆசாரியாரையும் இனஞும் அவருடன் சேர்ந்தவர்களையும் அதிக இம்சைக்குளாக்கியிருப்பார்களென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. நாமிருந்ததினால்தான் ஹெட்கான்ஸ்டபுல்களின் "டா" வரிசையுடன் நின்றது. ஆகையால் போலீசாரின் நடதையைக் கண்டிப்பதற்கும், அவர்கள் மீண்டும் இம்மாதிரி அக்கிரமமாய் நடக்காதிருப்பதற்காக வேண்டியுமேதான்இன்றுஇக்கூட்டம் கூடியிருக்கின்றது. திரு ஈ வெ. இராமசாமியவர்கள் நாம் நடந்துகொள்ளவேண்டியதைப்பற்றி பேசுவார்எனக்குறிப்பிட்டு உட்கார்ந்ததும்

திரு.ஈ. வெ. இராசாமியவர்கள் பலத்தகர கோஷத்தினிடையே எழுந்திருந்து பேசியதாவது:—

சகோதரர்களே! போலீஸார் அத்துமீரி நடந்த காரியத்தை கண்டிப்பதற்கு நாம் இக்கூட்டம் கூடியதாக சொல்லப்பட்டது என்றுஎண்ணி "போலீசார் ஏன் அடித்தார்கள்" என்று விசாரணை செய்யநாம் இக்கு கூடவில்லை. ஆனல் ஒரு கண்ணியமுள்ள கனவானை கண்டவீதியில் வைத்து அவமானம் செய்ததான அக்கிரம காரியத்தை கண்டிக்கவே கூடியிருக்கின்றோம்.

ஒருவன் குற்றம் செய்தால் குற்றத்திற்கு உரிய எந்த நியாயமான தண்டனையையும் அடைவதில் நாம் சிறிதும் அக்கிரமமாய் நடக்காதிருப்பதற்காகவே இக்கூட்டம் கூடியிருக்கின்றது. திரு ஈ வெ. இராமசாமியவர்கள் நாம் நடந்துகொள்ளவேண்டியதைப்பற்றி பேசுவார்என்ன

படமுடியா தினித்துயரம் பட்டதெல்லாம் போதும்—!

(நாகை, N. B. காளியப்பன்)

"பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்றபடி இந்த இருபதாம் நூற்றாண்டில் தொழிலாளர்களுந்தான் துன்பங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. எந்தப்பத்திரிகைகளிலும் தொழிலாளர்களைப்பற்றிய துப்பாக்கிச் செய்திகள்தான் குவித்து கிடக்கின்றன. எனென்றால் உலகமுழுமையும் வேலையில்லா தொல்லையானது ஒரு புறமிருக்க, இந்தியாவைப் பொறுத்தவரை நம் அதிகாரிகளின் கூற்றை எப்போதும் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் அரசியலை நடத்திக்கொடுக்கிற நம்மவர்களாலேயே தான் இத்தொல்லைகள் ஏற்படுகிறது என்பது என்னுடைய முடிந்த முடிவு.

ஏன் இப்படி சொல்லுகிறேனென்றால் கால்மேல்கால் தாங்களும் தங்கள் சந்ததியார்களுமே எஜமானர்களாகவும், முதலாளிகளாகவும், ஜமீன்தார்களாகவும், ராஜாக்களாகவும், சிறந்தமாய் இருக்க வேண்டிய வசதியை உற்பத்திசெய்துகொண்டு, வாழ்க்கை முறைகளையும் தங்களுக்கு எப்படி ஆடம்பரத்தில் திருத்தி அமைத்துக்கொண்டும், அவ்வாடம்பர வாழ்க்கைக்கு முக்கியமாய் உள்ள பொருளாதாரத்துறைகளையும் இவர்களே தங்கள் முழு ஆதிக்கத்தையும் செலுத்தி ஏகபோகத்திற்கொண்டு தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் மிக சந்தோஷமாக வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். இவர்கள் தங்கள் ஆடம்பர வாழ்க்கைக்கு பட்டினியால் வாடி வதங்கி, கட்டிக்கொள்ள சந்தையற்று இருக்கும் எண்ணிறந்த ஏழை மக்களை உத்தேசித்து சற்றுவது தளர்த்திக்கொண்டு சாதாரண வாழ்க்கைக்குக் கொஞ்சம் தங்களை திருப்திக்கொள்வார்களேயானால் எல்லாம் சரிப்பட்டுவிடுமென்பதுதான் கடல்அறிவு வினவினிய உண்மையான நம்பிக்கையும் அபிப்பிராயமும் ஆகும். நிற்க, இன்று இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற தொழிலாளரின் துயரம் ஒருபுறமிருக்க தென் இந்தியாவிற்குள்ள யம். எஸ். யம். ரயில்வேயில் ஆங் ஞறைப்புத்திட்டமும், எஸ். ஐ. ஆர். ரயில்வேயைசேர்ந்த டோன் (புவ) மலை தொழிற்சாலையில் வேலை-நாள் குறைப்புத்திட்டமும் ஏற்பட்டிருக்கிறது.

அதாவது தென் இந்திய ரயில்வே கம்பெனியின் ஏஜண்ட், திரு. ரோத்திரா அவர்கள், ஷெ ரயில்வேயின் வாங்குவார்கள். அதில் வீட்டு வாடகை ஐம்தோ அல்லது இரண்டோ பிடிபட்டு விடும். பாக்கி மொத்தமாய் ஒருமாதம் சம்பளம் 35, அல்லது 30 தேறும் இதில் இவர்கள் பெண்சாதி, பிள்ளைகள், வயது சென்ற தாய் தந்தையர்கள் விருந்தாடிகள் உள்பட ஆக எழுபட்டு உருப்படிகளுக்கு சாப்பாடு போடவேண்டும். முடியாதே? இவர்களே இந்த கதியானால் இவர்களிலும் குறைந்த சம்பளம் வாங்குகிற அகாயத நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று, முக்கால், அரை சம்பளம் வாங்குகிறவர்களின் கதி என்ன ஆகும் என்பதை நான் சொல்லி போர்டார் அறிய வேண்டியதில்லை. ஆகையினால் கருணைகூர்ந்து ரயில்வே போர்டார் சிக்கனம் என்கின்ற பேராலே ஏழை மக்களை சுரண்டி கஷ்டப்படுத்தாமலேயே, பொரிய உத்தியோகஸ்தர் சமபளத்தை குறைத்து சிக்கன திட்டத்தை ஒரு வாறு சரிப்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணமாக: ஒததை ஆள், ஒரு மனைவி ஒரு பிள்ளை உள்ளவர்களுக்கும், அவைகள் ஒன்றுமே இல்லாத தனி ஆட்களுக்கும் மாதம் 200, 300, 400, 1000, 2000 கொடுக்க வேண்டிய திலேயே; இதில் ஒவ்வொருவருக்கும் பாதிக்குமேல் குறைக்கலாமே! நல்ல ஆலோசனை செய்து இதைச் செய்யுங்கள். ஏழைமக்களை கெடுக்காதீர்கள். சென்ற 2 வருடத்திற்கு முன் ஏற்பட்ட 202-ம் நம்பர் சர்குலரின் சிக்கன திட்டத்தின் தொல்லையினால் தானே சத்தியாக்கிரகமும் வேலை நிறுத்தமும் ஏற்பட்டு அதன்பயனும் குற்றமற்ற பல தொழிலாளர்களை குற்றவாளிகளாக்கி சிறையில் அடைத்ததும் குறிப்பிட்ட சில தலைவர்கள் மீது வேண்டுமென்றே அபாண்டமான சதி கழக்கை உற்பத்தி செய்து திரு லக்ஷ்மணராவ் அவர்களால் 10 வருடம் தண்டிக்கப்பட்டு பின்னர் ஹைகோர்ட் அப்பீலில் 9½ வருடம் குறைக்கப்பட்டு ஆறுமாத சிறை தண்டனை அனுபவித்து வந்த தலைவர்கள் வெளிவந்தார்கள். வெளிவந்த அவர்களும் வேறு பல மாஜித் தொழிலாளர்களும் வேலையில்லாத் தொல்லையினால் எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் தெரிந்ததுதானே! அதற்குள் மழை விட்டும் தூவாணம் விடுவதில்லை என்பதை போல மறுபடியும் இருக்கிறவர்களையும் கஷ்டப்படுத்த ஆரம்பித்துவிட்டார்களே! ஐயா, ரயில்வே போர்டாரே வேண்டாம, கெடுதல் செய்ய எண்ணுதீர்கள்! நன்மை செய்ய ஆசைப்படுகின்.

"படமுடியா தினித்துயரம் பட்ட தெல்லாம் போதும்...!

மோதிலால் ஞாபகார்த்த ஸ்தாபன திறப்புவிழா

இவ்வூர் வாலிபர்களின் முயற்சியால் காலஞ்சென்ற பண்டித மோதிலால் நேருவின் ஞாபகார்த்தமாக "மோதிலால் ரிக்ரியேஷன் கிளப்" ஆரம்பித்து அதன்சார்பாக பேட்மிண்டன் கோர்ட் ஒன்றை சந்தைப் பேட்டைக்கு அருகாமையில் உள்ள காலியிடத்தில் 13-5-31 தேதி புதன்கிழமை மாலை 5 மணிக்குமேலவாத்தியங்களுடன் நடத்தி பண்டித மோதிலால் உருவப்பட ஊர்வலத்திற்குபின் போர்டு மத்தியதர பாடசாலை தலைமை ஆசிரியர் திரு, எம். டி. சோவிந்தராவ் பி. எ. எல். டி. தலைமையில், யூனியன் போர்டு, ஐக்கிய சங்கம் முதலியவற்றின் அங்கத்தினர்களும், யுவர் சங்கத்தலைவருமாகிய திரு. ஒ. ராஜமன்னர் செட்டியார் திறந்துவைத்தார். அது காலை, ஐக்கிய நாணய சங்க ஜில்லா சூப்பரவைசர் திரு. இ. டி. ஸ்ரீனிவாச முதலியார் கிளப்பின் அவசியத்தைப்பற்றியும், திரு. எம். பி. நாசமுத்து நேரு வாழ்க்கைச் சரித்திரத்தைப்பற்றியும் நீண்ட பிரசங்கம் செய்தபின், வந்தனோபசாரக் கூறப்பட்டு, சந்தனம் கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிதே கலைந்தது.

தஞ்சைஜில்லா சுயமரியாதை மகாநாடு.

நாளது மேமீ 24-25உகளில் பிறையாற்றில் நாடார் ஹைஸ்கூல் ஹாலில் நடைபெறும.

சென்னை, பச்சையப்பன் கல்லூரி புரொபஸர் உயர்திரு. லெ கூமிரசு அவர்கள், தலைமைவகிப்பார்கள்:

'குமரன்' ஆசிரியர் உயர்திரு. எஸ். முருகப்பர் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள்.

வி. ஜெம்புகேசன் அவர்கள் மகாநாட்டு வரவேற்புக் தலைவர்.

விஜயமாகும் தலைவர்கள்:-திருவாளர்கள் ஈரோடு, ஈ. வி. ராமசாமி, ஸ்ரீமதி ஈ. வி. ஆர். நாகம்மாள், சிவகங்கை. எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி.எல். சென்னை. எஸ்.ராமநாதன். எம். ஏ. பி. எல். மதுரை, எஸ். லெகூமிபிரதன எம். ஏ. பி. எல். திருச்சி சோமசுந்திரன் பி. ஏ. பி. எல்., வேதாசலம் பி. ஏ.பி.எல், பரமசிவம், ஆரோகியசாமி, அருப்புக்கோட்டைகருப்பையா, நீலாவதி-ராமசுப்பிரமணியம் விசாலாக்ஷி-சுப்பையா. சிவகாமி-சிதம்பரனார், காரைக்குடி, வீரப்பன், ஜீவானந்தம. சிவம் மற்றும்பல பெரியார்கள விஜயமாகினறார்கள்

வரவேற்புக்கழகத்தார்.

C. I. D.

P. வரதராஜுலு நாயுடு.

'தென்னிந்தியாவைப் பொறுத்தவரை காங்கிரஸ் ஸ்தாபனங்கள்முழுவதும் ஒரு சில பிராமண ஆதிக்கத்தில் சிக்குண்டு கிடப்பதால் தீண்டாமையை ஒழிக்க தீவிரமுயற்சிகள் இங்கு நடைபெறவில்லை என்பதைஒப்புக்கொள்ளுகின்றோம்''

"தமிழ்நாடு"

P. வரதராஜுலு

"தனித்தொகுதியே வேண்டுமென்று கோறுவதை இனி தடுத்துவருவதில் பயனில்லை என்ற கருத்து இன்றுமுதல் நமக்கு உண்டாகிவிட்டது:" "தனித்தொகுதி ஏற்பாடுகளை நாம் எதிர்த்து வருவது நியாயமல்ல வென்றும் நினைக்கின்றோம். ஆகையால் இதுவரையில் தனித்தொகுதி கூடாதென்று கண்டித்து வந்த நாம் இன்று முதல் நிறுத்திவிடுகின்றோம்." "தமிழ்நாடு"

திரு. திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் இதற்குஎன்னபதில்சொல்லுவார் என்று பார்ப்போம். "மானசதந்தி"

"இந்துராஜியம் வாழ்க"

இந்து மகாசபை தலைவர் டாக்டர் மூஞ்சே லாகூருக்குச் சென்றபோது அங்குள்ள வாலிபர்கள் "இந்து ராஜியம வாழ்க" என்று கூப்பாடு போட்டார்கள்.

"தமிழ்நாடு"

"ஹிந்தியின் அவசியம்"

"ஹிந்தி படித்தால்தான் துளசிதாஸ் ராமாயணம் நன்றாக படிக்கமுடியும"

கே: பாஷயம் சென்னை சு-மி

"உண்மை குடி அரசு"

புதிதாக உண்மைக் குடிஅரசு பெற்றநாடாகிய ஸ்பெயினில் முதல் வேலையாக கோவில்கள் இடிக்கப்படுவதுடன் கன்னியாமடங்களை இடித்து துகள் ஆக்கப்படுகின்றது.

பல பத்திரிகைகள்.

ஜனத்தொகை பெருக்கம்:

மிதமிஞ்சி ஜனத்தொகை பெருகிவிடாமல் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

(சு-மி தலையங்கம)

மிதமிஞ்சின ஜனஉற்பத்திக்கு காரணம கண்டுபிடித்து மட்டுப்படுத்த ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டும்.

சு-மி தலையங்கம்,

பர்ம சொத்துக்களை சென்னை நாட்டுக்கோட்டைபார் சுரண்டி வந்து இந்தியசாமிகளுக்கு கோயில் கட்டியதால் பர்மா சாமிகள் கோபம் கொண்டு நாட்டுக்கோட்டை செட்டியார்மார்களை அந்தநாட்டைவிட்டுத் துரத்தித்துரத்தி அடிக்கின்றனவாம். இந்தசாமிகள் இடுப்பில்கூட துணியில்லாமல் இதைப்பார்த்துக் கொண்டு சிரிக்கின்றனவாம்.

மானசபத்திரிகை.

இதனால் நாட்டுக்கோட்டையார் மலேயாநாட்டில் சுரண்டிய பொருளைக்கொண்டு இந்தியாசாமிக்கு கோவில் கட்டியதற்காக கோபித்துக்கொண்டு மலேயா நாட்டு சாமிகள் எங்கு தங்களை அடித்து துரத்திவிடுமோ என்று மலேயாநாட்டிலும் கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்தார்களாம். இதனால் மலேயா சுவாமிகள் சிறிது மாத்திரம் சந்தோஷப்பட்டு பர்மா சாமிகளைப்போல் அடிக்காமல் உதைக்காமல் மரியாதையாக ஊரைவிட்டு வெளியாக்கி வருகின்றனவாம்.

(பொய்தந்தி.)

'இந்திய பொதுஉடைமைக்கக்ஷிக்காரர்கள் மிஸ்டர் காந்தியையும் இந்திய அரசாங்கத்தாரையும் ஒரேமாதிரியாகத்தான் பாவிக்கிறார்கள்''

மிஸ்டர் டால்ட்டன், வீ. கே.

மார்க்க ஸ்தாபகர்களை எல்லாம் புரூஷிக்கார்கள் என்றுதான் அழைப்பேன்.

ஜவர்லால். (வீ. கே.)

பிரஞ்சுப்புரூஷியும், ருஷியப் புரூஷியும், இந்தியப்புரூஷியும் மனிதரை மனிதராக ஆக்கவேண்டுமென்றே செய்யப்பட்டதாகும். ஜவர்லால். (வீ. கே.)

ஜவர்லால்:

"ஏழைகள் கஷ்டப்பட்டு இராப்பகலாய் உழைக்கின்றார்கள். அவர்களுக்கு வேலைக்குத் தகுந்த கூலிகூடகிடையாது. ஆனால் அவர்கள்வேலைபின்வருமானத்தை மற்றவர்கள் அனுபவித்துக் கொழுக்கிறார்கள்.குதிக்கிறார்கள்''

ஃஃ ஃஃ

"வயிற்றுக்குணவில்லாது வாடும் மக்களின் விடுதலையே எனக்குமிகப்பெரிய சுயராஜியமாகும்."

ஃஃ ஃஃ

"ஒருவனுடைய வறுமை நோயை கடவுள் செயலென சிலர் கூறலாம். ஆனால் ஒருவன் கொழுத்த, உண்டு, மகிழ கோடிக்கணக்கான ஜனங்கள் வறுமைப்பிணிவாய்ப் பட்டு அல்லற்படுவது [யாருடைய செயல்] இது நியாயமா?

சீர்திருத்த கலப்பு மண அழைப்பு.

ஐயா, நமது உழுவலன்பன்

சண்டமாருதம் ஆசிரியர் உயர் திரு.

அ. பொன்னம்பலம், அவர்களும்

பிறையார் திருமதி

ரா. சுலோஜனை, அவர்களும்

நாளது மேமீ 24உ ஞாயிற்றுக்கிழமை பகல் 5 மணிக்கு ஒருவரை யொருவர் தங்கள் வாழ்க்கைத் துணையாகக் கொள்வதென தீர்மானித்து உறுதி செய்துகொள்ள நிச்சயித்திருப்பதால் தாங்களும் வந்திருந்து கௌரவிக்க வேணுமாய் கோறுகிறோம்.

பிறையார்
14—5—31

இப்படிக்கு
தஞ்சைஜில்லா சுயமரியாதை மகாநாட்டின்
வரவேற்புக் கழகத்தார்.

ஃஃ ஃஃ

"ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு நீங்கிவிடும்படியான அரசியல் விடுதலை கிடைத்தாலும் அதை நான் உண்மையான சுயராஜ்யமெனக் கூறமாட்டேன். ஆங்கிலேயர்களுக்குப்பதிலாகசில இந்தியர்கள் அரசாட்சி செய்வதால் அது சுயராஜ்யம்ஆகிவிடாது."

ஃஃ ஃஃ

"வறுமைநோய் தீராதவரை இந்தியர் கவர்னர் பதவி வகித்தாலுஞ்சரி, முதல் மந்திரி பதவி தரித்தாலுஞ்சரி, அதனலொரு விமோசனமில்லை.''

ஃஃ ஃஃ

"நாம் ராஜீய விடுதலை முதன் முதலடைவோம்; அப்பால் மற்ற ஜனங்களைக் கவனித்துக் கொள்ளலாம் என சிலர் கூறுகின்றனர். இதுபோன்ற முட்டாள்தனமான பேச்சு வேறில்லை."

ஃஃ ஃஃ

"தேச சேஷமம்' என்பது மக்கள் எல்லோரும் பணக்காரர் ஏழையென்ற வித்தியாசமின்றி வாழ்வதுதான். அதுவே எனது அபிலாஷை. நான் ஒரு பொதுவுடைமைக்கட்சிக்காரன். எனதுகாலத்தில் இந்திய தேசிய காங்கிரசையும், பொதுஜனங்களையும்பொதுவுடைமைகொள்கைக்கு திருப்பிவிட வேண்டுமென்பதே எனது பலமான ஆசை''

(29-5-31வீரகேசரி)

திரு சத்திய மூர்த்தி அவர்கள்.

பிரிட்டிஷார் இந்நாட்டை விட்டு வெளியேறியபின வட இந்தியரது ஆதிக்கம் ஏற்படுவதை நான் விரும்பவில்லை.

ஃஃ ஃஃ

நம் தமிழர்கள் தங்களைவட இந்தியர்களுக்கு கீழ்ப்பட்டவர்களென நினைத்துக் கொண்டிருப்பது எனக்கு வருத்தமாயிருக்கின்றது.

ஃஃ ஃஃ

நம்மவர்கள் தங்களுக்குள்ளே சச்சரவிட்டுக்கொண்டு நம்மிடமுள்ள சிறந்த தலைவர்களை உதரித்தள்ளிவிட்டு முன்பின் கேட்டறியாத வட இந்திய தலைவர்களுக்குப்பின்னல் திரிவது எனக்கு துன்பமாயிருக்கிறது.

ஃஃ ஃஃ

நம் தமிழ் மக்களின் சுயமரியாதையை நிலை நிறுத்தவும் நம்மவர்கள் ஒத்து, வேலைசெய்யவும் இந்தியா உதவிபுரியுமாக.

ஃஃ ஃஃ

பிராமணர் பிராமணரல்லாதார் மனஸ்தாபத்திற்கு காணமெல்லாம் நம்மவரில் சிலரது போராசையும் நம்மை பிரித்துவிட்டு ஆளவேண்டுமென்று கருத்துக் கொண்ட அதிகார வர்க்கமும் தவிர வேறில்லை:

ஃஃ ஃஃ

தமிழ்நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட வர்களுக்கு எல்லாவழிகளிலும் உதவி தேவை. தமிழ் டாஷையே எல்லோரும் கற்றுக் கொள்ளவேண்டும். தமிழையே அரசாங்கபாஷையாக்கவேண்டும்.

ஃஃ ஃஃ

தமிழர்களின் சுயமரியாதைக்கும் அவர்களுக்குள்ள பதவியை பெறவும் தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்தவும் வேலைசெய்த போக்கியமான பத்திரிகையாக இந்தியா நடந்து வரவேண்டும் என்பதாக திரு. சத்திய மூர்த்தி அவர்கள் இந்தியாபத்திரிகைக்கு அனுப்பிய ஆசீச்செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

குடி அரசு

ரோடு 1931ஞ மேமீ 24உ

தீண்டாமை.

—:0:—

உலகத்திலுள்ள கொ

டுமைகள் எல்லாவற்றையும்விட, இந்தியாவில் மக்களை மக்கள் தீண்டாமை என்கின்ற இழிவு சம்மந்தமாக செய்துவரும் கொடுமையே மிகப்பெரியதாகிய கொடுமையென்றும், அதற்குச் சமானமாக வேறு எந்தக்கொடுமையையும் கூற முடியாதென்றும், எல்லா மக்களாலும் அரசியல் சமூக இயல் வாதிகளாலும் சொல்லப்பட்டுபொது மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமுமாகும். ஆனால், அது விஷயத்தில் மாத்திரம் பயன்படத்தக்க வழியில் ஏதாவதொரு முயற்சியை இதுவரையில் யாரும் எடுத்துக்கொள்ளாமலே வெறும் வாய்ப்பந்தல் போடுவதினாலேயே மக்களை ஏமாற்றிக்கொண்டு காலங்கழித்து வருவதும் பிரத்தியட்சத்தில் தெரிந்த காரியமாகும்.

சமீப காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டஒருசட்டமறுப்பு கிளர்ச்சியில் உப்புக்காய்ச்சுவது, வனத்தில் பிரவேசிப்பது, கள்ளுக்கடை மறியல் செய்வது, ஜவுளிக்கடை மறியல் செய்வது, என்பவைகள் போன்ற சில சாதாரணமானதும் வெறும் விளம்பரத்திற்கே ஆனதுமான காரியங்கள்செய்யப்பட்டு40 ஆயிரம்பேர் வரையில் ஜெயிலுக்குப்போயும்அடிபட்டும் உதைபட்டும் கஷ்டமும்பட்டதாகபெருமை பாராட்டிக்கொள்ளப்பட்டதே தவிர இந்த மிகக்கொடுமையான தீண்டாமையென்னும் விஷயத்தைப்பற்றி எவ்வித கவலையும் யாரும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் ஒருசமயம் இது மேல்கண்ட மற்றவைகளைப் போன்ற அவ்வளவு முக்கியமான காரியம் அல்ல வென்று அரசியல் காரர்கள் கருதியிருப்பார்களோ என்னவோ என்பதாக யாராவது சமாதானம் சொல்லக்கூடுமா என்று பார்த்தால் அந்தப்படியும் ஒருக்காலும் சொல்ல முடியாது என்றே சொல்லுவோம்.

ஏனெனில் "தீண்டாமை மிக்க கொடுமையானது" என்றும், "தீண்டாமை ஒழியாமல் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வராது" என்றும், "வந்தாலும் நிலைக்காது" என்றும், உயர்திரு காந்தியவர்களே பல தடவை சொல்லியிருப்பதோடு "இந்திய அரசியலில் தீண்டாமை விலக்கையே முக்கிய திட்டமாக வைத்து வேலை செய்யவேண்டும்" என்றும் சொல்லி அரசியல் திட்டத்திலும் தீண்டாமை ஒழிப்பதற்கு பிரதான ஸ்தானமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது யாவரும் அறிந்ததாகும்.

இவ்வாரம் கூடிய சேலம் ஆதி திராவிடர் மகாநாட்டில் தலைமை வகித்தராவ்பகதூர் எம். சி. ராஜா அவர்கள் தமது தலைமைப் பேருரையில் சொல்லியிருப்பது போல் அதாவது,

> "1921ம் வருஷத்தியகாங்கிரசில் சுயராஜ்யம் பெறுவதற்கு தீண்டாமையை ஒழிகவேண்டியது முதற் கடமையாகும். சுயராஜ்யம் பெறுவதற்கு முன்னாலேயே தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமேயல்லாமல் அது சுயராஜ்யம் பெற்ற பிறகு செய்யவேண்டியவேலையல்ல"

என்றும்தீர்மானித்திருப்பது மாத்திரமல்லாமல், சென்னையில் திரு. காந்தியவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும் போது,

> "தீண்டாமை யென்னும் கொடுமையை ஒழிக்காவிட்டால் சுயராஜியத்திற்கு வழியில்லை. சுயராஜ்யம் பெற மார்க்கமும் ஏற்படாது"

என்றும் சொல்லியிருக்கின்றார்.

இந்தப்படிஎல்லாம் திரு. காந்தியவர்கள் சொல்லியிருந்தும், மற்றும் காங்கிரஸ் திட்டத்தில்தீண்டாமையை முதல் திட்டமாக வைக்கப்பட்டு இருந்தும் காங்கிரஸ் இந்த விஷயத்தில் அதாவது தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தில் இதுவரை என்ன செய்திருக்கின்றது?

உண்மையைக் கூறவேண்டுமானால் காங்கிரசானது இதுவரையில் தீண்டாமை விலக்குக்காக யாதொருவேலையும் செய்யவில்லை என்று நான் தைரியமாய்க் கூறுவேன். காங்கிரசுக்காரர்கள் இந்து முஸ்லீம் பிரச்சினை ஒன்று மட்டும் தீர்ந்து விட்டால் போதுமென்று நினைக்கின்றார்கள்.

அன்றியும், "தீண்டாமை ஒழியாமல் எவ்வளவு விரிவான சுயராஜ்யம் பெரினும் அதை அடுத்த நிமிஷமே இழக்க நேரிடும்" என்றும், "சர்க்கார் நம்மை அடக்கி ஆளுகிறார்கள், நாம் தீண்டாதார்களை அடக்கியாள விரும்புகின்றோம்.ஆகையால்சர்க்காருக்கும் நமக்கும் விசியாசமில்லை. ஆதலால் தீண்டாமை யொழியும் வரை நாம் சுயராஜியத்திற் கருகதை இல்லை" என்றும் சென்ற வருஷத்தில் கூட திரு காந்தியவர்கள் சொல்லியிருக்கின்றார்"

என்று பேசியிருக்கிறார்.

மேலும் திரு. M.C.ராஜா பேசி இருப்பதாவது,

> மோதிலால் நேரு தீண்டாமைக்கு இந்துக்களே பொருப்பாளிகள் என்றும் லாலாலஜபதி, மாளவியா, ஜெயகர், சாஸ்திரி முதலிய இந்துத்தலைவர்கள் "தீண்டாமையை வைத்துக்கொண்டு சுயராஜியம் கேட்பது ஒன்றுக் கொன்று முன்னுக்குப்பின் முரணுகப் பேசுவதாகும்"

எனவும் கூறியிருக்கிறார்கள். இவைதவிர இந்து மகாசபையும்,

> "தீண்டாதார்களை கோவில், குளம், பள்ளிக்கூடம், கிணறு, ரஸ்தா ஆகியவைகளில் சமஉரிமை அனுபவிக்க உரிமை அளிக்க வேண்டும்" என்று தீர்மானம் செய்து இருக்கின்றது"

என்றும் பேசிவிட்டு கடைசியாக பேசியிருப்பது என்னவென்றால்

> "1921-ம் வருஷத்திலும் 1928-ம் வருஷத்திலும் காங்கிரசுகளில் இது விஷயமாய் செய்த தீர்மானங்கள் எல்லாம் பிறந்த உடனேயே செத்துப்போய் விட்டது. மகாத்மாவும் காங்கிரஸ் காரரும் சர்க்காரை எதிர்த்து, உப்பு சத்தியாக்கிரகம் செய்ததில் ஒரு பகுதியையாவது, இந்துமகா சபையார் முஸ்லீம்களை எதிர்த்துப்போராடும்முயற்சியில் ஒருபகுதியையாவது மேல்கண்ட தீர்மானத்தை அமுலுக்கு கொண்டுவர உபயோகித்திருப்பார்களேயானால் இந்த நாட்டில் சுயேச்சைக்கு பாதகமளித்து வரும் தீண்டாமைக் கொடுமை அடியோடு ஒழிந்து போயிருக்கும். இனியாவது மகாத்மா காந்தி இதை கவனிப்பாரா?"

என்பதாகப் பேசி இருக்கின்றார். இந்தப்படி திரு M. C. ராஜா அவர்கள் பேசி இருப்பதில் ஒரு சிறு எழுத்தையாவது எந்த காங்கிரஸ் வாதியோ அல்லது தேசிய வாதியோ ஆக்ஷேபிக்கப் முடியுமா என்று பந்தயம் கூறி கேட்கின்றோம்.

தீண்டாமை ஒழிய வேண்டும் என்கின்ற விஷயத்தில் நாம் தீண்டாதார்களை தூக்கி நிறுத்திவிடப் போவதாக எண்ணிக் கொண்டு பேசுவதாகவும், அவர்களுக்கு நாம் வக்காலத்துப் பேசுவருவதாகவும் யாவரும் நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை என்பதாக தெரிவித்துக்கொள்ளுகிறோம். மற்றெதற்காக நாம் பாடு படுகின்றோம் என்றால் அனேக விஷயங்களில் நாமும் அதாவது தீண்டாதார் அல்லாதார்கள் என்று கருதிக்கொண்டிருக்கின்ற பார்ப்பனரல்லாதார்களும், தீண்டாதாராகவும் கிட்ட நெருங்காதாராகவும் பாவிக்கப்பட்டு வருகின்றோமே என்கின்ற சுயமரியாதை உணர்ச்சியினால் தான் என்றே தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள இந்தியர்கள் ஓட்டலிலும் பொதுத்தெருக்களில் இருக்கும் காப்பிக்கடை,பலகாரக்கடை,சாப்பாட்டுக்கடை ஓட்டல்களிலும், கோவில், சில குளம்முதலியவைகளிலும், சில பொதுப் பள்ளிக்கூடங்களிலும் தீண்டாதாராகவே மதித்து ஒதுக்கப்படுகின்றோம் என்ற காரணத்தினாலேயே தான்.

கடுகளவாவது ஒரு மனிதனுக்கு சுயமரியாதை இருந்தால் இந்த விஷயங்களெல்லாம் எந்த மனிதன் மனதுக்கும் கஷ்டமாகத்தோன்றுதா என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

உயர்திரு சென்குப்தா அவர்கள் தென்னாட்டு சுற்றுப்பிரயாணத்தில் பல இடங்களில் காங்கிரஸ் சம்பந்தமாகப் பேசியதில்,

> "அமரிக்காவில் நீக்கிரோவர்களை அமரிக்கர்கள் நடத்துவது காட்டுமிராண்டித்தனம் என்று கருதி இருந்தேன். ஆனால், இப்போது இங்கு வந்து பார்த்தபிறகு அமரிக்கர்களைவிட இந்த நாட்டில் பிராமணர்கள் தீண்டாமை விஷயத்தில் காட்டுமிராண்டித்தனமாய் நடந்துகொள்ளுகி

ரூர்கள் என்பதாக உணருகிறேன்"

என்று பேசியதோடு "இந்த மாகாண காங்கிரசுக்காரர்கள் தீண்டாமை ஒழிக்கும் வேலையை விட்டு விட்டு வேறு மறியல் வேலையிலும், கொடி யெடுத்துக்கொண்டு திரியும் வேலையிலும் ஈடுபட்டிருப்பது காங்கிரசுக்கு அவமானம்" என்றும் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறார். இதை எந்தப்பத்திரிகையும் பிரசுரிக்கவேயில்லை. அதுமாத்திரமல்லாமல் கோபியில்சிலபார்ப்பனர்கள்திரு சென்குப்தாவை பேசவிடாமல் கூட்டத்தில் ஏதோ குழப்பம் செய்ததாகவும் தெரியவருகின்றது.

நிற்க, திரு. சென்குப்தா அவர்கள் மற்றொரு கூட்டத்தில் பேசும்போது,

"இந்திய காங்கிரஸ் பிரிட்டிஷாரை இந்திய இராணுவமேற்பார்வையை இந்தியர்கள் வசமே விட்டுவிட வேண்டுமென்று கேட்கின்றதே. அந்தப்படி ஒரு சமயம் இராணுவ சுதந்திரமும் இந்தியருக்குக் கிடைத்து விட்டால் ஒவ்வொரு இந்திய சிப்பாயிக்கும் இன்றைய நிலையில் ஒவ்வொரு சமையல் அறைகள் வேண்டியிருக்குமே. காங்கிரஸ் இதற்கென்ன செய்யப்போகின்றது? நாம் யுத்தத்திற்கு எத்தனை ஆள் சேர்க்கவேண்டுமோ அத்தனை ஆட்களுக்கும் தனித்தனி சமையல் அறையும், சமையல் ஆட்களும் அல்லவா நமக்கு வேண்டியிருக்கும்? இந்தத்தொல்லையை வைத்துக்கொண்டு நாம் எப்படி இராணுவத்தை நடத்த முடியும்?" என்றுகூட சொல்லி இருக்கிறார்.

சென்னை மாகாண காங்கிரஸ் வீரர்கள் வெள்ளைக்காரனைத் திட்டும் வரையில் ஒக தட்டி சிரித்துக்கொண்டும், தீண்டாமையைப்பற்றிப் பேசும்போது தலையைத்தொங்கப் போட்டு "பூமாதேவி"யுடன் இரகசியம் பேசிக்கொண்டும் இருந்தார்களே யொழிய அதைப்பற்றி சிறிது கூட கவலை செலுத்தினதாகத் தெரியவில்லை.

இவை ஒருபுறமிருக்க, சென்னை மாகாண பார்ப்பனர்கள் இப்போது புதிதாக ஒரு முயற்சி செய்து வருகின்றார்கள். அதென்னவென்றால் தீண்டாதார்களை நகரங்களுக்குள் கக்கூசு எடுக்கப்போடுவதால் பிராமணர்கள் சரியாய் நடமாடுவதற்கில்லாமல் திட்டுப்படுகின்றார்கள் என்றும், ஆதலால் ஜாதி இந்துக்களில் பார்ப்பனரல்லாதாரை மலம் எடுக்க முனிசிபாலிடியார் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

ஆகவே இவைகளுக்கெல்லாம் இப்பொழுதுதான் ஆகட்டும் இந்திய தேசிய காங்கிரசுக்கோ உயர்திரு காந்திக்கோ, வீரர் ஜவர்லால் நேருவுக்கோ உண்மையில் தீண்டாமை ஒழிய வேண்டுமென்கின்ற கவலையும் ஆசையும் இருக்குமானால் இந்த "யுத்த நிறுத்த" ஒப்பந்தத்தின் பயனாய் ஏற்பட்ட ஓய்வு காலத்தை இந்தத்தீண்டாமையை ஒழிக்கும் வேலையில் செலவிடும்படியான ஏற்பாட்டை ஏன் செய்யக்கூடாதென்று தான் கேட்கின்றோம்.

இந்தப்பெரிய சர்வாதிகாரிகளான ஏகதலைவர்களுக்கு ஒருசமயம் வேறு முகியமான அதாவது இந்து முஸ்லீம் கிறிஸ்தவ ஒற்றுமை வேலைகள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் சென்னை மாகாண காங்கிரஸ் தலைவர்களும் வீரர்களும் தொண்டர்களுமாவது ஏன் இந்த வேலையில் தங்கள் ஓய்வை செலவழிக்கக்கூடாது என்றும்தான் கேட்கின்றோம்.

இவ்விஷயம்இப்படியெல்லாம் இருந்தும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் உயர்திரு C. ராஜகோபாலாச்சாரியாரின் பணவசூல் விண்ணப்ப வெளியீட்டில் ஹரிஜன பிரசாரம் செய்வதை பிரமாதமாக குறிப்பிட்டிருக்கிறார்களேயொழிய தீண்டாமைவிலக்கைப் பற்றி ஒரு வார்த்தையும்கூட அதில் குறிப்பிடவில்லை. தீண்டாமையின்தாண்டவமும், அதன் தொல்லையும் இவர்களுக்கு தெரியாதா என்றும் கேட்கின்றோம். இந்த சமயத்தில் இந்தப்படியாக நாம் ஏன் கேட்கின்றோம் என்றால் தியாகிகளும், சமதர்மக்காரர்களும் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் வீரர்கள் "காங்கிரசினால் தான் தீண்டாமைஒழிக்கப்படுமே யொழிய மற்றபடி வேறு எந்த வழியிலும் முறையிலும் தீண்டாமை ஒழிக்கப்பட முடியாது" என்று சொல்லுவதன் மூலம் அந்தத்துறையையும் தங்களுக்கே சொந்தமாக்கிக்கொள்ள முயற்சிப்பதால் மற்றவர்கள் இவ்விஷயத்தில் செய்யும் காரியங்களுக்கும் இடையூறும் முட்டுக்கட்டையும் உண்டாகும்படியான சூக்ஷிகள் செய்வதால் நாம் எழுதவேண்டி நேரிடுகின்றதே யொழியவேறில்லை. எப்படியிருந்தாலும் இந்த சமயமானது இந்தக்காரியத்திற்கு அதாவது தீண்டாமை ஒழிப்பதற்கு மிக்க அனுகூலமான சமயம் என்றே சொல்லலாம். எப்படியெனில் ஏதோ ஒரு வகையில் சுயமரியாதை இயக்கம் செய்துள்ள கிளர்ச்சியாலும், தீண்டாதகாதார் என்னப்பட்ட சமூகத்தாருக்கு ஏற்பட்டுள்ள தீவிர உணர்ச்சியாலும் பொது ஜனங்களுக்குள் ஒருவித பரபரப்பு ஏற்பட்டிருப்பதுடன் எதிர்ப்புக்கு அதிக மரியாதை இருக்காது என்பதாகவும் தோன்றுகின்றது தான். ஆதலால் காங்கிரசில் உள்ள பார்ப்பனரல்லாத தலைவர்களும், தொண்டர்களும் தனியாகக் கூடியாவது இந்த சமயத்தில் மற்ற ஸ்தாபனக்காரர்களையும் கலக்கிக்கொண்டு ஏதாவது ஒரு முயற்சிக்கும் முந்துவார்களாக. இந்த நிலையில் தீண்டப்படாதார் என்பவர்களும் தகுந்தபடி கிளர்ச்சிசெய்தோ அல்லது தீண்டாமைக்கு ஆதாரமான 'இந்து' மதத்தைவிட்டுவிடச்செய்தோ தங்களின் இழிவுகளையும் கொடுமைகளையும் ஒழித்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டுமென்றும் வற்புறுத்துகின்றோம்.

தீண்டாதார் என்பவர்களில் ஆங்கிலம் படித்தோ அல்லது செல்வம் படைத்தோ உத்தியோகம் நியமனம் முதலியவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களால் தீவிரமான முயற்சிகள் எதுவும் செய்யப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் ஆங்காங்குள்ளவர்கள் கூடிகூடி ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியதும் மிகவும் அவசியமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

3வது மாகாண சுயமரியாதை மகாநாடு.

விருதுநகரில் நடக்க விருக்கும் 3-வது சுயமரியாதை மகாநாடானது முன் குறிப்பிட்டபடி ஜூன்-மீ 6, 7, தேதிகளில் நடத்துவது சற்று தாமதித்து அதாவது ஒரு வாரம் பொறுத்து நடத்த வேண்டியதாக ஏற்பட்டு விட்டதென்று தெரிவிக்கவேண்டியதாகிவிட்டது. எனெனில் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க ஏற்னவே இசைந்து அதை உத்தேசித்தே சமார் 1 மாதத்திற்கு முன்னதாகவே இங்கு வந்த நீலகிரியில் (ஊட்டியில்) தங்கியிருந்த உயர்திருவாளர், தீண்டாமை ஒழிப்பதற்கு மிக்க அனுகூலமான சமயம் பல்லில்வலிஏற்பட்டு அதலால் ஒரு பல் எடுக்கவேண்டியதாகியும், மேலும் அவருக்கு அந்த வலி கிற்காமல் மிகவும் தொந்திரவு கொடுத்ததால் அவர் மகாநாட்டுக்கு வரமுடியாமலும் அதுவரை இங்கு இருக்க முடியாமலும் திடீரென்று தமது ஊருக்குப் புறப்படவேண்டியதாகிவிட்டது. ஆனபோதிலும் மகாநாட்டை எந்த விதத்திலும் ஒருவாரம் முன்பின்னாகவாவது நடத்திவிடலாம் என்கிற தீர்மானத்தின் மீதே தலைவர் உயர்திருவாளர். சௌந்திரபாண்டியன் அவர்களும், மற்றும் விருதுநகர் பிரமுகர்கள் திருவாளர்கள். வி. வி. ராமசாமி, செந்தில்குமார நாடார் முதலியவர்களும் வெகு மும்மரமாகவே மகாநாட்டு வேலைகளை கவனித்துக்கொண்டு வருகிறார்கள். வேறு தலைவர் தேர்ந்தெடுத்து சீக்கிரம் மகாநாடு நடக்கும் தேதியை தெரிவிக்கப்படும்:

திரு. சத்திய மூர்த்தி.

உயர். திரு. சத்தியமூர்த்தி அய்யர் தென் இந்தியாவிலுள்ள பார்ப்பன அரசியல் வாதிகளையெல்லாம் விட மிகவும் நல்லவர் என்றே சொல்லுவோம்—அவருக்கு சூது வஞ்சகம் ஆகிய காரியங்கள் அவ்வளவு அதிகமாய் அதாவது பிறத்தியார்கண்டுபிடிக்கமுடியாத படி செய்வதற்குத் தகுந்த அளவு தெரியாது எனறே சொல்லுவோம். ஆதலால் இப்படிப்பட்டவர்களால் பார்ப்பனரல்லாதாருக்கு அதிகமான கெடுதி ஒன்றும் செய்துவிட முடியாது. அந்த முறையிலேயேதான் அவரை நல்லவர் என்று சொல்லுகின்றோம். அவருடைய பொதுநல சேவையின் ஆரம்பமானது மிகவும் பரிசுத்தமாகவே ஆரம்பிக்கப்பட்டது என்பதே நமது அபிப்பிராயம். ஆனால் பிறகு அவரை அய்யங்கார் கூட்டப்பார்ப்பனர்கள் அப்பர்கூட்டப் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் உபயோகித்துக்கொள்ள நினைத்து திரு. சத்தியமூர்த்தியை மிகவும் தாக்கி வைத்துக்கெடுத்து விட்டார்கள். அவரும் இந்த அய்யங்கார் கூட்டத்தையும் அவர்களது அரசியலையுமே நம்பி தன்னைப்பற்றி அதிகக்கவலை எடுத்துக்கொள்ளாமல் போய் விட்டதினாலும் நமக்கு என்ன ஒரு கொள்கையை பிடித்து வைத்துக்கொள்ளாமல்போ

னதினாலும் கிரமப்படி அவருக்கு இருந்திருக்கவேண்டிய மதிப்பு இல்லாமல் போய்விட்டது. அவர் மிதவாதக் கூட்டத்திற்குள் இருந்திருப்பாராலால் இன்றையதினம் அவரது சொந்த நிலை வேறாகவே இருந்திருக்கும். திருவாளர்கள் கஸ்தூரி ரங்கய்யங்கார், எ. ரங்சாமி அய்யங்கார், எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் முதலிய அய்யங்கார்கள் தங்களது தகுதிற்குமேல் பெரியமனிதர்களாவதற்கு திரு. சத்தியமூர்த்தி அய்யர் எவ்வளவோ காரணஸ்தாவார் என்பது நமக்கு தெரியும். அக்கூட்டம் இவருக்குசிறிது நன்றியும் விசுவாசமும் காட்டாமல் போனது பெரிய குறைமேயாகும். ஆனால் அரசியலில் பெரிய மனிதர்கள் என்பவர்களுக்கு நன்றியற்ற தன்மை இயற்கையேயாகும்.

நிற்க, திரு. சத்தியமூர்த்தி அய்யர் சமீபத்தில் சொன்ன ஒரு விஷயத்தில் அர்த்தம் இல்லாமல் இல்லை. அதாவது 'தென்னாட்டில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சண்டை காரணமாக வடநாட்டில் உள்ள மூன்றுந்தர ஆசாமிகள் எல்லாம் பெரியதலைவர்கள் ஆகிவிடுகின்றார்கள்' என்று சொன்னது அர்த்தமற்றதும் பொறுமையுடையதுமான வார்த்தை என்று நாம் ஒப்புக்கொள்ள முடியாது. வடநாட்டில் இருந்து தென்னாட்டுக்கு அழைத்து வரும் தலைவர்கள் எல்லோரும் தென்னாட்டு அரசியல் வாதிகள் விளம்பரம் செய்யும் அளவுக்கு மரியாதை செய்துவரும் அளவுக்கு தகுதியுடையவர்கள் என்று சொல்லமுடியாதென்பதே நமது அபிப்பிராயமுமாகும். ஆனால் தென்னாட்டில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சண்டையும் காங்கிரசுக்கு விரோதமாக தென்னாட்டில் இருந்து வரும் உணர்ச்சியும் அதனால் தென்னாட்டில் உள்ள பார்ப்பனர் எவருக்கும் பார்ப்பனரல்லாத அரசியல் வாதிகளுக்கும் மரியாதை இல்லாமல் போன காரணமுமே வடநாட்டு ஆசாமிகளுக்குதென்னாட்டில்தாராள கும்பம் எடுத்தாகவேண்டிய நிலையைகொண்டுவந்துவிட்டுவிட்டது: உண்மையைப் பேசப்போனால் திரு. காந்திக்கும் கூட இவ்வளவு மரியாதை ஏற்பட்டதற்கு காரணமும்தென்னாட்டில்பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார்சண்டையேதவிர வேரல்ல. எப்படியெனில் தென்னாட்டு பார்ப்பனரல்லாதார் தலையில் கையை வைக்க திரு. காந்தியை மகாத்மா ஆக்கவேண்டிய நிர்பந்தம் நமது பார்ப்பனருக்கு ஏற்பட்டுவிட்டது. தென்னாட்டுப்பார்ப்பனர்கள் மாத்திரம் சாதாரணமாக தீண்டாமை என்னும் விஷயத்தில் உண்மையில் (சூது புரட்டு இல்லாமல்) மனப்பூர்வமாய் விட்டுக்கொடுத்திருப்பார்களேயானால் திரு. காந்தியைவிட பெரிய யோக்கியதையையுடையவர்களாக ஆவதற்கு பலர் இருநாட்டுப் பார்ப்பனரிலும் இருக்கின்றார்கள் என்பது நமக்குத்தெரியும். என்ன செய்வது அவர்கள் நிலைமை அப்படி ஏற்பட்டுவிட்டதால் அவர்களுக்கு இருக்கவேண்டிய கிரமமான மரியாதைஇல்லாமல் போய்விட்டது டன் மரியாதைக்குலாயக்கில்லாதவர்களுக்கும் இவர்கள் மரியாதை செய்யவேண்டியவர்களாகி விட்டார்கள். நமது நாட்டுப்பார்ப்பனர்களில் கல்வி, செல்வம், சக்தி, முதலிய குணங்கள் படைத்தவர்கள் பலர் இருந்தும் அவர்களுக்குள் ஒருவருக்காவது தேசத்தைப்பற்றியோ மக்களைப் பற்றியோ உண்மையாய் கவனிக்கமுடியாமல் தங்கள்உயர்வைநிலைநிறுத்திக்கொள்வதற்கே பாடுபட வேண்டியகவலையை முக்கியமாய்க் கொள்ளவேண்டிய நிலைமைவற்பட்டுவிட்டதால் அவர்களது மற்றப்பெருமை பிரகாசிக்க இடமில்லாமல் போய்விட்டது. மற்றும் பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளும் எத்தனைபோ பட்டேல்களுக்கும் எத்தனை டஜன் கணக்கான சென்குப்தாக்களுக்கும், நரிமேன்களுக்கும் சமமான தனிமனிதர்கள் எத்தனையோ பேர்கள் அரசியலிலேயே இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தலையெடுக்கக் கூடாது என்பதாக பார்ப்பனர்களே சூசகி செய்து வந்ததால் வெளிநாட்டு வேஷக்காரர்களுக்கு நமது நாட்டில் மதிப்பு ஏற்பட வேண்டியது அவசியமாகிவிட்டது. அதிகம் பேசுவானேன் வெள்ளைக்கார ராஜியம் இந்தியாவில் இருப்பதற்கு என்ன காரணமோ அதே காரணம்தான் வெளிமாகாணக்காரர்கள் நமது மாகாணத்தில் மகாத்மாக்களாவதற்கும் மற்றும் பெரிய தலைவர்கள் தேசபக்தர்கள் முதலாகியவர்கள் ஆவதற்கும் காரணமாகி இருக்கின்றது.

நியாயமாய் பேசுவோமானால் தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதார் என்னகாரியத்திற்காக திரு காந்தியை மகாத்மா என்று கூப்பிடவேண்டும் என்பதே நமக்கு விளங்கவில்லை.

திரு காந்தியின் அரசியல் அபிப்பிராய மாகட்டும், சமூதாய அபிப்பிராய மாகட்டும், எழைத்தொழிலாளிகளைப்பற்றிய அபிப்பிராய மாகட்டும், மற்றும் அவரது பகுத்தறிவு, நிலையான கொள்கை முதலிய வைகளைப்பற்றிய அபிப்பிராயமாகட்டும் எதாவது ஒன்று இந்தநாட்டு பார்ப்பனரல்லாத மக்களில் யாராவது ஒருவர் ஒப்புக கொள்ளத்தக்கதாக இருக்கின்றதா—யாராவது ஒப்புக்கொள்ளுகின்றார்களா? என்று கேட்கின்றோம். அரசியல் உலகில் அரசியல் பிரசாரத்தை தொழிலாகக் கொண்டவர்களைத்தவிர அரசியல் பத்திரிகையை நடத்துவதை தொழிலாகக் கொண்டவர்களும் அரசியல்வாதிகளால் பெரியபதவிபட்டம் பெற்று பெரிய மனிதர் ஆனவர்களும் ஆகவேண்டி எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்களும் ஆகிய கூட்டத்தில் உள்ள பார்ப்பனரல்லாதார்களில் எதாவது ஒருவர் திரு காந்தியின் கொள்கைகளை உண்மையில் ஒப்புக்கொள்ளுகின்றார்களா என்று கேட்கின்றோம். ஆனால் இங்கு ஒருவருக்கு ஒருவர் எற்பட்ட பொறுமை, அசூயை. போராசை, போட்டி ஆகிய காரியங்களால் திரு காந்தி மகாத்மாவாகவும், மற்ற மூன்றுந்தர ஆள்கள் பூராணகும்பமெடுக்க வேண்டிய சுமைவர்களாகவும் விளங்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். அது போலவேதான் இனியும் அநேக காரியங்கள் நடைபெறுகின்றன. இவைநடக்காமல் இருக்கவேண்டுமானால் அதற்குத்தகுந்தவழி திரு சத்தியமூர்த்தி அய்யருக்கு இல்லாமலில்லை. அதென்னவென்றால் அரசியல் புரட்டை தாராளமாய் வெளியாக்க வேண்டும். எப்படியாவது தங்கள் சமூக ஆதிக்கம் நிலைத்திருந்தால் போதும் என்கின்ற எண்ணத்தை விட்டுவிடவேண்டும். ஜாதிவித்தியாசத்தையும் தீண்டாமையையும் ஒழிப்பதுதான் நமது முக்கிய வேலை என்றும் அதுவேதான் இந்த நாட்டில் இருந்து வெள்ளைக்கார ஆதிக்கத்தை ஒழிக்கும் வேலை என்றும் கருதவேண்டும். இந்த ஒரு காரியம் ஒப்புக்கொண்டால் மற்ற காரியத்தில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் விட்டுக்கொடுத்து ராஜி செய்து கொண்டு எல்லோருமே, ஒத்துழைக்க எற்பாடு செய்யமுடியும். இந்தக் காரியத்தில் திரு சத்தியமூர்த்தி போன்றவர்கள் இரங்கி வேலை செய்தால் அவர் வடநாட்டுத் தலைவர்களுக்கு மேலானவர் என்பதாக ஆவார் என்பது மாத்திரமல்லாமல் தென்னாட்டிற்கும் ஒரு மாபெருந்தலைவராய் விளங்கக் கூடியவராவார் என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

ஈரோட்டில் போலீஸ் அமளி.

18—5—31.ந்தேதி மாலை 5 மணிக்கு சுமார் 4, 5 ரூபாய் பெறுமான ஒரு திருட்டு மோதிரத்தைத் விலைக்கு வாங்கிய ஒரு பையன் ஏதோ ஒரு ஷராப்பு க்கடையில் இருப்பதாக ஈரோடு போலீசு சப்-இன்ஸ்பெக்டர் கேள்விப்பட்டு இரு சப்-இன்ஸ்பெக்டர்கள் ஈரோடு பிரபல ஷராப்பு வியாபாரியாகிய உயர்திரு. மாரிமுத்து ஆசாரி கடைக்குச் சென்று விசாரித்ததாகவும், அந்த ஆசாரியார் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அதில் திருப்தி அடையாத சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் அந்த ஆசாரியாரை ஓங்கிக் கண்ணத்தில் அடித்ததாகவும், அதற்காக அங்கு சுற்றியுள்ள ஜனங்களுக்கு மனவருத்தம் ஏற்பட்டு சப்-இன்ஸ்பெக்டரை கண்டித்ததாகவும், அதற்காக கடைவீதியானதால் ஜனங்கள் சீக்கிரம் கூடிவிட்டதாகவும், இதில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் நயந்து பதில் சொல்லிக் கொண்டிருக்க மற்றொரு சப-இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்குச் சென்று பல கான்ஸ்டேபிள்களை கத்தி, தடி, துப்பாக்கிகளுடன் கூட்டிக் கொண்டு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டருடன் வந்து, திரு. மாரிமுத்து ஆசாரி உள்பட சிலரைக் கைது செய்து, ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனதாகவும் சொல்லப்படுகின்றது. இது இப்படியிருக்கப் பொது ஜனங்கள் எங்கு திரு. மாரிமுத்து ஆசாரியாரை போலீசார் அடித்து விடுவார்களோ என்றகவலை கொண்டு சுமார் 2000 பேர்வரையில் போலீஸ் டேஷனைச்சுற்றிகூடிவிட்டார்கள். பெரிய பேங்கர்களும், வியாபாரிகளும் ஜாமீன் கொடுப்பதாகச் சொல்லியும், போலீசார் அவர்களை ஜாமீனில்விடாததால் டிப்டி கலெக்டர் ஜனப். ரான்பகதூர் ஜிண்டா சாயபு அவர்களிடம் சென்று இவ்விஷயத்தைச் சொல்லிக்கொண்டவுடன் அவர் உடனே புறப்பட்டு வந்து அரஸ்டு செய்யப்பட்டவர்களை ஜாமீனில் விடச் செய்ததும், கூட்டம் கலைந்துவிட்டது. இரண்டு சிறு பையன்களை மாத்திரம் இன்னமும் விடுதலை செய்யாமல்

இருகின்றார்கள். அன்று இரவு பொது ஜனங்கள் ஒன்றுகூடி போலீஸ் ஸ்டேஷனில் காவல் புரியாதிருந்தால் போலீசார் திரு. ஆசாரியையும், மற்ற ஆட்களையும் கையப்புடைத்திருக்கக்கூடும் என்றேனல்லாரும் கருதினர்கள். ஆனல் ஒரு அடிகூட அப்புறம் யாருக்கும் விழவில்லை. இப்போது போலீசார் திரு. மாரிமுத்து ஆசாரி அவர்கள் மீதும், திரு. மாரிமுத்து ஆசாரி போலீசார் மீதும் பிராதுகள் செய்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இது தவிர ஈரோடு பொது ஜனங்கள் காந்தி சவுக்கில் சுமார் 2000 பேர்கள் ஒருகூட்டமாகூடி போலீசாரின் அதிக்கிரம நடவடிக்கையை கண்டித்துத் தீர்மானங்கள் செய்து மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். விஷயம் எப்படி இருந்தாலும் கோவை ஜில்லா கலெக்டர் அவர்களாவது, ஜில்லாப் போலீஸ் சூப்ரெண்டெண்ட் அவர்களாவது தயவு செய்து ஈரோடு வந்து இருதரப்பாரையும் கூப்பிட்டு விசாரித்து தகுந்த மேற்கொண்டு நடவாமல், தேவையானல இருவர்களுக்கும் புத்திசொல்லி விஷயத்தை இவ்வளவுடன் நிறுத்தி விடுவது போற்றத்தக்கதாகும்.

இல்லாதவரை போலீசுக்கு ஒரு கெட்ட பெயரும், ஜனங்களிடம் ஒரு அலுவலியமான பாபாவும் இருந்து கொண்டு மெனக்கேடும், பணச்செலவும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இவ்விஷயத்தில் வியாபாரிகள் எல்லாம் ஒன்றுகூடி இருகின்றார்கள். மற்றும் இதற்குமுன் பொது ஜனங்களில் பலரும் ஆதரவாய் இருகிறார்கள். இதன் வெற்றி தோல்வியானது ஜனங்களுக்கும், போலீசுக்காருக்கும் என்பதாக திரும்பி விடக்கூடும் போல் தெரிகின்றது. கடைசியாக ஒரு விஷயம். டிப்டி கலெக்டர் திரு கான்பகதூர் ஜின்டா சாயபு அவர்கள் அந்த இரவில் தைரியமாய் வெளிவந்து அரஸ்ட்செய்யப்பட்டவர்களை ஜாமீனில விடச்செய்து ஜனங்களுக்குச் சமாதானம் செய்து எவ்வளவோ பெரிய கலவரம் நடக்க இருந்ததை ஒன்றுமில்லாமல்செய்தது போற்றத்தக்கதேயாகும்.

பார்ப்பன வக்கீல்கள், மாணவர்கள் "காங்கிரஸ்" பிரசாரம்

இப்போது கோர்ட்டும், பள்ளிக்கூடமும் மூடப்பட்டு லீவு களாய் இருப்பதால் அந்த நாளைக் காங்கிரஸ் பிரசாரமென்னும் பார்ப்பனப் பிரசாரத்திற்காக ஊர் ஊராய் சென்று வெகு கவலையாய்ப் பிரசாரம் செய்யப் பார்ப்பன வக்கீல்களும், மாணவர்களும் உபயோகிக்கின்றார்கள்.

இதுபோன்ற கவலை பார்ப்பனரல்லாத வக்கீல்களுக்குள்ளும், மாணவர்களுக்குள்ளும் சிறிதும் யாருக்கும்கிடையாது. பார்ப்பனரல்லாத வக்கீல்களையும், மாணவர்களையும் காங்கிரஸ் பிரசாரம் செய்யும்படி நாம் விரும்பவில்லை. ஆனல் பார்ப்பனப் புரட்டை எடுத்து வெளியிடும் பிரசாரம் ஏன் செய்யக்கூடாது என்றுதான் கேட்கின்றோம். பார்ப்பனரல்லாத சமூகம் ஒரு மனிதன் தன்னை தூக்கி எதோ விடுவதன் மூலமே மேலே றலாம்என்று நினைத்தால் எவ்வளவுதான் தூக்கிவிடமுடியும்? கைக்கு எட்டும் அளவுக்குமேல் எப்படித்தான் தூக்கிவிடமுடியும்? நமது நாட்டில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் என்பது வெறும் உத்தியோக ஆத்திரமே அல்லாமல் அதுவும் தனிப்பட்டவர்கள் தனது தனது சொந்த உத்தியோக நலத்திற்கு ஆத்திரப்படுவதல்லாமல் அந்த சமூக நலத்திற்குப் பாடுபடுவது என்பது யாரிடத்திலுமே அரிதாயிருக்கின்றது.

படித்த மகமதிய சகோதரர்களிடமும் அதுபோலவேதான் சமூக உணர்ச்சி என்பது மிக அரிதாகவே இருக்கின்றது. இந்த சமயத்தில் ஒரு மகமதிய வக்கீலாவது, மாணவராவது வெளிக்கிளம்பி தங்களது உரிமைக்கு விரோதமாய் செய்யப்படும் பிரசாரத்தை ஒழிக்க இதுவரை யாரும் புறப்படவில்லை. யாரோ வேலை செய்து உத்தியோகங்களைக்கற்பனைசெய்து ஏதாவது சீர்திருத்தம் என்பதாக ஒன்றைக் கொண்டுவந்துவிட்டால் அவ்வுத்தியோகங்களில் "எனக்கு பங்கு கொடு" என்று கேட்கமாத்திரம் அந்த சமயத்தில் எல்லோருமே தயாராக இருக்கின்றார்களே யொழிய பாமரமக்களுக்காக பாடுபட்டு அறிவூட்டி, அவர்களை ஏமாற்றத்திலிருந்து தப்புவித்து, சமத்துவத்துடன் வாழவும், உண்மையை உணரவும் செய்வதில் யாரும் கவலை எடுத்துக் கொள்ளுவதே கிடையாது.

ஆகையால் பார்ப்பனரல்லாத வக்கில்கள், மாணவர்கள், முஸ்லீம் வக்கீல்கள், மாணவர்கள் தைரியமாய் வெளிச் சென்று பார்ப்பனப் புரட்டை வெளியாக்கவேண்டுமென்று வற்புறுத்துகின்றோம்.

சி. இராஜகோபாலாச்சாரியாரின் வேலைத்திட்டம்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உயர்திரு சி. இராஜகோபாலாச்சாரியர் அவர்கள் பணம் வசூலிப்பதற்காக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் அந்தப் பணத்தின் மூலம் செய்யப்படும் வேலைத் திட்டங்களையும் குறிப்பிட்டிருக்கின்றார் அவைகளில் 5 வது திட்டமாக:—

ஹிந்தி:—"ஜனங்களிடையே இருக்கும் குருட்டு நம்பிக்கையையும், மூடப்பழக்கவழக்கங்களையும் போக்கி பகுத்தறிவும் ஏற்படுவதற்குப்பாடுபட வேண்டும்."

என்பதாக குறிப்பிட்டிருக்கிறார். இது தற்காலத்திற்கு ஏற்றதொரு வேஷமேயானலும் இவர்களும் இவர்களது சிஷ்யகோடிகளும் செல்லுமிடங்களிலெல்லாம் பாரதக்கதையையும், ராமாயணக்கதையையும், களன் கதையையும் மற்றும்விஷ்ணுவின் 10 அவதாரக்கதைகளையும் பிரசங்கம் செய்து, பிரசாரம்செய்துகொண்டே போவதுகுருட்டுநம்பிக்கையையும், மூடப்பழக்கவழக்கங்களையும் ஒழிகத பகுத்தறிவை உண்டாக்கும் பிரசாரமாகுமா? என்று வணக்கத்துடன் கேட்கின்றோம்:

அன்றியும் அந்த ஷை அறிக்கையில் உள்ள 8 திட்டங்களிலும் தீண்டாமை விலக்கு திட்டத்தை மாத்திரம் வெகு ஜாக்கிரதையாகவேமத ஆச்சாரியாவர்கள் அடியோடு ஒரு வார்த்தை கூட சொல்லாமல் விட்டிருக்கிறது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆந்திராவிடர் மகாநாடு.

திருச்சினுப்பள்ளிஜில்லா லால்குடி தாலுகா ஆந்திராவிடர்முதலாவது மகாநாடு கல்லகம்கிராமத்தில் 30-5-31 தேதி சனிக்கிழமை திருச்சி ஜில்லாபோர்டு தலைவர் உயர் திரு. டி. எம். நாராயணசாமிபிள்ளை எம். ஏ. பி. எல். எம். எல். சி. அவர்களின் தலைமையில் நடைபெறுமென மகாநாட்டின் காரியதரிசி எழுதுகிறார்.

மரணம்.

கோட்டாறுக்கு சமீபமாயுள்ள இடாலக்குட்டியில் சுயமரியாதைப் பிரசாரம் செய்து வந்த திரு. கணபதி யவர்கள் 5.5-31 ந்தேதி இரவு 7 மணிக்கு மாரடைப்பாலென ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதமொழிக்கும் பிரசாரம்

ருஷியாவில் சீட்டாட்டம்

எல்லா மதங்களும் ஒழிந்துவிட வேண்டுமென்பதே குடியரசுகத்தின் கருத்தென அன்பர்கள் அறிவர். ஆகவே மத மொழிக்கும் பிரசாரம் செய்ய அங்காட்டில் ஒரு நூதனவழி கண்டுபிடிக்கப்பட்டுளது. அதாவது இப்பொழுது அத்தேசக் கடைகளிலெல்லாம் ஒரு புதிய வகையான சீட்டுகட்டுகள் விற்கப்படுகின்றன. இக்கட்டிலுள்ள சீட்டுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருமதத்தை தூஷித்து சித்திரங்கள் அமைக்கப்பட்டுள. 'ஆடுதன்' என்றநாம வழக்கமாகச் சொல்லும் சீட்டுகளில் ஒரு ரோமன் கதோலிக் பாதிரிமார் ஒரு பெண்மீது காமங்கொண்டு நினைத்து உருகுவதுபோன்ற படமிருக்கின்றது. டயமன் சீட்டுகளில் யூதர்களது மதச்சடங்குகளைக்கேலிசெய்யும் படம் வரையப்பட்டிருக்கிறது. ரஷியாவிலுள்ள கிறிஸ்தவமதத்தைப் பழிக்குஞ் சித்திரம் ஸ்பேட், சீட்டுகளிலும், கிழ்காட்டு மதங்களையும், புத்த மதத்தையும் எள்ளி நகையாடும் படம் 'கிளாவர்' சீட்டுகளிலும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

மத இருளால் மக்கள் அல்லலுற்றதையும், காஸ்திகத்தால் அவர்கள் இனி சேஷமடைய விருப்பதையும காட்டும் வகையில் 'ஆல்' சீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சீட்டின் ஒரு பாதியில் காட்டுமிராண்டி வேஷங்கொண்டவர்கள் தம்பட்டம் அடித்து, தம் மதக்கொள்கையை ஏற்காதவர்களைத் தண்டிக்கசவுக்குகளும், கழுமரங்களும் தயார்செய்வதுபோலும், இன்னொரு பாதியில் விஞ்ஞான சாஸ்திரச் சின்னங்களான இயந்திரங்கள் முதலியனவும், பள்ளிக்கூடங்கள் மிலிபாட்டுக்கருவிகள் இளைஞர்க் குறிக்கும் பொம்மைகளும் இருக்கின்றன. இச்சீட்டின் ஒரு முனையில், "முன் அவ்வாறு இருந்தது" என்றும் இன்னொரு முனையில் "இனி இங்ஙனமிருக்கும்" என்றும் எழுதப்பட்டுளது. சீட்டுகளின் பின் புறத்தில் மிகார உருக்கொண்ட ஒரு பேய் மாபாவம் செய்தவர்களின் ஆத்மாக்களைக் கொண்டு நரகத்துக்கு செல்வது போன்ற சித்திரம் இருக்கின்றது. "இந்தியா"

கோவை செங்குந்தர் 18-வது மகாநாடு.

கோயமுத்தூர் ஜில்லா செங்குந்தர் 18-வது மகாநாடு 22-5-31-உ காலை 10-மணிக்கு ஈரோட்டுக்கு அடுத்தசிறுவலூரில் மதுரைவக்கீல்உயர்திருலக்ஷ்மிபதி பாரதி M. A., B. L., அவர்கள் தலைமையில் கூடியது. மகாநாட்டுக்கு தனியாய் போடப்பட்டிருந்தபந்தல்மிகஅலங்காரமாய்சிங்காரிக்கப்பட்டு இருந்ததுடன் சுமார் 500 பேர்கள் பிரதிநிதியும் விசிட்டர்களுமாக விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் திங்களூர் அப்பிச்சிமார் மடாதிபதி உயர்திருவாளர்கள் ஆண்டமுத்துக் கவுண்டர், காஞ்சிபுரம் நாகலிங்க முனிவர் ஈ. வெ. இராமசாமி, சென்னிமலை, கிருஷ்ண முதலியார், என். லக்ஷ்மண முதலியார், சி. கே. ராமசாமி முதலியார், சி. பு. துரைசாமி முதலியார், டி. பாலகிருஷ்ண முதலியார், ஈரோடு வக்கீல் ரர்ஜா பி. ஏ., பி. எல்., சி. வி. ராமசாமி முதலியார், சி. பி. சுப்பையா, சி. பி. விஸ்வநாதம், எஸ். கணேச முதலியார், காங்கயம் நடேசன், வேலுமயில், சித்தப்ப முதலியார், முத்துமாணிக்க முதலியார், சோளவ ராமசாமி முதலியார் மற்றும் ஜில்லாவின் பல பாகங்களில் இருந்தும் அநேக கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். தலீவர் திரு லக்ஷ்மிபிரதபாரதியாருக்கு வழியில் தடுப்பபதியில் செங்குந்த வாலிப சங்கத்தாரால் வரவேற்று திரு ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையில் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு சிறுவலூர் சத்திரத்தில் இருந்து தலீவரை வாத்தியங்களுடன் ஊர்வலமாய் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். கூட்டம் ஆரம்பமானவுடன் சில பாட்டுகள் பாடி முடிந்ததும் வரவேற்பு உபன்யாசம் படிக்கப்பட்டபின் தலைவர் தேர்தல் ஆனதும், காரியதரிசி அவர்களால் வருட அறிக்கை படிக்கப்பட்டது. பிறகு திரு ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு உபசாரபத்திரம் ஒன்று சங்க நிரந்தரத்தலைவர் கே. கிருஷ்ண முதலியார் அவர்களால் படித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் தலைவர் திரு பாரதி அவர்கள் முகவுரை உபன்யாசத்தில்

சங்கம் இந்த 18 வருஷமாய் செய்துள்ள வேலைகளைப்பாராட்டி பின் வகுப்பு மகாநாடுகளைப் பற்றியும்அவைகள் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் மற்றும் மூடப்பழக்க வழக்கங்களைஒழிக்க வேண்டும் என்பதுபற்றியும் அவைகள் அனேகம் சூழ்ச்சியாலும், வஞ்சகத்தாலும், சுயநலக்காரர்களால் ஏற்பட்டதென்றும், 45 நிமிஷம் பேசினார். பிறகு திரு ஈ.வெ.இராமசாமி இந்திய பொருளாதாரம் என்பதுபற்றி 1½ மணி நேரம் பேசினார். பிறகு சாப்பாட்டிற்கு மகாநாடு கலைந்து மறுபடியும் 3 மணிக்கு மகாநாடுகூடிற்று. கோவை திருவாளர் சி. பி. சுப்பையா அவர்கள் காச்சி காங்கிரஸ் என்பது பற்றியும், மூடப்பழக்க வழக்கம், வீண் செலவு, என்பவைகளைப்பற்றியும 1 மணி நேரம் பேசினார். பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றபட்டு நிர்வாக கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டு தலைவர் முடிவுரைக்குப்பின் மகாநாடு இரவு 8 மணிக்கு முடிந்தது.

தஞ்சைஜில்லா முஸ்லீம் மகாநாடு.

கும்பகோணத்தில் 31 5-31 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். மௌலானு மௌல்வீ சையத் மூர்தஜா ஸாஹிப் எம். எல். ஏ. அவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள். டாக்டர் சையத் தாஜூதீன் ஸாஹிப் எம். எல். சி. அவர்கள் வரவேற்புக்கழகத் தலைவர். முஸ்லீம் சங்கங்களும் பொது ஸ்தாபனங்களும் தங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

பிரதிநிதிக்கட்டணம் ரூ 2--0--0

எஸ். அப்துல்மஜீது,
விளம்பர அதிகாரி.

பொதுப்பள்ளிகளில் மத போதனைகள் கூடாது.

பொது ஜனங்கள் வரிப்பணத்திலிருந்து அரசாங்கத்தாரால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் மதசம்மந்தமான படிப்புகள் படிப்பிக்கக்கூடாதபடி ஒரு புதிய விதிபைபடிப்பு சம்மந்தமான சட்டத்தில்ஏற்படுத்த வேண்டும் என்பதாகஒருதீர்மானம் லண்டனில்கூடிய ஒருபொதுக்கூட்டத்தில் பார்லிமெண்ட்மெம்பர்கள் முதலியவர்கள்இருந்து அவர்களாலேயே நிறைவேற்றுப் பட்டிருக்கின்றது.

தேர்தல்.

நாகர்கோவில் சட்டசபை தேர்தல் நாகர்கோவில் தோவாளதாலுக்காவுக்கு நாகர்கோவில் வக்கில் M. சிவதாணுப்பிள்ளை அவர்களும், நாகர்கோவில் டாக்டர் N. சுந்தரம்பிள்ளை அவர்களும் அபேட்சகராக நிற்கிறார்கள்.

(9ம பக்கத்த தொடர்ச்சி)

தான் நான் படுக்கைக்குச்சென்றேன் இப்பொழுது வந்திருக்கும் டிப்டி கலெக்டர் மிகவும் நல்லவர். அவர் இவ்விஷயத்தைகன்முகவிசாரணைசெய்து, முடிவுகூறுவாரென்பதேஎன்னுடைய அபிப்பிராயமாகும். ஆகையால் நாம் அடிக்கடி கூட்டம்போடுவதோ வாலிபர்களைத் தூண்டிவிடுவதோ ஆகியகாரியங்கள் செய்யக்கூடாது. அதிகாரிகளைப் பரிகாசம் செய்யவும் கூடாது.

கோர்ட்டில் விசாரணை நடக்கும் பொழுது, நாம் பொருமையாகவும் அடக்கமாகவும் நடந்துகொள்ள வேண்டும். அதிகமாகக்கூட்டம்போட்டு, விசாரணை நடைபெறுமலும் செய்துவிடக்கூடாது. அம்மாதிரி இன்று அதிகமாக ஜனங்கள் கூட்டம் கூடியதலால்தான் இக்கக்கேசை இம்மாதம் 25-ந் தேதி, காங்கயத்தில் விசாரணைக்குப் போட்டிருப்பதாக இப்போது நான் கேள்விப்படுகிறேன். ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மையோ அது எனக்குத் தெரியாது. இம்மாதிரியான புகார்களுக்கு நாம் இடந்தராமல் நடந்துகொள்ள வேண்டும். காங்கயத்தில் விசாரணை போட்டிருப்பதானது நமக்குத்தான் அதிக கஷ்டம். அவர்களோ சர்க்கார் செலவிலேயே போய் வருவதுமல்லாமல், சர்க்காரார் அவர்களுடைய செலவுக்குக் கொடுக்கிற பணத்திலும் சிறிது மீதி செய்து கொண்டு லாபமடைவார்கள். ஆனால் நமக்கு எல்லாம் கைசெலவேயாகும்.

மேலும் போலீசாருக்கு இதனால் அதிக செலவும் ஏற்படப்போவதில்லை. அநியாயமெனத் தோன்றினாலும், அல்லது இந்தக்கேஸ் அப்பீலில் நிற்காது, உடைபட்டுப்போகும்என்று தோன்றிய பொழுதிலும் கூட, சில அதிகாரிகள் வேண்டுமென்றே கடவுடிக்கை நடத்தி அலைந்து திரியட்டும் என்று சமாதானம் செய்து கொள்ளுகிறார்கள். "எனக்கென்ன செலவு வந்தது? இரண்டு வரி எழுதவேண்டியதுதானே. அவன் போய் செலவு செய்து கொண்டு அலைபட்டுமே" என போலீசு அதிகாரிகள் கூறுகின்றதாகச் சொல்லுகிறார்கள்.

ஆதலால் இதற்காக இனி எவ்விதக் கிளர்ச்சியும் வேண்டாம். மேலும் சிலர் நம்மைத் தூண்டிவிட்டு மேன் மேலும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் கூறுவார்கள். நமக்கு இருக்கும் ஆத்திரத்தில் நாம் அவர்களுடைய வார்த்தைகளுக்கு இணங்கி நடந்தோமேயானால், அவர்கள் "சென்னைக்குச் செலலாம்", "டில்லிக்குச் செல்லலாம்" "ஒரு கை பார்த்து விடவேண்டும்" என பலவாறாக நம்மைத் தூண்டிக் கொண்டிருப்பார்கள். பிறகு அவர்கள் கண்ணுக்குக்கூட கிடைக்கமாட்டார்கள். நமக்கும் இரண்டு நாள் வரையிலும் தான் இந்த ஆத்திரம் இருக்கும். பிறகு அது தானாகவே அமர்ந்து விடும்.

இதுவரையிலும் திரு. மாரிமுத்து ஆசாரியார் இருந்தவிடமே தெரியாமலிருந்தது. ஆனால் இந்த சம்பவத்தால் அவருடைய பெயர் எல்லாருக்கும் தெரியவந்தது. இவ்வாறுகூட்டம் போட்டு, சில தீர்மானங்களை நிறைவேற்றிவிடுவதால் மட்டும் நமது பொறுப்பு முடிந்து விட்டதாக நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. வேண்டுமானால், அல்லது அவசியம் நேர்ந்தால் எல்லாரும் ஆள் ஒன்றுக்கு 5 அல்லது 10 கொடுத்தாவது அவருக்கு நியாயம் கிடைக்கும்படி செய்யவேண்டும். இப்பொழுது இவ்விடத்தில் ஒரு தீர்மானம் பரேரேபிக்கப்போகிறார்கள். அதைக்கவனித்து நிறைவேற்றுவீர்களென நம்புகிறேன் என உரைத்து உட்கார்ந்தார்.

பிறகு கருங்கல்பாளையம் திரு. இரதினம் ஆசாரி அவர்கள் எழுந்திருந்து கீழ்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

"இவ்வூரில் ஒரு போலீஸ்அதிகாரி ஒரு கண்ணியமான வியாபாரியாகிய திரு. மாரிமுத்து ஆசாரியார் அவர்களை அவமரியாதையாகப்பேசி, அடித்ததின் பலனாய் இவ்வூர் பொது ஜனங்களுக்கு போலீசார் மீது ஆத்திரத்தை உண்டுபண்ணியிருக்கிறது. ஆதலால் மேல் அதிகாரிகள் இதைத் தகுந்தபடி விசாரித்து, நீதிசெலுத்த வேண்டுமாய் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது"

கருங்கல்பாளையம் திரு. கே. வெங்கிட்டரமண ஆசாரி அவர்கள் மேதீர்மானத்தை ஆமோதித்துப்பேசி, அக்கிராசனுதிபதி அவர்களுக்கும், மற்றும் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறியவுடன் கூட்டம் இனிது கலைந்தது.

கடைசியாக டிப்டி கலக்டர் அவர்கள் செய்கை நடந்த அன்று போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து அரஸ்ட் செய்யப்பட்டவர்களை ஜாமீனில் விடயோசனை சொல்லியிருக்கவில்லையானால் நிலைமை வேறுக ஏற்பட்டிருக்குமாதலால் இவ்விஷயத்தில் மேலதிகாரிகள் கவனம் வைத்து நீதி செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

(ஒரு சிறுபர்)

"பல் ஜாக்கிரதை"

தங்கள் விலாசம் தெரிவித்தால் கல்நார் பற்பொடி இலவமாக அனுப்புவோம்.

விலாசம்:—

A N. காதர் அவுலியா,
வலங்கைமான்,
தஞ்சை ஜில்லா.

WANTED Candidates for Telegraph & Station Master's Classes. Apply with 2 annas stamp to:—
Imperial Telegraph College, DELHI

(8ம் பக்கத்தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானம் எவ்வளவு தூரம் ஈடேறுவில் கொண்டுவரப்பட்டது என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். 1921ம் வருஷத்திய தீர்மானமும், 1928ம் வருஷத்திய தீர்மானமும் பிறந்தவுடனே செத்துப்போய் புதைக்கப்பட்டுவிட்டது. மகாத்மா காந்தியும், காங்கிரஸ்காரர்களும், சர்க்காரை எதிர்த்து, உப்புச்சத்தியாக்கிரகம் செய்ததில் ஒருபகுதி முயற்சியையாவது இந்து மகாசபையானது முஸ்லீம்களை எதிர்த்துப்போராடும் முயற்சியில் ஒரு பகுதியையாவது மேல்கண்ட தீண்டாமையை ஒழிக்கும் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர உபயோகித்திருப்பார்களேயாயின், இந்த நாட்டின் சுயேச்சை முயற்சிக்கு பாதக மளித்துவரும் தீண்டாமை கொடுமை, அடியோடு மறைந்திருக்காதா?

காந்தியின் பொறுப்பு

பிரிட்டனில் ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்கும் சுயேச்சையும், நீதியும் வழங்குமபடியான சர்க்கார்முறை அங்கே நடைபெறுகிறது. அவர்கள் இந்த நூற்றாண்டுகளில் தங்கள சமூகத்தின் கொடுமைகளை நீக்க முயன்றதினால் அல்லவா இவ்வித சர்க்கார் முறை அங்கிருக்கின்றது. சமூகசீர்திருத்தத்தை இங்கிலாந்து எதிர்த்த காலத்திலும், ஒரு சாப்ஸ்பரி என்பவரால் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், பாதக மளித்த சட்டங்கள் நீக்கப்படவில்லையா? ஒரு ஜான்ஹோவார்ட் ஜெயில் சீர் திருத்தம் செய்யவில்லையா? ஒரு வில்பர் போல் அடிமைகளை விடுதலை செய்யவில்லையா? இவர்களைவிட மகாத்மா திறமைசாலி என நான் நினைக்கிறேன். அவர்மனம் வைத்தால் காரியம் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு ஆகவே அவர் சொன்ன வார்த்தைகளைப் பின்பற்றி, இனியாவது உண்மையாக நடப்பார்களென்று நம்புகின்றேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரால் உண்மையான அன்புகொண்ட ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரி, வரதராஜலு நாயடு, ஈ.வெ. ராமசாமிநாயக்கர், விஜயராகவாச்சாரியார், முதலியவர்கள் தோன்றியுள்ள இந்த நகரிலிருந்துகொண்டு, ஐந்து கோடி தீண்டாத மக்களின் சார்பாக ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். அதாவது இம்முக்கியமான சமூக சீர்திருத்தம் செய்யாவிட்டால், இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்தாலும் அது நிலைமையாயிருக்காது என்பதை அனுபவத்தில் காணலாம். ஆகையால் இந்த சமூகசீர்திருத்தத்தை அடைய முடியாதென்பதுமேயாகும்.

ஓட்டுரிமை.

வயதுவந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளிக்கவேண்டியது எனது லட்சியம். ஆனால், இப்போதுள்ள நிலைமையில் இது கஷ்டமான காரியம் என்பதும் நமது மாகாணத்தில் ஓட்டுரிமை பெற்றிருப்போர் தொகையும் குறைந்துவருகின்றதென்பதும் நான் இரண்டு மாதங்களுக்கு முன்பே பெண் ஆகியிருவரிடமும் பெருக்கிக்கொண்டேபோய் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கும்படி செய்யவேண்டுமென்பது என் அபிப்பிராயம். சொத்தின்மீது ஓட்டுரிமை அளிப்பதுடன், ஐந்தாவது (பிரைமரி) வரை படித்தவர்களுக்கும் ஓட்டுரிமை அளிக்கவேண்டும்

ஆதிதிராவிடர்களின் உரிமை.

பட்டாளங்களில் ஆதிதிராவிடர்களை இருக்க அரசாங்கத்திற்கு ஆலோசனை செய்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவர்களை அதிலிருந்து குறைத்துவிட்டார்கள். ஆகையால், மறுபடியும் ஆதிதிராவிடர்களை பட்டாளத்தில் அதிகமாய் சேர்க்கவேண்டும்.

சிவில் நிர்வாக உத்தியோகங்களிலும் சர்க்காரார் ஆதிதிராவிடர்களை முழுதும் மறந்துவிட்டார்கள். இனி இம்மாதிரி சர்க்காரார் செய்யாமல், தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கும் சரியான படி உத்தியோகங்கள் கொடுக்கவேண்டும்.

திருவாளர்கள் C. ராஜகோபாலாச்சாரியார், P. வரதராஜுலு நாயடு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஆகியவர்கள் முன்னின்று மேலான வழிகளை காட்டியும் கூட பெதுக்கிணறு, குளம், பொது ரஸ்தா, பள்ளிக்கூடம் ஆகியவைகளில் தாழ்த்தப்பட்டாரை அனுமதியாதிருப்பதும், வெள்ளைவேஷ்டி, செருபபு, குடை முதலியவைகளை உபயோகிக்க இந்நாட்டார் சகிக்காமலும், அனுமதிக்காமலுமிருப்பது எனக்குமிகுந்த வருத்தத்தைக் கொடுக்கின்றது. மற்றும், சத்திரங்களில் அனுமதிக்காமலிருப்பதும், மயானத்திற்கு போக இடமில்லாதிருப்பதும், மயானம் வாசஸ்தலத்திற்கு அருகேயிருப்பதும், செத்தப்பிணமிருகங்களை உண்ணும்படி நிர்பந்திப்பதும், ஆகியகாரியங்கள் இருந்துவருவது வருத்தமாகவிருக்கிறது. இவ்வித நிலைமை இங்கு இன்னும் இருந்துவருகின்றதென்றால் சுயராஜ்யம் இலக்கா என்னும் தொழில் இலக்கா என்னசெய்துகொண்டிருக்கிறதென்பது தெரியவில்லை. இந்த ஜில்லாவில் ஆதிதிராவிடர்களுக்கென 27,812 ஏக்கர் நிலங்கள் ஒதுக்கிவைத்தும் அவை சரியானபடி உபயோகிக்கப்படவில்லை யென்பதை நான் அறிவேன். இவற்றையெல்லாம் சுவனிக்கமுடியாத தொழில் இலக்கா இருந்தால் என்ன பிரயோஜனம்? ஒன்று, அதிலுள்ள சிபந்திகளோடாவது மாறவேண்டும், அல்லது அந்த இலக்கையாவது ஒழித்துவிடவேண்டும்.

கடைசியாக நம்முடைய சமூகம் திருந்தியது. நமக்குள்ள குறைகளை அகற்றிவிட்டோம். நம் ஒற்றுமையாயிருந்து, உழைத்தால்தான் நம் குறைகள் நீக்கப்படமுடியும். ஆகையால் எல்லாரும் கூடிசேர்ந்து ஒழித்து நாம் ஒற்றுமையுடனிருந்து வாழ்வோமாக.

நிறைவேறிய தீர்மானங்கள்.

காங்கிரசானது தீண்டாமை விலக்கு விஷயமாக 1921-பவருஷத்தில செய்த தீர்மானத்தின் பேரில் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்ற தென்பதைக் குறித்த ஓர் அறிக்கை வெளியிட வேண்டுமென்று காங்கிரசைக் கேட்டுக்கொள்வதென்றும், திரு காந்தி லண்டன் மகாநாட்டுக்கு செல்லுமுன் இந்து-முஸ்லிம பிரச்சினையைத் தீர்க்க எவ்வளவு பாடுபடுகின்றாரோ அதுபோலவே தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், அரசியல மைப்பில் "தாழ்ந்த" வகுப்பினர்களுக்கு தனித்தொகுதியே ஏற்பாடு செய்யுமபடி சர்க்காராரைகேட்டுக் கொள்ளுவதாகவும், புதிதாக ஏற்படபோகும் அரசியல் பொறுப்பாட்சி அமைப்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு சமத்துவம அளிக்கப்படாத எவ்வித்தத் திட்டத்தையும் எதிர்ப்பதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு ராஜாஜிக்கும் அவர்களின் உருவப்படத்தை வக்கீல் திரு ஐடாரமி அவர்கள் திறந்துவைத்தார். பிரதிநிதிகளுக்கும், தலைவர்களுக்கும் திரு P. வரதராஜுலு நாயடு அவர்களால் ஜாகை, சாப்பாடு முதலிய உபசரிகள் தமது பங்களாவில் செய்து கொடுக்கப்பட்டது.

சுவாமி சகஜானந்தம் அவர்களின் தலைமையில் தாழ்த்தப்பட்டவாலிபர் மகாநாடு ஒன்று நடந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருநெல்வேலி மதுவிலக்குப் பிரசார கமிட்டியின்வேலை.

திருநெல்வேலிஜில்லா மதுவிலக்குப்பிரசாரக் கமிட்டியானது சென்ற ஒரு வருஷத்தில் 1570கிராமங்களுக்குச் சென்று பிரசாரம் செய்ததுடன் 2465 தனிவீடுகளுக்குச் சென்று பேசியும், 633 பொதுக்கூட்டங்களில் பேசியும் சினிமா படக்காட்சியின் மூலம் மதுவின் கெடுதியை எடுத்துச் சொல்லியும் பிரசாரம் செய்துஇருக்கிறது.

விருதுநகர் முனிசிபல் தலைவர் தேர்தல்

இவ்வூர் முனிசிபாலிட்டிக்கு தலைவர் தேர்தல் 18-5-31ந்தேதி காலை நடைபெற்றதில் இவ்வூர் பிரபல வியாபாரியும், செல்வந்தருமான திரு. டி. எம். எம். சங்கரலிங்க நாடார் அவர்கள் முனிசிபல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விதவா விவாகம்.

சென்னை விதவா விவாக சபையின் ஆதரவில் 15-5-1931 மாலை 5.30மணிக்கு [பிராட்வே] 161 நெ-கட்டடத்தில் ஒரு மறுமணம் நடைபெற்றது. மணமகனின் வயது 25. மணமகளின் வயது 18. இருவரும் பார்ப்பனக் குலத்தினர்கள்

மேலைவைபவத்திற்கு மணமகளின் தாயார், ஸ்ரீமான்களான டி. பகவந்தம் குப்தா, ஏ. தாமோதரமுதலியார், தாசி செஞ்சையா, டி. எஸ். சொக்கலிங்கம்பிள்ளை, டி. என். நடராஜன், எச். எம். ராவ், கி. எம் கிருஷ்ணசாமிமுதலியார், Dr; K. வேலன், ஆரிய சமாஜத்தின் காரியதரிசி, பிரம்ம சமாஜத்தின் காரியதரிசி, ஸ்ரீமதிகள் K. அலர்மேலுமங்கைத்தாயாரம்மாள், சுந்தராபாய், ருக்மணி அம்மாள், இராமானுஜம் அம்மாள் முதலியவர்களும் அநேகபிரபலஸ்தர்களும் சபையின் அங்கத்தினர்களும், பொதுஜனங்கள் ஆணும் பெண்ணுமாகச் சுமார் 250 பேருக்கு அதிகமாகவே விஜயம் செய்திருந்தனர் என்று காரியதரிசி திரு. ஈ. சின்னய செட்டியார் எழுதுகிறார்.

ராஜா முக்தையா

(7ம பக்கத் தொடர்ச்சி)

ண்டு இருப்பதானதுமான விஷயம் எது—யாரால்? என்று கண்டுபிடித்து அதாவது அந்த அக்கிரமக்காரர்களுக்கு எதுதூண்களாய் இருந்துதாங்கிக்கொண்டிருக்கின்றனவோ அவைகளை பரிந்துக்கீழே தள்ளும் வேலையில் ஈடுபடச் செய்கின்றது.

ஆகவே நாட்டில் உள்ள குறைகளை ஒப்புக்கொள்ளுவதில் சுயராஜியத்திற்கும், சுயமரியாதைக்கும் ஆக்ஷேபித்தியாசமில்லை. அதற்கு ஆதாரமான காரணங்களைக்கண்டு பிடிப்பதிலும்காரணங்களாகக் கண்டு பிடிக்கப்பட்டவர்களே தாக்கல் தப்பித்துக்கொள்ள அன்னியர் பேரில் பழி சுமத்துவதையும் மாத்திரம் சுயமரியாதை இயக்கம் நம்பி ஏமாந்துபோகஇஷ்டமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உதாரணம் வேண்டுமானால் பாருங்கள்.

கல்வியில்லை என்பது யாவருமறிந்ததான். ஆனால் யாருக்குக் கல்வி இல்லை? பார்ப்பனர் ஒழிந்த எனையோருக்குதான். அதிலும் பள்ளு, பறை என்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், விவசாயம், கைதொழில், ஆகியவைகள் செய்யும் சரீரப் பிரயாசைப்படும் மக்களுக்குத்தான் கல்வியில்லையே யொழிய வேறென்ன?

ஆனால் பாடுபடாத சோம்பேறிக் கூட்டமான பார்ப்பனர்கள் எல்லோருமே நமது நாட்டில் படித்திருக்கின்றார்கள் என்பதை நீங்கள் மறுக்க முடியுமா என்று கேட்கிறேன். இதற்கு வெள்ளைக்காரர் காரணமா-சுயராஜியம் இல்லாதது காரணமா? அல்லது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியும், அதனால் ஏற்படவேண்டிய பகுத்தறிவு இல்லாததும் காரணமா? என்பதை உங்கள் பகுத்தறிவைக்கொண்டு யோசித்துப் பாருங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

இன்றைய வெள்ளைக்கார அரசாங்கத்தில் அதாவது சுயராஜ்யமில்லாத அரசாங்கத்தில் பார்ப்பனர்கள்தான் படிக்கவேண்டுமென்றுவது, அவர்கள் தவிர மற்றவர்கள் படிக்கக்கூடாது என்றுவது, எங்காவது சட்டமிருக்கின்றதா? அல்லது அவர்களது ஆட்சியில் மற்றவர்கள் படிக்கவசதி செய்யப்படாமலாவது, எதாவது சட்டபூர்வமான தடைகள் இருக்கின்றதா? என்றுயோசித்துப்பாருங்கள்.

தாழ்த்தப்பட்ட வகுப்பாரில் 100க்கு காலிபங்குகூட படித்தவர்கள் இல்லை. பெண் மக்களில் 100க்கு அரைப் பங்குகூட படித்தவர்கள் இல்லை. விவசாயம், கைத்தொழில் முதலியவை செய்யும் வகுப்பார்களில் 100க்கு ஒருவர்கூட படித்தவர்கள் இல்லை. ஆனால் பார்ப்பனர்களில் 100க்கு 100 பேர்கள் படித்தவர்களாக இருக்கின்றார்களே. இதற்கு என்ன காரணம் சொல்லுகின்றீர்கள்? என்று கேட்கிறேன். இது சுயராஜியமில்லாததாலா? அல்லது பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை இல்லாததாலா? என்ற கேள்விக்குத் தயவு செய்து பதில் சொல்லுவீர்கள்.

ஒரு சமயம் பணம் இல்லாததால் பார்ப்பனரல்லாதார் படிக்க முடியவில்லை என்று சொல்ல வருவீர்களானால் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் எப்படி பணம் சேர்ந்தது? அவர்கள் உங்களைவிட அதிகமாகப் பாடுபட்டு பணம் சம்பாதிக்கின்றார்களா? அவர்கள்தான் தங்களையே அடிக்கடி தாக்கல் பிச்சை வாங்கி உண்ணும் ஜாதி என்றும், புரோகிதம் செய்தும், மணியாட்டியும், தட்சணையும், உபதானமும், பெற்று வயிர் வளர்க்கும் ஜாதியென்றும், பல தடவை அவர்களே தாராளமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே! இன்றும் அப்படிதான் பலர் இருந்தும் வருகிறார்களே. இதை நீங்கள் அறியாததா? இப்படி இருக்க அவர்கள் மாத்திரம் எப்படி 100க்கு 100பேர்படித்தார்கள் என்பதைகண்டுபிடியுங்கள். சுயமரியாதைஉணர்ச்சி உண்டாகி பகுத்தறிவு உங்களுக்கு ஏற்பட்டவிடமானால்தான் இந்த இரகசியத்தை நீங்கள் சுலபத்தில் கண்டு பிடிக்கமுடியும். மற்றபடி உங்களுக்கு விளக்கவே விளக்காது.

சும்மா வாயில் சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று கூறிக்கொண்டு கொடியைச் சுமந்துகொண்டு வந்தே மாதரம் என்று பிதற்றித்திரிய வேண்டியதுதான் நமது மக்களின் வேலையாகிவிட்டது. ஆனால் இதனால் என்ன பலன் கிடைக்கும்? எப்படிக்கிடைக்கும்? எங்கின்ற அறிவுபூஜியமாகிவிட்டது. இன்னமும் கிர்தாட்சன்னியமாய் நான் பேசுவது என்றால் சுயராஜ்யம் என்பது இருந்தகாலத்தில் தான் அதாவது அன்னியஆட்சி என்பது இல்லாத காலத்தில் தான் இந்திய மக்களில் இன்னும் அதிகமான எண்ணிக்கையுள்ளமக்கள்தற்குறிகளாய் இருந்திருக்கின்றார்கள். அன்னிய ராஜியம் ஏற்பட்ட பின்னரே "பள்ளு, பறை" தொழிலாளி-பெண்கள் ஆகிய எல்லா வகுப்பாரும் படிக்கலாம் என்கின்ற சட்டமும் அனுமதிப்பும் ஏற்பட்டது. அன்னிய ஆட்சியில் ஏற்பட்ட இந்த சட்டமும் அனுமதியும் கூட இன்று சுயராஜ்யம் கேட்கும் மக்களாலேயே ஆக்ஷேபிக்கப்பட்டு வருகின்றது. அனேக கிராமங்களில் பள்ளு, பறை பிள்ளைகள் படிக்க சர்க்கார் பணமும் இடமும் கொடுத்தாலும், சுயராஜ்யம் கேட்கின்ற தேசியவாதிகள், தேசபக்தர்கள், காங்கிரஸ்வாதிகள் ஆகியஜனங்களிலேயே பலர் பள்ளிக்கூடத்தில் உட்காரவோ, பள்ளிக்கூடம் இருக்கும் இடத்திற்கு நடந்து போகும் தெருவையோ அனுமதிப்பதுகூட இல்லை. தேசியவாதிகளிலேயே கூட தேசபக்தர்களிலேயே கூட இப்படிப்பட்டவர்கள் இருந்தால் மற்றமக்களின் ஆக்ஷேபனை எவ்வளவு இருக்கும் என்பதை எடுத்துச்சொல்ல வேண்டுமா? என்று கேட்கின்றேன்

இந்தக்கொடுமையை ஒழிக்க சுயராஜியத்தில் வழி யிருக்கின்றதா? அல்லது சுயமரியாதையில் வழி இருக்கின்றதா? என்று இப்போது யோசித்துப்பாருங்கள். முதலாவது முன்னால் இருந்து வந்த நமது சுயராஜிய அரசாங்கத்தில் ஒரு கூட்டத்தார் தான் படிக்கலாம். மற்றக்கூட்டத்தார் படிக்கக்கூடாது என்ற சட்டமிருந்தும் இன்னும் அது நமது மத தர்மமாய் இருப்பதும், அன்னிய ராஜியத்திலேயே அவை முழுவதுமாய் தலைகாட்டச் செய்யாமல் மறைக்கப்பட்டிருப்பதும் அன்னிய ராஜியம் மறைந்ததுடன் அவை அதாவது மததர்மம் என்னும் போல் மறுபடியும் தலைதூக்கும் என்பதும் உங்களுக்குத் தெரியாதா என்று கேட்கின்றேன்.

காலையதினம் இந்த திரு. காந்திக்கே சக்கராவர்த்திப்பட்டம் சூட்டிலுலும் இந்த மத தர்மங்கள் அழிக்கப்பட. முடியுமா என்று உங்களைக்கேட்கின்றேன். அவரைச்சுற்றித்திரிகின்றவர்கள்யார் என்று பாருங்கள். இந்தக் காந்தியும் அவரது இந்தக் கூட்டமும் நமக்கு இந்தத்துறைகளில் எதாவது நன்மை செய்யக்கூடுமானால் இன்று அவர்கள் செய்வதை யார் தடுக்கின்றார்கள் என்று நான் கேட்கின்றேன்.

செல்வம்.

இதுபோலவே செல்வநிலையும் மிக மோசமானதுதான் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் யாருடைய செல்வநிலை மோசமானது? என்பதை யோசித்துப்பாருங்கள். பாடுபட்டு உழைப்பவர்களுடையவும், யோக்கியமானவர்களுடையவும், செல்வநிலைதான் மோசமாக இருக்கின்ற தேதவிர சோம்பேறிகள், சூதுசுக்காரர்கள, வஞ்சகக்காரர்கள், கல்மனமுடையவர்கள் ஆகியவர்களுடைய செல்வநிலை எங்காவது மோசமாக இருக்கின்றதா என்பதை யோசித்துப் பாருங்கள்.

எந்த நாடாவது சோம்பேறிகள் எல்லாம் மூக்குபிடிக்க சாப்பிட்டு அவர்களது பெண்டுபிள்ளைகள் எல்லாம் மோட்டார் சவாரி செய்துகொண்டு மாட மாளிகைகளில் குடியிருக்கும்படியான மேன்மையில் இருந்தால் அந்தநாடு செல்வநிலையற்ற நாடு ஆகுமா? அல்லது சுயமரியாதை அற்ற மூடர்களை யுடைய நாடு ஆகுமா? என்று கேட்கின்றேன்.

இந்த மூடத்தனம் ஒழிய சுயராஜியம் வேண்டுமா? சுயமரியாதை வேண்டுமா? என்று யோசித்துப் பாருங்கள். இன்று உங்களுக்கு சுயராஜியம் வேண்டுமென்கிற ஆட்கள் எல்லாம் பெரிதும் நான் மேலே சொன்ன பாடுபடாமல் சோம்பேறியாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிர் வளர்க்கும் வஞ்சகர்களும், அவர்களது கூலிகளும் அல்லாமல் எதாவது ஒருவர் இரண்டு கூடைமண் வெட்ட தகுதி உடையவரோ அல்லது ஒரு நாழி தண்ணீர் இறைக்கும் அறிவுள்ளவரோ, அல்லது ஒரு மூட்டை தூக்க தகுதியுடையவரோ, அல்லது எதாவது ஒரு சரீரத் தொழில் புரியுயோக்கியதை உடையவரோவாக இருக்கின்றார்களா என்பதைதேடிப்பார்த்துக் கண்டு பிடித்துச் சொல்லுங்கள்என்றுகேட்கின்றேன். மதத்தின் பேரால் காவி கட்டி சன்னியாசிகளாகி மோக்ஷத்திற்கு பிரசாரம் செய்யும் சோம்பேறிகளுக்குச்சமமாக மற்றொரு வேஷம் போட்டு சுயராஜியப் பிரசாரம் செய்கிறவர்கள் தவிர பாடுபாடுவதற்குத் தகுதி உடையவர்கள் எத்தனை பேர் என்று கேட்கின்றேன். மற்றும் ஒவ்வொரு தனி மனிதனின் வரும்படி இந்தநாட்டில் எவ்வளவு வரையில் இருக்கின்றது பாருங்கள். வருஷம் 10 லக்ஷம் 8 லக்ஷம் வரும்படி உள்ள தனிமனிதர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கின்றார்கள். ஆள் ஒன்றுக்கு 1000, 2000, 5000, 10000 எக்ராக்கள் நிலமுடையவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள். இந்த யோக்கியதையில் இவர்கள் இருப்பதற்கு வர்களுக்கு என்ன யோக்கியதைகள் இருக்கின்றன? நாட்டுக்கு இவர்களால் என்ன நன்மைகள் இருந்து வருகின்றன? என்று யோசித்துப்பாருங்கள். மற்றும் வர்களாவது ஒருவகையில் உழைக்கும் பிராணிகளாக இருக்கின்றார்கள். மற்றபடி உழைக்காத ஜெந்துக்களாகிய கடவுள்களுக்கு-குழவிக் கல்லுக்கு-எடுத்து உட்காரவைக்கும்— தூக்கிச்செல்லும் ஜீவன்களான பண்டார சன்னதிகள் சங்கராச்சாரியார் ஆகிய நகரா ஜென்துக்களுக்கு இந்தநாட்டில் எவ்வளவு செல்வம் எவ்வளவு வரும்படி இருக்கின்றது என்பதை சற்று கவனித்துப்பாருங்கள்.

இந்தப்படி செல்வமுள்ள நாட்டின் செல்வநிலை போராதென்று ஒருவன் சொன்னால் அவன் மூடன் அல்லது உண்மையை மறைப்பவன்என்று கருதுவீர்களா அல்லதுபொய்யதேசபக்தன் தேசியவாதி என்று கருதுவீர்களா என்று கேட்கிறேன். இப்படியான செல்வநிலைமாற சுயராஜியம் வேண்டுமா, சுயமரியாதைவேண்டுமா என்பதை இப்பொழுதாவது நன்றாய் யோசித்துப்பாருங்கள். கன்யாகுமாரிமுதல்கல்லுருவங்களை எடுத்துக்கொள்ளுங்கள். கன்னிபாகுமாரி அம்மனுக்கு மாதத்திற்கு 3-4 தல் வீட்டிற்கு தூரமாகின்ற சடங்குகள்கூட செய்யப்படுகின்றது. அவ்வளவு சக்திபுள்ள சாமி. ஆனால் அந்த சுத்துப்பிரகாரத்துக்குள், காந்தி லாலா லஜபதி முதலிய எப்பேர்பட்ட மகாத்மாக்களும் தேசபக்தர்களும், தேசிய வாதிகளும் கூட போகக் கூடாது.

இந்தநிலையில் ஒரு கல்லுக்கு இருக்கும் கௌரவம், செல்வம், கட்டடம் பூஜை, உற்சவம், வீட்டுக்குத் தூரமான சடங்கு ஆகியவற்றிற்கு செலவு எவ்வளவு என்று கருதுகிறீர்கள். அதற்கு 5 மையில் அப்பால் போல் உள்ள சுசீந்திரத்திலுள்ள ஒரு கல்லுக்கு தினம் 10 மூட்டை அரிசி வேகவைத்துப்படைக்கப்படுகின்றது. அந்தக்கல்லு இருக்கும் இடத்திற்கு கால்மைல் தூரத்திற்கு இப்போல்

கூட வெளிநிதர்கள் நடக்கக்கூடாது இதற்கு மாறுதல் கோரும் கல்ய ணமு முதலிய அநேக ஆடம்பரங்கள் நிற படியே அதற்கேற்ற வாகனமாகிலே திருவெல்வேலி, திருச்செந்தூர், தென்திருப்போரை, சங்கரன்கோவில், ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமேஸ்வரம், திருப்பரங்குன்றம், மதுரை, பழனி முதலிய இடங்களில் செல்லுமுன், செல்லுவதற்கு பார்த்துவிட்டு அவசர அவசரமாகவே ஸ்ரீரங்கத்திற்கு வந்து பாருங்கள். இந்த கோவில் திருப்பணி கும்பாபிஷேகம் வைகாசிப்பு உற்சவம், பூஜை, தேர், ரதம் ஓடுதல், நடனம், ஆகியவைகளை கண்ணாரப்பாருங்கள். இதை போன்ற மற்ற திருக்கோவில்களில் வடஆற்காடு செங்கல்பட்டு ஜில்லாக்களையும் சேர்ந்த பிரமுகர்கள், மற்றும்எவ்வெவரு நிர்மத்திய கொமாதிகளை பிறகு தங்களுடைய குலதேவதை குலதெய்வம் முதலியவைகளை குலதெய்வத்தை இந்தக் கோவிலிலும் கண்டிக்கப்பாருங்கள். இந்தக் கோவிலும் செலவும் கணக்கும் போட்டுப்பார்த்தால் ஒரு ஜமீன்தாரையே செல்வமில்லாத ஒரு எளிதாக தயவு செய்து ஒருதடவை விஜயம் செய்து யோசித்துப்பாருங்கள்.

இந்த செல்வமும் செலவும் மக்களுக்கு பிரயோஜனப்பட்டால் இந்த நாட்டிற்கு வேறு என்ன தேவை இருக்கும் என்று கேட்கின்றேன். இதற்கு சுயராஜ்யம் வேண்டுமா? சுயமரியாதை வேண்டுமா? என்று யோசித்துப்பாருங்கள். இவ்விதத்திருவிழாவை ஒரு நாளைக்கு 5 தரம் வீதம் 10 நாளைக்கு 50 தரம் ஒரு ஊரில் நடத்தி அதற்கு எத்தனை லட்சம் ஜனங்கள் வரவேண்டும் என்பதை யோசித்துப்பாருங்கள். சர்வாதிகாரி சுயராஜ்யத்தில் ராமராஜ்யத்தில் மாட்டாய்விட்டது. நமது மத விஷயத்தில் பொதுவிஷயத்தில் எவ்விதமாற்றமும் செய்யக்கூடாது. பூரண சுயேச்சைகளும் மேற்பட்ட பேல்ஸ்விகவிராஜிகளாலும் அவர்கள் சுயராஜ்யத்திலோ, சென்னை எலுப்பு கம்பெனியில் போட்டால்தான் ஆகாது. ஆனால் மோகூமாட்டிற்கு என்கிறதிட்டம் போட்டாயவிட்டது காலம் தவறி மழை பெய்தால் நஞ்சை புஞ்சை பயிர்களுக்கு ஏற்படுகின்றது.

இந்த நிலையில் இந்தக்கோவில் திருப்படவும் இந்நாட்களில் அழிபடவும் இந்த கோம்பேரி மடாதிபதிகள் சங்கராச்சாரிகள் ஏர் உழும்படியும், செய்யப்பட இவர்களது சுயராஜ்யத்தில்தான் உண்டா என்று கேட்கின்றேன். இந்த சொத்துக்கள் வருடம் பதினாயிரம் பாடுபடும் மக்கள் வயிறாரஞ்சு டிக்கவும் ஏழ்மற்றப்படமல் இருக்கவும் இவர்களது சுயராஜ்யத்தில் இடம் உண்டா என்று கேட்கின்றேன்.

சொத்துக்களையெல்லாம் சிலர்கை வசப்படுத்திக்கொண்டு பாடுபடுபவர்களின் வயிற்றில் அடிக்கும்படியான கோம்பேரிகள் தனுவித்துக்கொண்டு பாடுபடுபவனுக்கும் தொழிலாளிக்கும் வயிறு காய்ந்து வரும்படி செய்யும் கொடுங்கோன்மை குடிசசுவதற்கும் அழுகும்படி செய்துகொண்டு இருக்கின்ற ஒரு நாட்டுக்கு சுயமரியாதை வேண்டுமா? துல்லுதல் சுயராஜ்யம் வேண்டுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

சுயராஜ்யம் வந்தால் இந்த மீண்ட செலவுகளில் எதையாவது நிறுத்த முடியுமா? இந்தக்கோவில்களில் எதையாவது இயக்கமுடியுமா? இந்தச் சாமிகளில் எதையாவது ஒழிக்க முடியுமா? என்றுபாருங்கள்.

ஒவ்வொரு சாமிக்கு 7-சுற்று கோட்டைச்சுவர்கள் போன்றமதில்களும் 5, 6 பிரகாரங்களும் ஆகிய இவைகள் எல்லாம் எதற்கு? இவைகள் இல்லாவிட்டால் சுவாமிகள் ஓடிப்போகுமா? ஓடிபோனால்தான் என்ன பெரிய எப்பட்டு விடும்? துஷ்டனை சுவாமி என்றால் என்ன அதை ஒரு குதலாளியிடம்? துல்லுதலை திய பத்தல்லதிறைபிடிக்கப்பட்ட அடியாட்களையா? இத்தனாயிரம் அடைப்பட்டும் சுவாமிகளும் சிதம்பரம் தவிர சுயராஜ்ய சுமியையும் பிடிக்கிற மக்களுக்கு சுயராஜ்யம் எப்படி எதற்கும்? கோட்டை சுமிகள் ஒழிந்தல்லது சுயராஜ்யம் எப்படிவரக்கூடும்? இந்த மதில் சுமிகள் ஒழிய எந்த சுயராஜ்யத்திலும் நிட்டவில்லை என்பது தெரிந்தும் சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று வீணாய் உளறுகின்றோம். இதனாலேயே நாடு யுகயுகமாக அடிமைத்தனத்தில் தேசத்தின் செல்வத்தையும் பறக்கும் சுமிகள் முதலில் ஒழிய வேண்டிய எழைகளின் — உழைப்பாளிகளின் சுரண்டுதலை ஒழிக்கவந்த யுகபுருஷர்கள் "கடவுளே யல்லாமல் வேறு இல்லை" என்றும் செல்வித் தப்பிதத்தை ஏற்படுத்தி எழைகள் பயன்படுத்தும் பொருள்களை எல்லாம் ஒழித்தார்கள் என்பதும் ஆராய்ச்சியாளர்கள் கொண்டு வெண்டு வீட்டால் நமது உணர்ச்சியில் "கடவுளே செல்" என்று சொல்லி பாடினி கடவுளே" "கலை வந்தி" என்பதைவிட்டு ஒழிய வேண்டிய இவை ஒழிவதற்கு சுயராஜ்யத்தில் நுழைந்து நமது தெரிந்தும் சுயராஜ்யம் என்ற

கள் மறந்திருக்கமாட்டார்கள். ஆகவே சகோதரர்களே! இம்மாம் சபகூ ணிகளான பார்ப்பனர்களைச் சைவர் கள் தேவர்களாகப் பாவித்து வண க்கியும், கோவில்களின் முதன்மை யான இடமும் விக்கிரகத்தைத்தொ ட்டுப் பூஜை பண்ணும் அதிகாரமும் சுயமரியாதையற்று பார்ப்பனர் அ ராகரத்தில் உணவருந்தியும் அவர் களைக்கண்ட உடனே சாமி அடியேன் என்று மேல்வேஷ்டியை எடுத்தணை க்கியும், பிராமணரல்லாதார் எத்த கைய புண்ணியஞ் செய்தாலும் நே ராக மோட்சமடைய முடியாது. புண் ணியஞ்செய்த நாம் பார்ப்பானுகப்பிற ந்து மேலும் புண்ணியஞ்செய்தால் தான் மோட்சமடையமுடியுமென்று பார்ப்பனரல்லாத மக்களை யெல்லாம் மிகத்தாழவாகக்கூறிய திரு. காந்தி யவர்கள் வாக்கை மெய்யென்று நம்பி யும் வாழும் சைவர்களிற் பெரும்பா லார், சில ஜாதியார் மாம்ச போஜ னஞ் செய்கின்றார்கள் என்னும் ஒரே காரணத்தால் பல தமிழ் மக் களைத் தாழ்வாக மதிப்பதும் கோ வில், குளம், கிணறு முதலிய பொது இடங்களில் அவர்களை அனுமதிக்க மறுப்பதும் முற்றும் அநீதியும் ஜீவ காருண்யமற்ற செயலுமாகும்.

இதுகாறும் யாம் கூறியவற்றால் புலாலுணவு கொள்ளல் சரி யென்று யாம் கூறியதாக எவரும் எண்ணிவி டாதிருக்கும்படி மறுபடியும் மறுபடி யும் கேட்டுக் கொள்ளுகின்றேன். உலக மக்களெல்லோரும் சாகபக்ஷணி களாக வாழவேண்டுமென்று விரும்பு கிறவர்களில் யானும் ஒருவன். மக் கள் உடலின் இயற்கையமைப்பிற் கும், நோயற்ற வாழ்வைப்பெறுதற் கும் மரக்கறியுணர்வே வேண்டுமென் பது கூமதி திடமான எண்ணம். இதைப்பற்றி ஆங்கில மருத்துவ நூல் வல்லார் பலர் எழுதிய பல ஆராய்ச் சிகளையும், புலால மறுத்தல் சங்கத் தார் வெளியிட்ட பல நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் படித்து அக் கொள்கைகள் மிக நேர்மையானது என்ற முடிவிற்கு வந்திருந்தாலும் மக்களைப்பிரசாரத்தின் மூலமாய் சா கபாக்ஷணிகளாக்கிவிட வேண்டுமே யொழிய அவர்களை இழித்துக்கூற வோ, தாழ்வாக நடத்துவதோ கூடா தென்பதும் நாம் ஜீவகாருண்யத்தைப் பின்பற்றி நடக்கும் பொழுது சிறிது பகுத்தறிவையும் உபயோகித்து நட ந்து கொள்ளவேண்டுமென்பதும்என் அபிப்பிராயமாகும். எவரையும் தா ழ்த்திக் கூறுவதையும் எவர்மனமும் நோவும்படி நடப்பதும் ஒருவருடைய சுயமரியாதைக்குப் பங்கஞ்செய்வதை யும் ஜீவகாருண்ய நெறியாகிய சை வம் அனுமதிக்கவில்லை. மேலும் புலாலுணவு உண்ணுமல் மக்களுக்கும் ஏனைய உயிர்ப்பிராணிகளுக்கு இன் னல் புரியும் ஒருவனைப்பார்க்கிலும் புலாலுணவு உண்ணும் ஒருவன் மக் களிடத்திலும் ஏனைய பிராணிகளிட த்திலும் அன்பு செலுத்துவானுலால் அவனே உயர்ந்தவன் என்பதுமென் அபிப்பிராயம்.

நங்கூரம் போட்டார் போன்று வா ழும் நகராப்பிராணிகளாகிய மரஞ் செடி கொடிகளிடம் காட்டும் ஜீவ காருண்யம்:—

மரஞ்செடி கொடிகள் முதலிய எல் லாம்உயிர்ப்பிராணிகளென்றும்அவை கள்மிருகங்களைப்போல்இருதயம்,குட ல்முதலிய சகல அவயவங்களும் உடை யதாயிருப்பதுடன் ஒன்றிற்கொன்று பேசிக்கொள்கிறதென்றும், எழுது கிறதென்றும், ஆண் பெண் புணர்ச்சி யில் விருப்பமுடையதென்றும் சங் கீதம் கேட்பதில் விருப்பமுடையதெ ன்றும் இன்னும் பல உண்மைகளை உலகமனைத்திற்கும் அதிஞர் செகதீச சந்திரபோஸ் அவர்கள் அனுபவபூர்வ மய் ஆராய்ச்சி செய்து வெளியிட்டு ள்ளார்கள். வேறு சில மரங்கள் மாம்சபக்ஷணிகளாகக்கூட இருக்கிற தாம். அம்மரங்களின் இலையின் மேல் ஏதாவது குருவிகள் போயிருந்தால் அப்படியே இலைகள் குருவியை சுற்றி மூடிக்கொள்ளுமாம், பின் அக்குருவி செத்து அதன்மாம்சத்துக்களெ யெல்லாம் இலை மூலமாய் மரஞ்சுப்பிடு கிறதாம். வேறு சில மரங்கள் அத ஜடியில் போய் எவராவது நின்றால் அதன் இலைகளால் அம்மனிதனை அடிக்கிறதாம். இவ்விதமாய் பற்பல விதமான மரங்களும் உலகிலிருக்கிற தாம். இன்னும் கல் முதலிய பொ ருள்களுக்கும்கூட உயிரிருக்கிறது என்று வேறொரு அதிஞர் ஆராய்ந்து கூறியிருக்கிறார் எனவே மனிதன் முற்றுக ஜீவகாருண்யத்துடன் வாழ வேண்டுமானுல் பண்டைக்காலத்தில் வாழ்ந்த சில முனிவர்களைப்பின்பற்றி உதிர்ந்த பழங்களையும், காய்ந்தசருகு [இலைகளையும்] களையும் சாப்பிட்டு வாழவேண்டும். அது உலக மக்கள் பின்பற்ற முடியாத ஒரு காரியம். முடிவாகக்கூறினுல் மக்கள் கண்டிப் பாய் ஜீவகாருண்யத்துடன் வாழ நினைத்தால் அவர்கள் இன்றே இற க்க வேண்டியதுதான். எவ்வுயிர்க் கும் இன்னல் புரியாதிருக்க வேண் டுமென்று நினைத்ததுதான் பண்டை க்காலத்தில் முனிவர்களென்போர் மூச்சையடக்கி [யோகம் புரிந்து] அசேதனப்பொருள்களைப் போல் கா டுகளில் வீற்றிருந்தார்கள். அவர் தம் வழியைப்பின்பற்றி நடக்க இக் காலத்தில் எவர் தயாராயிருக்கின்றார் கள்? எனவே தான் மக்களின் பார் வைக்கு அதிக பரிதாபத் துடன் துடிதுடித்து இர த்தம் சிந்த அம்மா! அம்மா!! என்று கதறிச்சாகும் உயிர்களைக் கொன்று சாப்பிடுவதை நிறுத்தி, கொல்லும் பொழுது நம் கண்களுக்கு யாதொரு துடிதுடிப்பும் இரத்தம் பெருக்கும் சப்தமின்றி உயிர்துறக்கும் மாஞ்செ டிகொடிகளைக் கொன்றருந்தும் வழி யை நந்தமிழ் நாட்டு மக்களுக்குக் கற்பித்தார்கள் போலும். பண்டை காலமக்கள் மரங்களுக்கு நம் போன்ற உணர்ச்சிகளே இடையாதென்றுகூட பல நூல்க ளில் எழுதியிருக்கிறார்கள். செடி கள் நம்மைவிட அதிக உணர்ச்சியுள் ளது என்பதற்கு அதிஞர் ஜெ. சி சத்தில் பாருங்கள். வீணுகாலம் போ க்காதீர்கள். வம்புக்கேள்விகளைக் கிளப்பிக்கொண்டு வாதாடாதீர்கள். இளங்குமரச் செல்வர்களாக எங்கும் சஞ்சரித்து குலத்தை உங்கள் குணங் களால் உயர்த்துங்கள்.

என்ற இந்தச் சில எச்சரிக்கை வார்த்தைகளோடு என் முழு மன துடன் உங்கள் மகாநாட்டைத் திறக் கின்றேன்.

———

சென்னைமாகாண முஸ்லீம் மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

மே மீ 19ந்தேதி விக்டோ ரியா ஹாலில் கூடிய சென்னை மாகாண முஸ்லீம் மகா நாட்டில் தலைவர் மௌலானு ஹசரத் மோகினி அவர்கள் பிர சங்கம் முடிந்ததும், மகாநாட் டிற்கு வந்திருந்த அனுதாபதந் திகளையும் கடிதங்களையும் வாசி த்தபின், மௌலானு முகமது அலியும் பண்டித மோதிலால்நே ருவும் காலஞ்சென்றதற்கு மகா நாடு துக்கிப்பதாகவும் அதன் அனுதாபத்தை காலஞ்சென்ற தலைவர்களுடையகுடும்பதாருக் குதெரிவித்துக் கொள்வதாகவும் முதல் தீர்மானம் நிறைவேறி ற்று.

மௌலானு ஷௌகத் அலி தலைமையின் கீழ் டில்லியில் கூடி ய அகில இந்தியா முஸ்லீம் மகா நாட்டில் முஸ்லீம்களுக்குத் தனி த்தொகுதியும் தனிப்பிரதிநிதித் துவமிருக்க வேண்டு மென்று நிறைவேறின தீர்மானத்தை இம் மகாநாடு உறுதிப்படுத்துகிற தென்று இரண்டாவது தீர்மானம் கூறிற்று.

ஹிந்து காங்கிரஸ் தலைவர்க ளாகவிருக்கும் திரு. எஸ், சத்தி யமூர்த்தி, திரு. கே. பாஷியம் முதலியவர்கள் மற்றும் பார்ப்ப னரல்லாதார் தலைவர்கள் இந்த நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லீம்க ளும் கலகஞ்செய்யாமல் இப்பொ ழுது சமாதானத்துடனிருக்க வேண்டி முயற்சி செய்து, இம்ம காநாடு நடக்க உதவியாயிருந்த தற்கு, அவர்களுக்கு இம்மகா நாடு மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றது.

சென்னை ஹைகோர்ட்டு ஜட் ஜு பதவிக்கும் ரெஜிஸ்டரே ஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரல் முதலிய உத்தியோகங்களுக்கு முள்ள முஸ்லீம் உரிமையைபொ ருட்படுத்தாமலிருந்து வருவத ற்காக இம்மகாநாடு சென்னை கவ ர்ன்மெண்டைக் கண்டிக்கிறது.

———

(5ம் பக்கத் தொடர்ச்சி)

முதலியன வயது முதிர்ச்சியின் குறி ப்பென்பதை மறவாதீர்கள்.

ஊக்கமும் அஞ்சாமையுமே வாலி பர்களுடைய அடையாளங்கள்.

எதையும் உங்கள் உள்ளத்தில் ஒளிரும் தூய அறிவின் சுடர் வெளிச்

(4ம் பக்கத்தொடர்ச்சி.)

த்துக்கொண்டு போதல், தலையிர் எடுத்தல், அபிஷேகம் செய்தல், கடவுளைச் சுகல விதத்திலும் கொண்டாடுதல், அப்பின்னே செத்தவுடன் என்ன லபோ லபோ என்று அடித்துக்கொள்ளுகிறீர்கள்? என் அப்போதும் அமமுட்டாள் கடவுளுக்குக் காவடி எடுத்துக்கொண்டு ஓடுவதுதானே!

ஃஃ ஃஃ

கடவுளைக்காப்பாற்ற ஒருபுறம் பாதிகள் புறப்பட்டு விட்டார்கள். மதத்தைப்பரப்ப ஜோசப்புகள் கிளம்பிவிட்டார்கள். மதமாற்றஞ்செய்யச் சர்க்காரைகள் வெளிக்கிளம்புகிறார்கள். நித்யமான கடவுளைக்காப்பாற்ற இத்தனை கூப்பாடுகள் ஏன்? உண்மையான மதம் தன்னைத்தானே காத்துக்கொள்ளாதா? அதற்கும் அதன் கடவுளுக்கும் அரசாங்கச்சட்டமும் ஆதாவும் வேண்டுமா? மதமும் கத்தியும் எந்த இடத்தில் ஒக்குகிறதோ அந்த அடிமைத்தனம் ஸ்தாபிதமாகிவிடும். உண்மைச் சுயாஜிய வீரர்கள், சுதந்திர புருஷர்கள் இவ்விரண்டையும் முதலில் முறிபடிக்க வேண்டும்.

ஃஃ ஃஃ

நமது முன்னேர்கள் ராஜீய முறையை நாம் இன்று கடைப்பிடிக்கிறோமில்லை. நமது ராஜீய எண்ணங்கள் எவ்வளவோ மாறுபாடடைந்து விட்டன. நமது சுற்சாரு லெளகீக வாழ்க்கைக்கும், நமது முன்னோர்கள் வாழ்க்கைக்கும் ஒற்றுமைகாண முடியவே முடியாது. நமது தத்துவாசாத்தகள் எண்ணங்கள், சாதனைகள், கட்டிடங்கள், சித்திரங்கள் எல்லாம் எவ்வளவோ மாறுபாடைந்திருக்கின்றன. இத்தனை சீர்திருத்தத்தை எற்றுக்கொண்ட மனிதர் என் அம்மிருகப் பிராயத்திருந்த முன்னோர்கள் கண்ட குருட்டு மதத்தையும், சற்பனைக்கட வுளையும் கட்டியழ வேண்டும் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

ஃஃ ஃஃ

மூடத்தனத்திலும், மௌடீகக் கொள்கைகளிலும். மூட்டாள் நம்பிக்கைகளிலும், கோவிலிலும், கடவுள் வழிபாட்டிலும், உற்சவாதிகளிலும், மதத்தைப் பரப்பும் மோசமான முயற்சிகளிலும் இத்தனைகாலமாகச் செலவழிக்கப்பட்ட பணத்தையும், நிறத்தையும், மக்கள் அறிவை வளர்ப்பதிலும், மக்களை சகல துறைகளிலும் உயர்த்திக் காண்பதிலும், உலகத்தை நாகரீகமாக்குவதிலும் செலவு செய்யப்பட்டிருந்தால், இன்றைய உலகம் இன்றைய நிலையில் இருந்திருக்குமா?

ஃஃ ஃஃ

ஒவ்வொரு கோவிலும், சர்ச்சும், மசூதியும் பள்ளிக்கூடங்களாகவும், ஒவ்வொரு புரோகிதன், சாமியார் மௌல்வி, பாதிரி ஆகியோரை பாட சாலை உபாத்தியாயர்களாகவும், மூட ச்சமயிகள் எல்லோரையும் பகுத்தறிவால் சிந்தித்துத் தெளிவோராகவும், வேதங்களையும், புராணங்களையும்

திரு. ஜை. எம். சென்குப்தா வுக்கு ஓர் பகிரங்கக் கடிதம்.

திருச்சூரில் நேரில் வழங்கப்பட்டது)

ஐயா,

இந்நாட்டுக்கு விஜயம் செய்யும் எல்லா அரசியல் தலைவர்களும் ஜாதி இந்துக்களாகவே வரவேற்கப்பட்டு, வரவேற்புப்பத்திரங்களும் வாசித்துக் கொடுக்கப்படுகின்றார்கள். இத்தேசத்திய பெரும்பாக்மை மக்களைப் பற்றிய உண்மையான விஷயங்கள் எதையும் அவர்கள் அறிந்து கொள்வதேயில்லை. அறிய முயற்சிப்பதுமில்லை. எல்லாவித போக போகியவஸ்துகளையும்—செல்வத்தாலும், அரசாங்கத்தின் ஆதரவாலும்,—அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒரு சிறிய வகுப்பாரால் நியாயிக்கப்பட்ட வரவேற்புப்பத்திரங்களைதான் தங்களுக்கு அளிக்கப்படுகின்றனவேயல்லாது, இதர ஜனப்பிரதிநிதிகளை அல்லது அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் இவ்வனல்களை விளக்கக்கூடியவைகளைக் கொண்டதோ அல்ல. அயலூர்களிலிருந்து வருபவர்கள் பெரும்பாலும் வரவேற்புப்பத்திரங்களில் காணப்படும் விஷயங்களிலிருந்து விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டியிருப்பதால், வரவேற்பு கொடுப்போர்களுக்கு விருப்பமில்லா அனேக விஷயங்கள் அவ்வரவேற்பு பத்திரங்களில் மறைக்கப்பட்டு விடுகின்றன.

கேரள தேசத்தில் வசிக்கும் "மேல் ஜாதி" இந்துக்களின் தொகை அதிகக்குறைவாகவே இருந்தபோதிலுங்கூட அவர்களால் அவர்களைவிட எத்தனையோ மடங்கு அதிகமான மக்களுக்குப்பொதுரஸ்தாக்களில நடமாடும் சுதந்திரங்கூட அளிக்கப்படுவதில்லை. எல்லாபொது ரோட்டுகளையும், குளங்களையும், கிணறுகளையும், பொதுவாக எல்லாமக்களும் தங்குதடையின்றியும், யாதொரு வித்தியாசமுமின்றியும் உபயோகித்துக்கொள்ள அனுமதிக்கப்படவேண்டுமென்று ஓர் தீர்மானத்தை கொச்சின் சட்ட சபையில் கொண்டுவந்தபொழுது இக்கே வசிக்கும் எல்லாகாங்கிரஸ் வாதிகளும் தற்காலம் திருச்சூர் பொதுஜன பிரதிநிதியான முனிசிபல் சபையின் சேர்மனையிருப்பவருமேதான் அத்தீர்மானத்தை எதிர்த்துப்போராடியவர்களென்பதை மிக்க வருத்தத்துடன் அறிவித்துக்கொள்ளுகிறேன். தாங்கள் இப்பொழுது நின்று கொண்டிருக்கும் இடத்திலிருந்து சிலகஜதூரத்துக்கப்பாலதான் திருச்சூர் முனிசிபாலிடியாரால் வெட்டப்பட்ட சில முக்கிய கிணறுகளிருக்கின்றன. ஆனால் அவைகளை முசுமதியர்களும், கிறிஸ்துவர்களும் ஜாதி இந்துக்களல்லாத அதாவது தாழ்த்தப்பட்ட இதர இந்து சமூகத்தினர்களும் உபயோகிப்பதற்கு உரிமை அளிக்கப்படாமல் திண்டாடுகிறார்கள். இம்மைதானத்திலிருந்து இன்னும் கொஞ்சதூரத்துக்கப்பால்தான் முனிசிபாலிடியாரால் வெட்டப்பட்ட சில முக்கிய குளங்களிருக்கின்றன. ஆனால் ஜாதி இந்துக்கள் என்று சொல்லப்படும் சிலரைத்தவிர எவைபோர் அவைகளின் அருகேயும் செல்லுவதற்கு உரிமையில்லை. தங்களுக்குவிருப்பக்கூடியவைகள் எந்தின்ற முறையில் நிலைகளை மட்டும்தான் உதாரணங்களாக காட்டுகின்றேன். ஆனால் இந்த கேரள தேசமுழுவதிலும், திருவாங்கூர் ராஜ்ய முழுமையுமே உள்பட இதைபோன்ற எண்ணிறந்த உதாரணங்களிருக்கின்றன. அவைகளை இங்கு குறிப்பிடுவதெனில், இடந்தாதென அஞ்சுகின்றேன்.

தங்களுக்கு எதிராகக்காணப்படும் கோவில் ஓர் இந்து கோவில் என்பதாக தங்களுக்கு அறிவிக்கப்பட்டதிலிருந்தும், தாங்கள் பார்த்தும், கேள்விப்பட்டதிலிருந்தும் அறிந்திருக்கலாம். அக்கோயில், ஜாதி இந்துக்களுடைய கோயிலாகும். அக்கோயிலில் வணக்கப்படும் தெய்வமும், அத்தெய்வத்தின் பக்தர்களும் போலவே, எனைய இந்துக்களிடம் தீண்டாமையை அனுஷ்டித்துக் கொண்டு வருகின்றது. கடவுளை நம்பும் எல்லோரும் கோயிலுக்குள்பிரவேசிக்கலாம் என யாராவது கூறத்துணிவார்களேயானால் இங்கேயுள்ள எல்லாக் காங்கிரஸ் வாதிகளின் முதங்களும் நிலைகுலைத்து அவர்களின் தலைகளும் சுற்ற ஆரம்பித்துவிடும். கேரளநாட்டிலாவது அல்லது திருவாங்கூர் ராஜ்யத்திலாவது உள்ள, தேவஸ்தம் டிபார்ட்மெண்டாரின் அதிகாரத்திலிருக்கும் புனிதமான இடம் என்று சொல்லப்பட்ட எல்லாக்கோயில்களின் குளங்கள் ஆகியவற்றின் அருகே எனைய அதாவது தாழ்த்தப்பட்ட இந்துக்கள் மற்றும் இந்துக்கள் அல்லாதார் எவரும் செல்லுவதற்கு சிறிதும் உரிமையே கிடையாது.

சற்று முன்பாகத்தான் திருநாமன் என்பவர் கோளாடு ஓர் அழகிய பூமியெனவும், அது ஓர் உற்சாகத்தை அவருக்கு அளித்திருப்பதாகவும் கூறினர். ஆனால், இவ்வழகிய பூமியில்வாழும் மக்கள் எவ்வாறு கடத்தப்படுகின்றார்கள் என்பதை சிறிது ஆராய்ந்தால், அப்பொழுது கோளாட்டைப் பற்றி சுவாமி விவேகானந்தர் உரைத்ததைதான் அதாவது 'கோளாடு ஓர்மைத்தியக்காரர் ஆஸ்பத்திரி' என்பதைத்தான் திரு நாமன் அவர்களும் கூறியிருப்பார். வரவேற்புப் பத்திரங்களை பெற்று கொள்ளுபவர்கள் எதலகைய அபிடபிராயத்துடனிருப்பவர்களாயிருந்த போதிலும் கூட, வைக்கம் சத்யாக்கிரகம் எத்தகைய காரணங்களால் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும் அதில் எவ்வளவு தூரம் போராட வேண்டி இருந்ததென்பதையும், அதுஎவ்வாறு முடிவு பெற்றது என்பதையும் நாகரீக உலகிலுள்ள மக்கள் எப்பொழுதும் மறக்க மாட்டார்கள்.

தங்கள் அரசியல் பிரசாரம் இந்நாட்டில் வெற்றி பெறவேண்டுமானால், இங்கு விஜயம் செய்பவர்கள் இந்நாட்டு மக்கள் அனுபவிக்கும் எண்ணிறந்த துன்பங்களை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். அறிந்து, அக்குறைகளை நீக்கும் மார்க்கங்களை தைரியமாய் எடுத்துச்சொல்லி உடனே அனுஷ்டிக்கும்படி முதலில் எல்லாக் காங்கிரஸ் தலைவர்களையும் கேட்டுக்கொள்ளவேண்டும். "பிரதர்ம்மை எவ்வாறு கடத்த வேண்டுமென நாம் விரும்புகின்றோமோ. அவ்வாறே நாம் அவர்களை நடத்த வேண்டும்" என்னும் ஆங்கில மொழியை மனதில் பதிய வைக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும்,

கடைசியாக, ஐயா, நான் தங்களுக்கு அறிவிப்பது யாதெனில், ஜாதி இந்துக்களல்லாத எனைய சமூகத்தினர் மேன்மையடைய விரும்பிச் செய்யும் எல்லா முயற்சிகளும், ஜாதி இந்துக்களால் புறக்கணிக்கப்படுவதால் வடக்கு நாதன் கோயிலினுட் பிரவேசிப்பதற்காக நாங்கள் இன்னும் பதினேந்து தினங்களுக்குள் சத்தியாக்கிரகம் செய்வதென உறுதியாகத்தீர்மானித்திருக்கிறோம். தங்களைப்போன்ற தலைவர்களிடமிருந்து எங்களுக்குப் போதிய உதவியும், அனுதாபமும் கிடைக்குமென நாங்கள் நம்புகின்றோம்.

சிவகெங்கை.

29-4-31 மாலை சிவகெங்கைக் கடுத்த கொட்டக்குடி கிராமத்தில் சிவகெங்கை தைத்தொழில் கல்வி நிலைய ஆதரவின்கீழ் இராமனாதபுரம் ஜில்லா மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியின் தலைவர் உயர்திரு. எஸ். இராமச்சந்திரன் பி. ஏ., பி. எல், அவர்கள் தலைமையில், ஆதிதிராவிடர்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. கூட்டத்திற்கு ஏராளமான ஆதிதிராவிடர்களும், பிராமணரல்லாதார்களும் விஜயம் செய்திருந்தார்கள். பல அறிஞர்கள் சமூக சீர்திருத்த விஷயமாக சொற்பொழிவாற்றியதும், "கொட்டக்குடியில் ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடமும், ஓர் கிணறும் ஸ்தாபித்தவேண்டுமென இக்கூட்டம் சிவகெங்கைத் தாலூகா போர்டைக் கேட்டுக்கொள்ளுகிறது" என ஒரு தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்ததென ஓர் நிருபர் எழுதுகிறார்.

அசிதிம் காலித்தில், இயற்கை சாஸ்திரம், தொழிற் கல்வி, விஞ்ஞான சாஸ்திரம், இயந்திர சாஸ்திரம ஆகியவற்றை அச்சடிப்பதற்காகவும் மாற்றப்பட்டால், இவ்வுலகம் எவ்வளவு விரைவில் முன்னேற்றமடையும் என்பதை ஏப்போது யார் சிந்திக்கப் போகின்றார்கள்?

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மோகத்தால் ராமனைக் காட்டிற்குப் போகச் செய்த தாய் தந்தையர்களின் நீதியை ராமன் கைகொண்டதுபோல் விபூஷணனும் காட்டிற்குத் தவம் செய்யப்போவதுதானே ஒழுங்கு. கந்தபுராணக் கதையில் சூரபத்மனின் மகன் இரணியன் என்பவன் தந்தைக்கு தேவர்களை விட்டுவிடச் சொன்னான். சூரபத்மன் கேட்கவில்லை. காட்டிற்குத் தவசுக்குப் போ போய்விட்டான். நான் இராஜாவான அண்ணன் இராவணனுக்குச் சீதையை விட்டுவிடும்படியான நியாயங்களை பெல்லாம் சொன்னேன் அவன் கேட்கவில்லை. அண்ணனும் ராஜாவுமான இராவணனுடைய சோத்தை உண்டு வளர்ந்த தம்பிகளுக்கு உயிரைக் கொடுப்பதே கடமையாகுமென்று கும்பகர்ணனும் விபூஷணனிடம் சொன்னான். அதை விபூஷணன் கேட்டு குலத்துமானம் கும்பகர்ணனுக்குத் தீரவில்லை என்றான் இராமனிடம். குலத்துமானமும், சகோதரர்கள் துரோகமும் செய்தவர்களே ஆள்வார்களாகச் கும்பிடும் இராமயணக்கதையினால்தான் எல்லா மாணமும்விட்டு பலகாலமாக தங்கள் காரியங்களுக்கு அண்ணிய சத்துருக்களிடம் சேர்ந்து நமது நாட்டையும், நமது சமூகத்தையும் அண்ணியருக்குக்காட்டிக்கொடுத்தோம். அண்ணியர் படையெடுப்பில் இந்தியா தோற்றதற்கெல்லாம் காரணம் அண்ணிபரிடம் சேர்ந்து நன் குலத்தைக் காட்டிக்கொடுத்தவர்களே மூல புருஷர்கள்.

சீதையைச் சிறை எடுத்துவந்த அண்ணன் இராவணனிடம் குற்றம் கண்ட நீதிகொனை விபூஷணன் வீருத்திராசூரனைக் கொன்று அவன் பெண்ஜாதியைக் கற்பழித்த விஷ்ணுவிடம் சேரலாமோ?

ஒரு பார்ப்பான் நீதியென்பான். இன்னொருவன் நமக்குபதேசிப்பான், மற்றொரு பார்ப்பான் தேசியமென்பான். பின்னொருவன் தேசமென்பான். யெல்லாரும் ஒன்றென்பான். பிறெரு பார்ப்பான் சனாதனதருமமென்பான். வேறு ஒரு பார்ப்பான் எல்லாம் மாயை, உலகமே அனித்தியம் என்பான். கனம் சி. பி. ராமசாமி அய்யரைப்போன்ற பார்ப்பார்கள் பார்ப்பாரல்லாதவர்கள் அடைந்திருக்கும் ஒருசிறு உத்தியோகங்களையும் உங்களுக்குத் தராமல்செய்ய கிம்லாவில் சுற்றுகிறார். அவருக்கு இந்தியா ராஜாங்கத்தில் சட்டமெம்பர் உத்தியோகம் வந்துவிடுவதாக வதந்தியும் கட்டிவிடுவார்கள். வந்தாலும் வந்துவிடும். கனம் பனகால் அரசரோ இல்லை. மீதமுன்ன நம்மவர்களோ தண்னைக்காப்பாற்றிக்கொள்ள அடிமை புகுந்தாலும் புகுவார்கள். உங்கள் தேசியமும் சுயராஜியமும் உங்கள்கூட விருக்கட்டும். அதுகூட நீங்கள் போய்விடாதீர்கள். தூண்டிலுக்கு மேல் இரை. இரைக்குன் தூண்டில். அசுரர்களும் தேவதர்களும் அமிர்தம் கடைந்தார்களாம். கார்க்கோடனின் தலைப்பக்கம் பிடித்தவர்கள் அசுரர்கள் அமிர்தம் உண்டவர்கள் தேவர்கள். அசுரர்களை எமாற்றித் தேவர்களை அமிர்தம் உண்ணச் செய்தவர் விஷ்ணு. எந்தப்புராணத்திலும், இடத்திலும் மோசம் செய்ய விஷ்ணு பார்ப்பார வேஷமாகத்தான் வந்ததாக கதைகளெல்லாமிருக்கின்றன. அந்தக்கலகளிலே ஊறிவளர்ந்தவர்கள் அந்த நீதி சாரத்தைத்தான் ஆசிரியர் எஸ். வி. வரதராஜ அய்யங்கார் உபதேசிக்கிறார். இத்தனைவித பார்ப்பனர்களும் சக்கரீவன் விபூஷணனைப்போல் கட்டித் தழுவிக் கொள்ளுவார்கள். சமயம் அவர்களுக்குத் தெரியும். அதற்கு ஜாடையுண்டு. நீங்களும் ஒன்றுய் சேர்ந்து கொள்ளுங்கள்.

ராகுதனும் குரங்குமே ஒன்றுய் கட்டிதழுவி நட்புக் கொள்ளும் நீதிக்குள் மனிதன் எத்தனை காலமாகப் பழகினாலும் தொட்டால் தீட்டு பட்டுவிடுமென்னும் நீதி இருக்கிறதே. இது எந்த அசத்துக்களால் உண்டாக்கப்பட்டு தனுஷ்கோடானத்தினை கொண்டு வரப்பட்டு தனுஷ்கோடித்து வரும் ஆரிய அய்யங்காரை பக்கத்திலிருப்பவர்கள் கேளுங்கள்.

P. M. சித்தர் மார்பாசி

எல்லா நோய்களுக்கும் மருந்துகளிருக்கின்றன. கேட்டால் தீரும்.

விஷமை, விஷநோய் எதுவானாலும் சரி 3 நாளில் தீரும்.

Dr. P. M.

சங்கரலிங்கம் பிள்ளை,

சோளிற்பட்டி, S. I. R.

நிமிஷக்கணக்கில் தணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

அதிரகசணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்திலுல் தூரைமீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கடுத்தசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் காயிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது அஸ்தமா பெனடா உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றுய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியதின் 1க்கு 1-4-0. தபால் கூலி அனு. 4.

புரொப்ரைட்டர், திருநாவக்கரசு மெடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெருவு, செல்வாய்ப்பேட்டை, சேலம். 5. I

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.

K. S. மேதா & Co., 234, சைனபஜார் ரோட் மதராஸ்.

வெள்ளச்சாமி, No. 300, ரோங்கூன் ரோட், சிங்கப்பூர்.

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்சினீரிங் ஓர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை.

அதிசயமான இரகசியங்கள்!

நீங்கள் இதுகரையில் கண்டிராத இரகசியங்கள் ஆச்சரியப்படும்படியான உண்மைகள் அடங்கிய புஸ்தகம் இலவசமாக அனுப்புகிறோம். இப்புத்தகத்தில் கெய்போலடன் டானிக் மருந்தை வாங்கிச்சாப்பிட்டுச் சுகமடைந்தவர்கள் புகழ்ந்து எழுதியிருக்கிற நற்சாட்சிக்கடிதங்களை வாசித்து அதிசயப்படுவீர்கள். தாதுபுஷ்டி மருந்துகளுக்கெல்லாம் அரசன்.

"கெய்போ ரானடான்"

தாது புஷ்டிக்கும் கைகண்டது. வெள்ளை, மூலச்சூடு, மேகக்காங்கை, வாய்ப்புண், உஷ்ண வியாதிகள் தீரும். மலச்சிக்கல், வாய்வுகள், வயிற்றுவலி, கூயம், இருமல், சுவாசகாசம், ஈரல்நீர் வியாதிகள், வாதநோய்கள் நீங்கும். இரத்த சுத்தி, இரத்த விருத்தி, தேக புஷ்டி, பலம் அழகு தேகக்குளிர்ச்சி தரும். பத்தியமில்லை. பூர்ண சுகத்திற்கு ஒரு புட்டி போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1க்கு விலை ரூ. 5—0—0. தபால் செலவு வேறு.

விலாசம் அந்தி விலாசம்: சித்தர் மதுரை

ஆர். எஸ். பதி அண்டு கோ., (ரிஜிஸ்டர்ட்)

ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோவில் மேலக்கோபுரம் உட்புறம்,

டிப்போ நெ. 5, மதுரை.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது
கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு, ... 0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமணாகாட்டு
சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சுயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீசைஎ அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
ஞானசூரியன் ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ... 0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—2—0
*குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—2—0
* சிதம்பர ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் 50படங்களுடன் 200 பகங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக மட்டும் அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி.கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதி பாவது முன்பணம் அனுப்பி, ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.
*ராஜாத்தனம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.
*கான்மாபாலிட்டன் ஸ்டோர்ஸ்
விருதுநகர்.
*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை,
ஸிசேட்காட்டன் ரோடு,
தூத்துக்குடி.
*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாக்ஷிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.
T. சேதுராயபடி
சித்திரக்காரத் தெரு,
மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.
வி. கண்ணன்,
சிமை எரு டிபோ,
காஞ்சிவரம்.
A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.
*T. சுப்ரமணியபிள்ளை,
17 பாரிஸ் வெங்கடாசல
அய்யர் தெரு
சென்னை.
A. R. M. சுந்தர பாண்டியன்
கடைவீதி,
அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.
*B. தங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.
ஹாஜி முகமது ஷேக்உசேன்,
57. சண்ணும்புக்காரத்தெரு,
காரைக்கால்.
*M. ரத்னம்,
ஸிரோஸினியில் டிபோ,
நெல்லிக்குப்பம்.
K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குரிச்சி.
C. S. ஜோசப்
159 கேவன்ரி ரோடு,
பெங்களூர் Cant.
S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
தாரையூர்.
முத்துசாமி
நாடார் ஸ்டோர்ஸ்,
பொறையார்.
P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலையப்பநகர், வில்லிவாக்கம்,
கொளம்பு.
A. S. பரமசிவம்
34. காசிக் ஹவுஸ்
டிபுல்ஸிஸ் ரோடு
ஹேவ்லக் டவுன்
கொளம்பு.
எட்வர்ட்பால்
திருமலாபுரம்.
செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.
S. அப்பாதுரை
மண்டி, ராஜபுரம்.
M. N. M. பாஷா
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

* இந்த புள்ளியுள்ள மிலாசதார்களிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.
G. R. கணேசர் & Co.,
10|1 Cecil St.
Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.
India Novel depot
73, Serangoon Road.
கோலாலம்பூர்.
Visvanath Book depot,
9, Brickfield Rd.
R. S. Naidu,
66, Ampang St.
O. M. Ali Saiboo & Co,
27, Java Street
The Selanger Stamp Co.,
Market Street.
S. S. Abdulkadir,
South Indian Boookstere,
122, Pitty street, penang.
South Indian Trading Co,
Ipoh. Perok F. M. S.
Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.
The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.
C. Kandiah,
85, Sultan street, Klang.
S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M. S.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
இதன்வருடசந்தா ரூ. 4—0—0
அல்லது $. 2,25

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: S. குருசாமி B.A.
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமநாதபுரம் ஜில்லா

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்.

100 வேளை தாம்பர பற்பங்கள் சாப்பிட்டும் தீராத குஷ்ட மெல்லாம் தீர்ந்து குணமாகி விட்டதென்று ஏராளமான நற்சாட்சிகள் வந்துகொண்டிருக்கின்றன.

சித்தாதியைலை

குஷ்டம், குறைநோய், குழிப்புண், கண்டமாலை, விஷ குஷ்டம், நீர் வடிதல், தோல் உரிதல், மூக்கடைப்பு, மூக்குப்பள்ளம், செம்மேகப் பற்றுகள், தடிப்பு, வீக்கம், சொரி, வெண் குஷ்டம், கருமேக ஊரல், கருங்குஷ்டம், இரத்தி, சூலை, முடக்கு, குன்மம் முதலிய வியாதிகள் கண்டிப்பாய் தீரும். பத்தயம்போட்டு பரீக்ஷிக்கக்கூடியது. இதற்கு மேலானமருந்தே பார்க்கமுடியாது. 1 புட்டி ரூ. 5-8-0 அனுபானம் ரூ. 1-8-0 ஆக ரூ. 7.

விலாசம்:—கே. எஸ். பதி. வைத்தியசாலை பழனி, S1 Ry

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பேற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், இரேகம் அழுகி துர்நாற்றமூடையவர்கள், ஆணிப்புண்கள், ரோணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. எழைகளுக்குப் பாதிவிலை. பிரபுக்களுக்கு ரேட் வேறு.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள்

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும் பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், சத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியூட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டதிருமதி காகம்மாளால் வெளியிடப்பட்டது.